Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 16/50
දිනමුරසු වාරමලර් நவ. 18 - 24, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 589



## ஜனாதிபதியின் இந்திய விஜயம் பின்னணி என்ன?

## பரிசு தரும் போட்டி உள்ளே...

## வன்னியில் என்ன பேசினார்கள்?

## முதல் பெண் தோழி

# இந்து மதத் தத்துவங்கள்

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சமயம் இந்து சமயம். உலகிலேயே பழைமையான மிகவும் இனிமையான மொழி தமிழ் மொழி. இதைத் தெய்வங்களே ஆரம்பித்து வைத்து இடையிடையே அதைத் தோன்றாத் துணையாக நின்று வளர்த்துள்ளன. தெய்வீகத் தன்மையோடு விளங்கும் அர்த்தமுள்ள இந்து மதம் தந்த தத்துவங்களும் பொய்த்ததில்லை. ஆகவே, அது போதிக்கும் தத்துவம் மிக மிகப் புனிதமும் உண்மையும் நிறைந்த பொக்கிஷமாகும். கொலை செய்தவன் கொல்லப்படுவான். துரோகம் செய்தவன் துரோகத்துக்கு உட்படுவான். பாவம் செய்தவன் பாவத்துக்குட்படுவான். ஏமாற்றுபவன் ஏமாற்றப்படுவான். அவமானம் செய்பவன் அவமானத்துக்கு ஆளாவான். இதுவே நமக்கு கர்மத்தின் சட்டம் Law of Karma போதிக்கும் உண்மை.

இந்து தர்மம் உணர்த்தும் வாய்மை நெறி இது; தவறாது. இவ்வுண்மைகள் பற்றிய பல புராண நூல்கள் வாயிலாகக் கூறப்படும் தத்துவார்த்தக் கதைகள் தக்க சான்றான பாடங்கள். ஆகவே, கூடுமானவரை நன்மை செய்யாவிடினும்கூட தீமை செய்யாது வாழ்வோமாக.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# ஆன்மீகம்



## இரட்சிக்கும் கரம்!

"ஆண்டவரே! என்னை இரட்சியும்" மத்தேயு-14:30

கர்த்தராகிய இயேசுவின் கட்டளைப்படி பேதுரு கடலில் நடந்து சென்றுகொண்டிருந்த போது காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து அமிழும்போது, "ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிடுகிறார். வேதப் புத்தகத்திலே காணப்படுகிற மிகச் சிறிய ஜெபத்தை இங்கே பார்க்கிறோம். சகோதரனே, சகோதரியே நாமும் அப்படித்தான். கர்த்தர் கூறிய வழிகளில்தான் நடக்கிறோம். ஆனாலும் புயல் வந்தவுடனே பயந்து விடுகிறோம். வாழ்க்கை நன்றாக நடக்கிறது. புயல் வந்தவுடனே கலங்கி விடுகிறோம். நன்றாக இருந்த என் குடும்பத்தில் புயல் வீசுகிறதே நன்றாக நடந்த வியாபாரத்தில் புயல் வீசுகிறதே. மனம் கலங்கிப்போகின்றது. என்ன செய்வது என்று புரியாத நிலைமை. ஜீவனுக்கும் மரணத்துக்கும் இடையில் நிற்கிறோம். அன்றைக்கு பேதுரு கடல் ஜலத்திலே அமிழ்ந்து போகையில், "ஆண்டவரே! என்னை இரட்சியும்" என்று கூப்பிட்டதைப் போல நமக்கும் கூப்பிடும் உரிமை உண்டு. ஜீவனுக்கும் மரணத்துக்கும் இடையில் எமது வாழ்க்கைச் சூழ்நிலைகள் அமையும் போது, பேதுருவை பற்றித் தூக்கின கரம், இரட்சிக்கும் வல்லமையான கரம் - சகோதரனே, சகோதரியே உன்னையும் பற்றித் தூக்கும். நீ ஒரே ஒரு காரியத்தைச் செய்துவிடு. "ஆண்டவரே என்னை இரட்சியும், இந்த வியாதியில் இருந்து இரட்சியும், இந்தப் பிரச்சினையில் இருந்து இரட்சியும்" என்று முழு மனதோடு கூப்பிடு. அற்புதங்களைச் செய்கிற தேவனின் கரம் உன்னைப் பற்றித் தூக்கிக்கொள்ளும். ஆமென்.

-போல் ஜோன், தெல்தெனிய.

## தொழுகை – உரையாடுதல்

இஸ்லாம் ஐந்து தூண்களைக் கொண்டது. அதில் தொழுகை என்பது இரண்டாவது தூணாகும். தொழுகை என்பது அல்லாஹ்விடம் உரையாடுதலேயாகும். அது மறதியுடன் நிகழவே முடியாது.

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டவர்களே, அல்லாஹ்வின் மஸ்ஜித்களை செழிப்பாக்கி வைப்பார்கள். 9:18.

நிச்சயமாக தொழுகை மானக்கேடான காரியங்களையும், வெறுக்கத்தக்க செயல்களையும் தடுக்கின்றது. 29:45.

மேலும்! அவர்கள் தங்களின் தொழுகையைப் பேணிப் பாதுகாத்து வருவார்கள். அத்தகையோரே சுவனத்தில் கண்ணியப்படுத்தப் படுவார்கள். 70:34,35.

தங்களின் தொழுகையில் உள் அச்சத்துடன் இருக்கும் மு:. மின்கள் வெற்றியடைந்து விட்டார்கள். 23:1,2.

எனவே, மேலான தொழுகையைப் பேணித் தொழுது வருபவர்களாக மாறுவோமாக!

-நஸீன் நஸ்மின், நஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.586




பரிசுக்குரிய கவிதை

### தொலைவான தூக்கம்!

பட்டு மெத்தையில்
பன்னீர் தெளித்து
படுத்துப் புரண்ட
போதெல்லாம்
தொலைவாகிப் போன......
தூக்கம்
தட்டாந் தரையில்
மட்டும்
தழுவிக் கொள்ளும்
நியதி புரியாத
நித்திரையோ....!

-சிவனு மனோஹரன், ஹட்டன்

# கவிதைப் போட்டி இல.589



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 24.11.2004

கவிதைப் போட்டி இல.589
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### யார் பொறுப்பு?

இனி என்னையும்
என்னுள்ளேயும் வெளியேயும்
வளரும் இரு குழந்தைகளையும்
பராமரிக்கப்போவது
என்னவரைப்
படுகொலை செய்தவர்களா?
செய்யவில்லையென்று
சொல்பவர்களா?

-அ.சந்தியாகோ, கண்டி.

### கொலைக்கொரு நியாயம்!

அமைதியைத்
தேடி
அலைந்த இவர்கள்
இப்போது
அமைதியாய்...!!

-எம்.ஞானராஜ், மன்னார்.

### காலமில்லை!

தேர்தல்
காலங்கள்
இருப்பதுவோ
தூரத்தில்.-
அதனால்தான் -
இன்று
கிடக்கிறாள் -
இவள்
சாலை ஓரத்தில்.

-கே.கே.டீன், ஏறாவூர் – 03.

### உயிருக்கு உலை

பெண்ணே!
தூக்கத்தில் நிம்மதியென்று
துயில் கொள்ளாதே!
உறக்கத்திலும்
உயிருக்கு உலை
வைப்பார்கள்.

-எம்.சி.கலீல், கல்முனை – 05.

### அனாதை!

யுத்தமென்று
சொந்த இடத்தையும்
சொந்தங்களையும்
பறிகொடுத்தேன்.
சமாதானமென்றார்கள்
என் உறவுக்குச்
சாட்சியாக
இருந்த ஒரே
மகனையும்
இப்போது
கொன்றுவிட்டார்கள்!

-ஏ.எப்.எம்.றியாட், முள்ளிப்பொத்தானை.

### இடம் தேடி

உடைமைகள் அழிக்கப்பட்டு
உரிமைகள் பறிக்கப்பட்டதால் -
இன்று
வீதிக்கு வந்து விட்டாளோ?
இப்படியே போனால் இன்னும்
சில நாளில் தங்குமிடம்
சுடுகாடுதானோ?

-எம்.நதார், திருமலை.

### எதிர்கால இலங்கை

பொருளாதாரம் சரிந்து கிடக்க
விலைவாசி மட்டும்
ஏறிக்கொண்டே போகிறது.
எதிர்கால இலங்கை வறுமைக்கும்
பட்டினிக்கும்
பேர்போன இன்னுமொரு
உகண்டாவாகவோ
சோமாலியாகவோ மாறிக்கொண்டு
வரும்
அவலச் சரித்திரம் கண்முன்
காட்சிகளாக
நிழலாடுகின்றன.

-வி.சந்திரபிரசாத், மல்லாகம்.

### இன்னும் தொடரும்....

கணவனையும்,
சொத்தையும்
கொன்றது யுத்தம்!
அம்மாவையும், மகளையும்
கொல்கின்றது விலைவாசி!
இன்னும் ஏன் தொடர்கிறது?
எத்தனை பேர்களின்
கண்ணீரை மல்க
வைக்க.....

-ஜதுபர்தீன் றழியுதீன், வவுனியா.

### எங்கே வாக்குறுதி?

வீடமைப்புத் திட்டங்கள்,
தேர்தல்,
விஞ்ஞாபனங்கள்.
ஆனாலும் - இன்றுவரை
இவளுக்கு! - குடியிருக்க
இல்லையே ஒரு வீடு!!

-ஏ.எம்.அல்.அப்ஸர், ஏறாவூர் – 03.

### விடியாத இரவுகள்!

வாக்குப் போட்டு நான்
அனுப்பிய தலைவர்
சொர்க்கபுரி மஞ்சத்தில்
சொகுசாகத்
தூங்குகின்றார்.
வாக்குப் போட்ட நான்
வாழக் குடிலின்றி
தெருவிலே விடு
காலி நாய் போல
விடியும் வரை இப்
பிஞ்சுடன் கிடக்கின்றேன்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

# உங்கள் பக்கம்

## வடமேல் மாகாண போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்கு........

புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளி - கடயாமோட்டை - உடப்பு ஆகிய கிராமங்களினூடாகச் செல்லும் முக்கிய வீதி சில வருடங்களாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகவும், தூசு நிறைந்தும் காணப்படுகிறது. இவ் வீதியில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களால் அவதிப்படுகின்றனர். இவ் வீதியால் வாகனங்கள் செல்லும்போது வெய்யில் காலமானால் - தூசு, புகை மண்டலமாகக் கிளம்பி வீதியில் செல்வோரையும், வீதியோரத்தில உள்ள வீடுகளையும் கடைகளையும் மூடிவிடுகின்றது. இதனால் மக்களுக்கு நோய் ஏற்படக் காரணமாகின்றது. மழைகாலமானால் குன்று, குழிகளிலே வெள்ளமும், சேறும், சகதியும் நிறைந்து காணப்படுவதால் வாகனங்களும் செல்லமுடியாது; மக்கள் நடந்தும் செல்லமுடியாது. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் சீருடைகளும், ஆசிரியர்களுர், வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் ஆகியோரின் உடைகளும் அழுக்காகி விடுகின்றன. உரிய நேரத்தில் எந்தக் கருமத்துக்கும் செல்ல முடியாத அவல நிலை ஏற்படுகின்றது. அத்துடன் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி ஆகியவை விபத்துக்குள்ளாகின்றன.

வீதியோரங்களில் இருக்கும் வீடுகள், கடைகள் என்பன தூசிகளால் மூடப்பட்டு வருகின்றன. தூரத்திலிருக்கும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், உரிய நேரத்தில் பஸ் வராமையினால் பாடசாலைக்குப் போகும்போதும், வரும்போதும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வீதி செப்பனிடப்படாததால் அண்மைக் காலமாக உடப்பு பஸ் நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது சேவையில் இருக்கும் பஸ்களும் இடை நடுவில் நிறுத்தப்படவும் கூடும். இப்படியாகத் தொடர்ந்து இருக்குமேயானால் மக்கள் மேலும் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். ஆதலால் இவ் வீதியை சரியான முறையில் புனரமைத்துத் தந்தால் நோய்களிலிருந்தும், ஆபத்திலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும். போக்குவரத்தும் இலகுவாக இருக்கும். இவ் வீதியைப் புனரமைத்து இந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதோடு போக்குவரத்தையும் சீர்செய்து தருமாறு மேல் மாகாண போக்குவரத்து அமைச்சரையும் பொறுப்பான அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

-நஸீன் நஸ்மின், நஹ்மத்புரம்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk





### அன்பான முரசே!

உலகெங்கும் அசைந்து
வரும் என் இனிய
தினமுரசுக்கு முதல்
வணக்கம். நீ சுமந்து
வரும் அத்தனை
அம்சங்களும்
அருமையிலும் அருமை.
அதிலும் கவிதைத்
துளிகள் என்னை மிகவும்
கவர்ந்துள்ளன.
தொடர்ந்தும் பல இனிய
சுவையான அம்சங்களைத்
தந்து எம்மை மகிழ்விக்க
என் வாழ்த்துக்கள்.

-செல்லத்துரை ரவி, மகாறம்பைக்குளம்.

# வாசக[ர்] சாலை



## முரசுக்காரரை அலாக்காய்த் தூக்க நமக்காசை!..........

587 முரசின் பின் அட்டையில்,
"கெட்டியாகப் பிடிச்சுக்கோ!"
தலைப்பில்
பலே கில்லாடியான "பலமான
தாடிக்கார
ஆசாமி"யின் சாதனைச் சேதியும்
கூடவே "பலமான படமும்" தூள்!
அதை
நமக்குத் தந்த "முரசுக்காரரை
அப்படியே
அலாக்காய்த் தூக்க நமக்காசை!"
யாரது பாப்பா முரசில் அழகான +
அருமையான + இனிமையான +
வித்தியாசமான
சிறுவர் கவிதைகள்
ஓவியமாக்குவது?
பெயர் சொன்னாலென்ன குறைந்தா
போய்விடும்?...
"பணப்பரிசு! பணப்பரிசு!....?" என்று
வாசகர் நம் ஆசையையும்,
அதிகபட்ச
ஆவலையும் தூண்டிவிட்டு
தொடர்ந்து
ஏமாற்றுவது (ஏங்கவைப்பது)
நியாயந்தானா?!
முரசின் போட்டிகளுக்கான
'காலக்கெடு'
போதாது! கடிதப் போக்குவரத்து +
தாமதம்
(ஏன் முரசே! சில சமயம் தாமதம்!)
பற்றியும் எம்மை விடவும் இன்னும்
தூரத்தே இருப்பவர் பற்றியும்
கவனிக்கவும். நன்றி !

-முத்துமணி, பதுளை.

## எவ்வகையிலும் சளைக்காத முரசே!

பல எதிர்ப்புக்கள்
மத்தியில்
தொடர்ந்தும் உன்
பணி இனிமையாகத்
தொடர்கிறது. பல
செய்திகள்
மட்டுமல்ல, வியக்க
வைக்கும்
தகவல்களும் எம்மை
வந்தடையச்
செய்கிறாய்! உன்
அயராத சேவை
மக்களுக்குத் தொடர
என் வாழ்த்துக்கள்.

-எஸ்.சங்கர், மயூராபதி.

# இடைக்காலமும் இறுதியும் இப்போதைக்கு இல்லை: இடைநடுவில் மத்தியஸ்த யோசனை புலிகள் சமர்ப்பிப்பு

இடைக்காலத் தீர்வா? இறுதித் தீர்வா? என்று சுமார் பதினெட்டு மாதங்களுக்கு மேலாக இழுபறிப்பட்டு வந்த அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை, ஒரு புதிய மத்தியஸ்த யோசனையின் அடிப்படையில் மீள ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுவதாகக் கொழும்பு பல்கலைக் கழகச் சட்டத்துறைப் போராசிரியரொருவர் குறிப்பிட்டார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுச் சேவைகள் சம்பந்தமாக அமைக்கப்பட்ட உபகுழு (சிரான்) சரியாக இயங்கவில்லையென்று காரணம் காட்டி புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை மேசையை விட்டு விலகியிருந்தமை குறிப்பிடத் தக்கது. எனினும், இப்போது அரசும் புலிகளும் நெகிழ்ச்சித் தன்மையோடு பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய நிலைமை தென்படு வதாகத் தனது பெயரை குறிப்பிட வேண்டா மெனக் கேட்டுக்கொண்ட அந்தத் தமிழரான போராசிரியர் குறிப்பிட்டார். புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை வார்த்தைக்கு வார்த்தை ஏற்றுக்கொள்ளவோ அமுல்படுத்தவோ தேவையில்லையென்று பிரபாகரன் வன்னியில் தன்னைச் சந்தித்துப் பேசிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சனிடம் கூறியிருந்தாரென்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கும் கடந்த 13ஆம் திகதி இலங்கையில் சமாதானம் என்ற இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டியில், புலிகள் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவார் களென்று தான் நம்புவதாகத் தெரிவித்திருந்தார். ஒரு வேளை புலிகள் சமர்ப்பித்திருக்கும் புதிய யோசனைகளில் சாதகமான அம்சங்கள் இருக்கலாமென்றும் அப் பேராசிரியர் குறிப்பிட்டார். புலிகள் கூட தமிழ் மக்களின் தேவைகள் குறித்து ஓரளவாவது உணர்ந்திருப்பார்களென்று நம்புகிறேன் எனவே நிலைமைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. திரு. பிரபாகரனின் தனிப்பட்ட ஆளுமை மாறலாமென்று நான் நினைக்கிறேன். ஒரு அரசியல் விஞ்ஞானி என்ற வகையில் உலகிலுள்ள இவ்வாறான தனிநபர்களின் ஆளுமைகள் பற்றி நான் ஆராய்ந்துள்ளேன். எனினும், பிரபாகரனிட மிருந்து நான் பெருமளவு மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால், நிலைமைகள் மாறுகின்றன; ஏனையவர்கள் மாறுகின்றனர்; சூழ்நிலைகளும் அரசியல் தன்மைகளும் மாற்றமடைகின்றன. ஏதோ ஒரு மாற்றம் ஏற்படுமென்று நம்புகிறேன்" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். இதற்காக பிரபாகரனின் மாவீரர் தின உரையைத் தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்

## சூசை விவகாரம் சுமுகமாகத் தீர்வு

புலிகள் இயக்கத்துக்குள் நெருக்கடியாக உருவெடுத்த சூசை விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் வன்னிக்கு அழைக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து சூசை போர்க்கொடி தூக்கியிருந்தார். சூசையின் சொந்தச் சகோதரியை ரமேஷ் திருமணம் புரிந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. ரமேஷ் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் அத் தகவல்கள் தெரிவித்தன. கருணா விவகாரத்தைக் கண்மூடித்தனமாகக் கையாண்டதால் கிழக்கில் பெரும் சக்தி இழக்கப்பட்டுவிட்டது. அவ்வாறானதொரு நிலை சூசை விவகாரத்திலும் ஏற்படுவது இப்போதைய சூழலில் நல்லதல்லவென்று உயர்மட்டப் புலித் தலைவர்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## 'கோயபல்ஸ்' பாணிப் பிரசாரமென்கிறார் அமைச்சர் டக்ளஸ்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் அந்த இயக்கத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகச் சில தமிழ் ஊடகங்களில் வெளியான செய்திகளை 'கோயபல்ஸ்' பாணியிலான அப்பட்டமான பொய்யென்று அக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

"முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி. வி.கே.ஜெகன், 'தினமுரசு' ஆசிரியர் ரி.பாஸ்கரன் மற்றும் நிஷாந்தன் ஆகியோர் கட்சியின் உள்முரண்பாட்டு மோதல்களால் விலகிச் சென்றனரென இந்த ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன. ஈ.பி.டி.பி.க்குள் ஏற்பட்ட கருத்து மோதல்கள் காரணமாக அதன் ஊடகப் பேச்சாளர் சின்னபாலா மற்றும் பல முக்கியஸ்தர்கள் எமது தோழர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டனரென்று இந்த ஊடகங்கள் அப்பட்டமான பொய்களை வெளியிட்டிருந்தன. எமது கட்சி ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பிய கட்சி. தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக இன்னமும் ஜனநாயக வழியில் போராடும் கட்சி. எமது இயக்கத்தை வழி நடத்துவது துப்பாக்கிகளல்ல. அரசியல் கருத்துக்கள் எமக்கு திசை மார்க்கம் காட்டுகின்றன. எமது கட்சிக்குள் ஜனநாயகமும் உண்டு. மத்தியஸ்தமும் உண்டு. புலிகள் இயக்கத்தைப் போல் துப்பாக்கிகளால் ஆளப்படும் கட்சிக் காரரல்ல நாம். ஒரு தலைவனின் கருத்துக்குத் தாழ் பணிந்து துதிபாடும் தன்மை எமது இயக்கத்தில் இல்லை" என்று அமைச்சர் தேவானந்தா கூறினார்.

"அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், தங்கத்துரை, சரோஜினி யோகேஸ்வரன் உட்பட பல முக்கிய தலைவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டுப் பழியை மற்றவர்கள் மீது போட்டவர்கள் யாரென்று தமிழ் மக்களுக்குத் தெரியும்" என்றும் அவர் சொன்னார். 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற புஸ்பராஜாவின் நூல் வெளியீட்டுவிழா லண்டனில் நடைபெற்றபோது, திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆற்றிய உரையை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார் அமைச்சர். திருமதி அமிர்தலிங்கம் கூறியது வருமாறு:

"எனது கணவரைப் புலிகள் கொன்றார்கள். ஏன் கொன்றார்களென்று இன்றுவரை சொல்லவில்லை. அவர் செய்த துரோகம் என்னவென்று தம்பி பிரபாகரனைக் கேட்கிறேன். எனது வீட்டுக்கு வந்து எத்தனை தடவைகள் எனது கைகளால் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டிருப்பீர்கள். எனது கணவரைக் கொல்ல உங்களுக்கு எப்படி மனம் வந்தது?" என்று கேள்வி எழுப்பினார் மங்கையற்கரசி. இருந்தும் இன்றுவரை அமிரைக் கொலை செய்தது யாரென்று அவர்கள் உரிமை கோரவில்லை. நல்ல வேளை. டக்ளஸ்தான் கொன்றாரென்று ஏனோ அவர்களால் சொல்ல முடியவில்லை என்றார் அமைச்சர்.

## பலாலி விமானத் தள திருத்த வேலைகள்

விமானத்தள புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் முக்கிய ஓர் அங்கமாக இது சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. பலாலி விமானத்தளம் புனரமைக்கப்பட்டதும் இந்திய விமானங்கள் மட்டுமே வந்துபோக வேண்டுமென்றும் இலங்கைப் படையினர் பயன்படுத்தக் கூடாதென்றும் இந்தியா நிபந்தனை விதித்திருப்பதாக அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்த யோசனையை இலங்கை நிராகரித்ததெனவும் அப் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. இது குறித்துக் கொழும்பிலுள்ள அரசாங்க சமாதான செயலக அதிகாரியொருவரிடம் வினவியபோது, அவர் அது பொய்ப் பிரசாரமென்று குறிப்பிட்டார்.

## புலி சார்ந்த ஊடகங்களின் விஷமப் பிரசாரங்கள்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பற்றியும், அதன் உறுப்பினர்கள் தொடர்பாகவும் சில ஊடகங்களில், புலி சார்ந்த ஊடகவியலாளர்கள் உண்மைக்குப் புறம்பான தமது கற்பனைக் கதைகளைப் பிரசுரம் செய்து வருவது எமக்கு ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் நம்பிக்கை கொண்டு, அரசியலுக்கு வந்தது என்பதனால் கட்சிக்குள்ளும் முழுமையான ஜனநாயக நடைமுறைகள் பேணப்பட்டு வருகிறது. இதனால் மருத்துவ சிகிச்சைக்கோ அல்லது வேறெந்தத் தேவைகளுக்கோ விடுமுறையில் செல்லும் வாய்ப்பு வசதிகள் அல்லது உரிமைகள் கீழிருந்து மேல் வரை சகல தோழர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

இவற்றுக்கும் மேலாக கட்சியிலிருந்து விலகிச் சென்று இயல்பு வாழ்க்கையில் ஈடுபடவும், அவர்கள் விரும்பும் பட்சத்தில் வெளிநாடுகளுக்குச் செல்லவும் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

கருத்து வேறுபாடு கொண்டவர்களை பங்கர்களில் போடுவதும், அவசியப்பட்டால் தீர்த்துக்கட்டிவிடுவதுமான புலிகளின் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்து போன சில ஊடகவியலாளர்களுக்கு, எமது கட்சியின் ஜனநாயக நடைமுறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை.

இன்று தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் புலிகளின் கபட நோக்கங்கள் அம்பலப்பட்டுள்ள அதே சமயம் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி மிகத் தெளிவான பார்வையில் இலங்கைத் தமிழ் பேசும் மக்களது பிரச்சனைக்கான தீர்வை முன் வைத்திருப்பதும், இலங்கைத் தமிழ் பேசும் மக்களது நலன்களை விரும்பும் நேச சக்திகள் எமது தெளிவான நிலைப்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்கியிருப்பதும், புலிகளின் ஊடகங்களுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதை எம்மால் உணர முடிகின்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி காட்டாறுகள் பல கடந்து, தடைகளை தாண்டி, சேறு பூசுதல்களைச் சந்தித்தே இத்தகைய வளர்ச்சியை அடைந்துள்ளது.

எமது வளர்ச்சியையும் தலைமையின் உறுதியான வழிநடத்தலையும் பொறுக்க முடியாத சக்திகளின் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே உண்மைக்குப் புறம்பான பொய்ப் பிரசாரங்களை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றன.

கட்சி மீதும், தலைமை மீதும் மேற்கொள்ளப்படும் இத்தகைய பிரசாரங்களை முறியடித்து கட்சி தனது இலக்கை நோக்கி - தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க - வன்முறையற்ற அரசியல், ஜனநாயக வழியில் தொடர்ந்தும் உறுதியுடன் போராடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கனடாவில் நிதி சேகரிப்பு

சர்வதேச பயங்கரவாத இயக்கங்களெனக் குறிப்பிடப்பட்ட நான்கு அமைப்புகள் கனடாவில் ஏழு கோடி டொலர்களைத் திரட்டியுள்ளதாக அந்த நாட்டின் புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது. இதில் புலிகள் இயக்கமும் ஒன்றெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடிய நிதிச் சேவைகள் தொடர்பான புலனாய்வு அமைப்பே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

## படையினருக்கும் மக்களுக்கும் பொறுப்புணர்வு தேவை

கொடிகாமம் ஏ-9 பாதையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கவச வாகன விபத்தொன்றில் பூசகரொருவர் கொல்லப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கதென அரசியல் ஆய்வாளர் பெ.மணிவண்ணன் கூறுகிறார். "வடக்கு. கிழக்கில் மட்டுமல்ல நாட்டின் சகல பாகங்களினதும் விபத்துக்களில் மனிதர்கள் கொல்லப்படும்போது மக்கள் குழுமி ஆர்ப்பாட்டம் புரிவதும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்துக்குத் தீவைப்பதும் ஒன்றும் புதிய விடயமல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனச் சாரதிகள் கும்பல்களால் தாக்கப்படுவதும், தாக்கிக் கொல்லப்படுவதும்கூட நடைபெற்றுள்ள சம்பவங்கள்தான் இது வடக்கில் மட்டும் இடம் பெறும் சம்பவமல்ல ஆனால், வடக்கில் படையினரின் வாகனங்கள் விபதத்தில் சம்பந்தப்படும்போது சக்திமிக்க இரகசியக் கரங்கள் இதனை பாரிய மோதலாகத் தூண்டிவிட முனைகின்றன. இதற்குப் பின்னால் அரசியல், இராணுவ நோக்கங்கள் இருக்கின்றன. என அவர் குறிப்பிட்டார். அதற்காக விபத்தில் சம்பந்தப்படும் படையினர் பொறுப்பற்ற விதத்தில் நடப்பதில்லையென்று நான் கூற வரவில்லை. படையினரும் தமது அதிகார வரம்புகளை மீறிச் செயற்படுகிறார்கள் என்பதும் உண்மைதான். படையினர் சட்டத்தை அமுல்படுத்தும் சக்திகளல்லர். பொலிசாரே உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் சட்டப்படி விபத்தில் சம்பந்தப்படுபவரைக் கைது செய்வதோடு, பிரேத பரிசோதனை, மரண விசாரணை ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளையும் பொலிசாரே செய்ய வேண்டும். எனவே, கொந்தளிப்பான பகுதிகளில் இரு தரப்பும் முறுகல் நிலை ஏற்படுவதை இருதரப்புமே தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

## கடல் ரோந்து அதிகரிப்பு

தலைமன்னார், பேசாலை கடற்பரப்புகளில் இலங்கைக் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. வன்னிக் கடற்படைக் கட்டளைத் தளபதியின் பணிப்புரையின் பேரிலேயே ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முனையும் இந்தியப் படகோட்டிகளையும் மீனவர்களையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கிடையில் இந்தியக் கடலோரக் காவற்படையினரின் ரோந்துப் பணிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## நீதித்துறையிலும் ஊழல்கள்தான்

உலகில் ஊழல் மிகுந்த நாடுகளில் 66ஆவது ஸ்தானத்தில் இலங்கை இருப்பதாகச் சர்வதேச மதிப்பீடொன்று தெரிவித்திருக்கும் இவ்வேளையில், இலங்கையில் பொலிஸ் மற்றும் நீதித்துறையில் ஊழல்கள் மலிந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கும் கருத்தை வெறும் வெற்றுப் பேச்செனத் தட்டிக் கழித்துவிட முடியாதென்று சட்டத்தரணி சுபாஷ் சந்திரகுமார் தெரிவித்தார். "நீதியைக் காக்க வேண்டிய நீதிபதிகள் பலரும், சட்டத்தை அமுலாக்க வேண்டிய பொலிஸ் அதிகாரிகளும்கூட ஊழல் பேர்வழிகளெனக் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல, சீனா, ரஷ்யா போன்ற சோஷலிச நாடுகளிலும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ அல்லது ஜனநாயக நாடுகளிலும் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன. தமது வருமானத்துக்கு மேலதிகமாகச் சொத்துச் சேர்த்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் எமது நாட்டில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கூடத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும் அவர் சொன்னார்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டங்களுக்கு முரணாகச் செயற்பட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இலங்கைக் கிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலாவை, சட்டத்துக்கு விரோதமாகப் போயா தினத்தன்று பிணையில் விடுவித்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிபதியொருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இந்த நீதிபதி இதற்காக இலட்சக்கணக்கில் இலஞ்சம் பெற்றாரென்று பின்னர் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. இதேபோன்று கோடீஸ்வரப் போதைவஸ்துக் கடத்தல் பேர்வழிகளை சட்டத்துக்கு முரணாகப் பிணையில் விடுவித்தாரென்று குற்றஞ்சாட்டப்பட்டு மற்றொரு நீதிபதி இடைநிறுத்தம் செய்யப்பட்டார். துணிகரமாகத் தனது கருத்துக்களைக் கூறுவதில் பெயர் பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன், நீதிபதிகளில் பக்கச்சார்பாக நடப்பவர்களும் உள்ளனர் என்று கூறியிருந்தார். மாவட்ட நீதிபதிகளில் சிலரை 'வீட்டு உரிமையாளர்களுக்கான நீதிபதிகள்' என்றும் சிலரை 'வாடகைக் குடியிருப்பாளர் நீதிபதிகள்' என்றும் அவர்கள் பக்கம் சார்ந்து வழங்கும் தீர்ப்புகளை வைத்து மற்றவர்கள் வர்ணிப்பதுண்டு என்றும் அவர் அண்மையில் கூறியிருந்தார்.

பொலிஸாரால் தாக்கப்பட்ட கனிஷ்ட சட்டத்தரணியொருவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை நீதியரசரொருவர் தட்டிக்கழித்த சம்பவத்தையும் நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியிருந்தார் என்றும் சட்டத்தரணி சுபாஷ் சொன்னார்.

## தமிழ் ஊடகப் பயங்கரவாதிகளுக்கு சர்வதேச அமைப்பு சாட்டையடி

இலங்கையிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் தமது பக்கச்சார்பான செயற்பாடுகளைக் கைவிட்டு, பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் தமது ஊடகப் பயங்கரவாத நிலைப்பாட்டிலிருந்து விலக வேண்டுமென்றும் ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர் அமைப்பின் செயற்குழு உறுப்பினரான அனந்தரூபன் கூறினார். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை சுட்டுவிட்டுத் தப்பிச் செல்பவர்களை வெறுமனே இனந்தெரியாதவர்களென வர்ணிப்பதில் அர்த்தமில்லை. இப்போது இனந்தெரியாதவர்களென்ற சொல்லே, குறிப்பிட்ட ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர்களையே இனங்காட்டுவதாகவும் அவர் கூறினார்.

மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் பல்லினத்தன்மை ஆகியவற்றை வளர்க்க ஊடகவியலாளர்கள் உதவ வேண்டுமென்று 2004ஆம் ஆண்டு மே மாதம் கிரேக்கத் தலைநகரான ஏதென்ஸில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளன மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகெங்கும் ஐந்து இலட்சம் ஊடகவியலாளர்களைக் கொண்ட இச் சம்மேளனத்தில் சுமார் பத்துக்கு மேற்பட்ட ஊடக அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. ஊடகச் சுதந்திரத்தையும் சமூக நீதியையும் வளர்த்தல், சகலவித பாரபட்சங்களுக்கும் மறுப்புத் தெரிவித்தல் என்பதோடு மோதல், சகிப்பின்மையை வளர்க்கும் ஊடகமாக ஊடகத்துறை செயற்படக் கூடாதெனவும் அம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசியல் மற்றும் கலாசார கருத்துச் சுதந்திரத்தை மதித்து, அடிப்படை மனித உரிமையைப் பேணுதலும் ஊடகவியலாளர்களின் கடமை என இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## பாலஸ்தீன இயக்கத்தில் சுஹாவுக்கும் இடம்?

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தின் மனைவி சுஹாவை, இயக்கத்தின் உயர்மட்டப் பதவியொன்றில் அமர்த்த மேற்படி இயக்கத் தலைவர்கள் சிலர் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. சுஹா பிரான்ஸைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெண்ணென்றும், அவர் பாலஸ்தீன இயக்க நடவடிக்கைகளில் முக்கிய பங்கெதனையும் வகிக்கவில்லையென்றும் எதிர்ப்பாளர்கள் காரணம் காட்டுகின்றனர். அரபாத்தின் செய்தித் தொடர்பு அதிகாரியாகவும், காரியதரிசியாகவும் செயற்பட்ட சுஹா, பின்னர் அவரின் வாழ்க்கைத் துணைவியானாரென்பது குறிப்பிடத் தக்கது.

# முரசம்

## தீர்வு தேடும் பிரச்சினைகள்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

இலங்கையின் இரு பெரும் தேசிய முக்கியத்துவமிக்க அறிவிப்புகள் ஒரு வார கால இடைவெளிக்குள் வெளியிடப்பட இருக்கின்றன. எதிர்வரும் பதினெட்டாம் திகதிய வரவு - செலவுத் திட்டமும் 25ஆம் திகதிய மாவீரர் தின உரையுமே இந்த இரண்டு முக்கிய நிகழ்வுகளுமாகும். வரவு - செலவுத் திட்டம் மக்களின் வயிற்றுப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது. பிரபாகரனின் பிறந்தநாளையொட்டிய மாவீரர் தின உரை, இந்த நாட்டுப் பல்லின மக்களின் வாழ்வுப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது. இரண்டுமே தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை. வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது போல பெரிதாக எதுவும் கிடைக்கவில்லையென்றாலும் ஏதோ ஓரளவாவது முன்னோடி நடவடிக்கையாவது எடுக்கப்பட்டிருக்கிறது. மக்களின் வயிற்றுப் பிரச்சினையை எந்த நாடாவது ஒரே இரவில் தீர்த்துவிட முடியாது. அதுவும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளால் இலகுவில் தீர்வு கண்டுவிட முடியாது. அரிசி, மா, சீனி, பருப்பு, சமையல் வாயு, டின் மீன், கருவாடு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இன்னமும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். உலக மயமாக்கலின் பாதகமான தாக்கங்களுக்கு மத்தியிலும் நாம் எமது தேசிய உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு காணாதவரை இப் பிரச்சினை அனுமார் வால் போல நீண்டுகொண்டேயிருக்கும். அடுத்து, இந்த அரசாங்கம் கடந்த வருடம் நவம்பரில் பதவியேற்றபோது சர்வதேசச் சந்தையில் நிலவிய எண்ணெய் விலை இந்த நவம்பரில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக அதிகரித்துவிட்டது. இதுவுமொரு பிரச்சினையே. எமது நீண்டகால தூரதிருஷ்டியற்ற செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீடித்த, ஸ்திரமான செயற்பாடுகள் தேவை.

அடுத்தது பேச்சுவார்த்தை மேசையில் சம்பந்தப்பட்டிருக்கும் முக்கிய தரப்புகளிலொன்றான புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் சொல்வதே வேதவாக்கு என்பதால், அவர் தனது ஐம்பதாவது பிறந்தின உரையில் ஏதாவது முக்கியமாகச் சொல்வாரென முழு நாடுமே, குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒஸ்லோவில் உள்ளக சுயாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு பின்னர், இறுதித் தீர்வல்ல; இடைக்காலத் தீர்வே முன்னதாகத் தேவையென்று கூறியது அந்த இயக்கம். இப்போது பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான புதிய யோசனையைப் புலிகள் சமர்த்திருப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் பல ஆட்சிகளோடும் ஏழு தடவைகள் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். இவற்றில் தமிழ்க் குழுக்கள் ஒன்றாகக் கலந்துகொண்ட திம்புப் பேச்சுவார்த்தையைத் தவிர ஏனையவற்றில் ஐந்திதைப் புலிகளே குழப்பியடித்தனர் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. ஏற்கெனவே மூன்று ஈழ யுத்தங்கள் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்களைப் பலியெடுத்துவிட்டன. நான்காவது ஈழ யுத்தம் வேண்டாமென்பதே இலங்கை மக்களின் - குறிப்பாகத் தமிழ் மக்களின் - எதிர்பார்ப்பு. 26ஆம் திகதியை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் பின்னணி என்ன?

ந
ர
ன்

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தற்போதைய இந்திய விஜயம் இலங்கை அரசியல் தொடர்பான புதிய நகர்வாக எடுத்து நோக்கப்படுகிறது. சந்திரிகாவின் விஜயத்தின் பின்னணியில் பல ஆழ்ந்த காரணங்கள் உள்ளதென்று உணரப்படுகிறது.

சந்திரிகாவின் இந்திய விஜயம் அமைந்த நேரம் மிகவும் திட்டமிடப்பட்ட ஒன்றாகவே தோன்றுகிறது. உலகம் முழுவதும் பரபரப்பாக நோக்கப்பட்ட அமெரிக்கத் தேர்தல் நிகழ்ந்த வேளையில் சந்திரிகா இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இவ் வேளையில் உலகத்தின் கவனம் அமெரிக்கா பக்கம் திரும்பியிருந்தது. அதனால் அவரது விஜயம் குறித்து பெரிய அளவில் துருவி ஆராயும்படி இருக்கவில்லை. இச் சூழ்நிலை அவர் தமது பேச்சுவார்த்தைகளைப் பரபரப்பின்றி நிகழ்த்திக்கொள்ள வாய்ப்பாக அமைந்திருந்தது.

இந்தியாவிலும் இத் தருணத்தில் பெற்றோல் விலையேற்றம், காஸ் விலையேற்றம் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளே பத்திரிகைகளின் அக்கறைக்குரியனவாகியிருந்தன. இச் சூழ்நிலையில் இலங்கை ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் உள் விபரங்கள் வெளிவராது அமுங்கிப் போயின.

சந்திரிகாவின் இவ் இந்திய விஜயத்தில் மற்றொரு முக்கியத்துவமும் உண்டு. இந்தியாவின் புதிய காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொண்ட முதலாவது விஜயமாகவும் இது அமைகிறது. இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் இராஜதந்திர வட்டாரங்களுக்கு ஆரம்ப கட்டத்திலேயே தனது அணுகுமுறை பற்றிய விளக்கங்களைக் கொடுக்க இது அவருக்கு சரியான தருணமாக அமைந்திருந்தது.

இதேவேளை இலங்கையின் இறுதிப் பொதுத் தேர்தலில் அவரது கூட்டணி வெற்றியீட்டினாலும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை ஈட்ட முடியாதிருந்தது. ஆனால், சந்திரிகாவின் இராஜதந்திர முயற்சிகள் மூலம் அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் அரசாங்கத் தரப்பில் சேர்த்துக்கொண்டதன் மூலம் தற்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிலைநாட்டக் கூடியதாயுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரு பிரிவினரும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த எம்.பிக்களும் தாமாகவே அரசோடு சேர்ந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் தேர்தலின் பின் சிறுபான்மை அரசாங்கத்தை வீழ்த்தும் பகீரத முயற்சியில் ஈடுபட்டிருந்த எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தற்போது அவ் எண்ணத்தைக் கைவிட்டுள்ளது. இந் நிலையில் அரசாங்கம் எதிர்வரும் வரவு செலவுத் திட்ட விவாதத்தை நம்பிக்கையுடன் முன்னெடுக்கக்கூடியதாய் உள்ளது.

இந்த ஆரோக்கியமான மாற்றங்களின் பின்னர் ஜனாதிபதி இந்திய விஜயத்தை மேற்கொண்டது அவருக்கு உறுதியான குரலில் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய தெம்பை அளித்துள்ளது. குறிப்பாக இந்திய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அவரால் அரசாங்கத்தின் சார்பில் உறுதியான உத்தரவாதங்களை வழங்கக்கூடிய சாத்தியம் இப்போது தோன்றியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையிலும் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான சில புதிய நிலைப்பாடுகளை எடுக்க வேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமும் வலுத்து வருகின்றது. அதுவும் தற்போதைய காங்கிரஸ் அரசாங்கத்துக்கு இது தனது சொந்தப் பிரச்சினை போன்ற ஒன்றாகும். அது நீண்ட தொடர்சியான பிணைப்பைக் கொண்டிருக்கிறது.

ஏனெனில், 1983 ஜூலைக் கலவரத்தின் பின், இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கும் மிதவாதத் தலைமைகளுக்கும் அபயமளித்ததுடன் தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்திய இந்திய அரசு தமிழீழக் குழுக்களுக்கு ஆயுதப்பயிற்சி உட்படப் பல்வேறு உதவிகளையும் அளித்தமை குறிப்பிடத் தக்கது. அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம். ஜே.ஆர் அரசாங்கத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்த திரு. பார்த்தசாரதியை தனது விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு அனுப்பி பலசுற்றுப் பேச்சுக்களும் நடத்தப் பட்டன.

இந்திரா காந்தியின் மறைவையடுத்துப் பதவிக்கு வந்த ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கமோ, மேலும் தீவிரமான அளவில் இலங்கை இனப் பிரச்சினையில் பங்காற்றியது. அது, 1985இல் இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்ப் போராளிகள் பேச்சுவார்த்தை நடத்திய திம்புப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்தது. தொடர்ந்து 1987இல் இலங்கை வான்பரப்பை ஊடுருவி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்டதன் மூலம் தனது கரிசனையை அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு உணர்த்தியது. தொடர்ந்து இலங்கை அரசாங்கத்துடன் இந்திய - இலங்கை ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டது. இதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மாகாண சபை என்ற தீர்வொன்றை ஏற்படுத்தியது. அதை நிறைவேற்ற இலங்கைக்குத் தனது படைகளை இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் அனுப்பி வைத்தது.

இதுவரையான இலங்கை இனப் பிரச்சினை வரலாற்றில் ஏற்படுத்தப்பட்டு சட்டமூலமாக்கப்பட்டுள்ள ஒரேயொரு தீர்வு இம் மாகாண சபைத் தீர்வாகவே உள்ளது. ஆயினும் இத் தீர்வை ஏற்காத புலிகளுடன் இந்தியப் படைகள் மோத வேண்டி ஏற்பட்டது. இலங்கையிலும் இந்தியாவிலும் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்களின் பின் இந்தியப் படைகள் வாபஸ் பெறப்பட்டன. அத்துடன் இந்தியாவுக்கு, குறிப்பாக இந்திரா காங்கிரஸ்"க்கு மிகவும் மனத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. அதுதான் ராஜீவ் காந்தி படுகொலை. இலங்கைப் பிரச்சினையில் காட்டிய ஈடுபாடு காரணமாகவே ராஜீவ் காந்தியை இழக்க நேர்ந்ததென்பது காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பாரிய தாக்கமாகும்.

தற்போது காங்கிரஸ் அரசாங்கம் இந்தியாவில் மீண்டும் ஏற்பட்டுள்ளது. ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவியாகச் செயற்படுகிறார். இயல்பாகவே இலங்கைப் பிரச்சினை தொடர்பான அக்கறை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட நியாயமான காரணங்கள் உண்டு.

கடந்த ஒரு தசாப்த காலமாக இந்திய மத்திய அரசாங்கத்தில் காங்கிரஸ் கட்சி வலுவான பாத்திரத்தை வகிக்கவில்லை. ராஜீவ் காந்தியின் கொலையையடுத்து நரசிம்மராவின் தலைமையில் பதவிக்கு வந்த காங்கிரஸ் அரசாங்கம் ஒருவித தலையிடாக் கொள்கையையே கொண்டிருந்தது. ராஜீவின் மரணத்தையடுத்து அவரது மனைவி சோனியா காந்தி உடனடியாக காங்கிரஸ் தலைமையை ஏற்க மறுத்துவிட்டார். இதே வேளையில் அடுத்த தேர்தல்களில் ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சி அரசாங்கமும் இலங்கை விவகாரத்தில் தூர விலகியே நின்றது.

இந்த இடைவெளியில் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான உலக நாட்டு ஈடுபாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. அது இந்தியாவைத் தாண்டி மேற்குலக நாடுகள் நேரடியாக இலங்கை விவகாரத்தில் தலையிட வழிவகுத்தன. நோர்வே மத்தியத்துவம் செய்ய அழைக்கப்பட்டது.

**ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனும் சோனியா காந்தியுடனும் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடனும் சந்திப்புகளை நிகழ்த்தியிருந்தார். அத்துடன் எதிர்க்கட்சி முக்கியஸ்தர்களான வாஜ்பாய், அத்வானி போன்றவர்களுடனும் இலங்கைப் பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினார். இச் சந்திப்புகளில், ராஜீவ் காலத்தில் இலங்கைத் தூதுவராக இருந்த தீக்ஷித்தும் தற்போதைய அரசாங்கத்தின் வெளிவிவகார ஆலோசகராகக் கலந்துகொண்டிருந்தமை அக்கறைக்குரிய ஒன்று.**

இந் நிலையில் இந்தியா மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலைமை ஒன்றில் இலங்கை நிகழ்வுகளை அவதானித்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. புலிகளின் ஆனையிறவு முகாம் தாக்குதலின் பின் யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்பின்போது இலங்கை அண்டை நாடுகளிடம் அவசர உதவி கோரிய வேளையில், பாகிஸ்தான் உதவ முன்வந்த நிலையில் இந்தியாவுக்குப் பாரிய இக்கட்டான நிலை தோன்றியது. இனியும் தான் தலையிடாதிருந்தால் இலங்கை தனது எதிரி நாடுகளது விளையாட்டுக் களமாகிவிடுமளவுக்கு ஆகிவிடலாம் என்ற கவலை அதற்கு உண்டாயிற்று. அதனால் அது யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டி ஏற்படும்போது அதற்கு உதவத் தயாரென அறிவிக்க நேர்ந்தது.

ஆனாலும் அப்படியான ஒரு சூழ்நிலை ஏற்படாததால் அப்போதைக்கு இந்தியாவின் இக்கட்டு நீங்கியது. எனினும் இலங்கையில் மேற்குலக நாடுகளின் அபரிமிதமான ஈடுபாடு அதன் கண்களை உறுத்தி வருகிறது. நோர்வே நாட்டின் ஈடுபாடு, அது புலிகளுக்கு சக்திவாய்ந்த தொலைதொடர்புச் சாதனங்களை எடுத்துக் கொடுத்தது என்பன அதற்கு மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை.

அத்துடன் ஜப்பானின் அதிகரித்த ஈடுபாடும் இந்தியாவுக்கு அக்கறைக்குரிய ஒன்றாக அமைந்தது. ஜப்பானிய பொருளாதார உதவிகள் நீண்டகாலத்தில் ஜப்பானிய சந்தைக்கான ஒரு ஏற்பாடாக அமைந்துவிடும் என்ற கவலை அதற்கு இருந்தது.

எனினும் இலங்கை விடயத்தில் தொடர்ந்து தலையிடாக் கொள்கையுடன் இருந்துவந்ததால் இவற்றையெல்லாம் ஏற்றுத்தான் ஆக வேண்டுமென்ற நிலைமை அதற்கு ஏற்பட்டிருந்தது. எனவேதான் இத் தருணத்தில் இலங்கை தொடர்பான புதிய அணுகுமுறையொன்றையிட்டுச் சிந்திக்க வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு எழுந்தது.

அதன் பிரகாரம் இந்தியாவின் கடந்த அரசாங்கம் தன் இறுதிக் காலத்தில் சில பிரதானமான நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. ஒன்று, இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார ஒப்பந்தங்களாகும். இதில் இலங்கை - இந்திய வர்த்தகத் தடைகளை பெருமளவு நீக்கும் ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொண்டது. இலங்கையில் பாரிய இந்திய முதலீடுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக இந்திய எரிபொருள் விநியோகம் இதில் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

அத்துடன் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அது நீண்ட கால ஒப்பந்தத்துக்கு எடுத்துக்கொண்டது. இது பொருளாதாரத்தோடு மட்டுமன்றி அரசியல் முன்ஜாக்கிரதையோடும் மேற் கொள்ளப்பட்ட ஒரு முடிவாகவே கருதப்படுகிறது. குறிப் பாக, வடக்கு - கிழக்கு அரசியலில் தனக்கான ஒரு பிடிமானத்தை ஏற்படுத்திக்கொள்ளும் இராஜதந்திர ஏற்பாடாக இரு இருந்தது.

இலங்கைக்கு இராணுவ ரீதியிலும் இந்தியா சில வரையறைகளுடன் உதவ முன்வந்தது. அத்துடன் நில்லாது இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளவும் முன்வந்திருந்தது. இப்போது இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

கடந்த இந்திய அரசாங்கத்தின் இறுதிக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டங்களை முன்னெடுப்பதில் புதிய அரசாங்கமான காங்கிரஸ் அரசாங்கமும் அதிக அக்கறை காட்டுகிறது. அது பதவிக்கு வந்த பின்னர் வெளியிட்ட கருத்தொன்றில் நோர்வே தமக்கு இலங்கை விவகாரங்களை முழுமையாக அறிவிக்கவில்லையென்றும் ஆனாலும் தமக்கு அவை குறித்துத் தெரியுமென்றும் கூறியிருந்ததானது அதன் அதிகரித்த ஈடுபாட்டை உணர்த்துவதாக உள்ளது.

இத்தகைய ஒரு அக்கறை இந்தியாவிடம் பிறந்திருக்கும் சூழ்நிலையில்தான் இலங்கை ஜனாதிபதியின் விஜயமும் அமைந்தது. அவரது விஜயத்தின்போது இலங்கை - இந்திய வர்த்தக உடன்பாடுகளை மேலும் தாராளமாக்கும் பேச்சுவார்த்தைகளுக்குப் புறம்பாக, பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் புலிகள் வலியுறுத்தி வரும் இடைக்கால சுயாட்சி அதிகார சபை குறித்து எவ்வித அணுகுமுறையை மேற்கொள்வது என்பது குறித்தே தீவிரமாக ஆராயப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறது. புலிகள் ஒருவேளை மீண்டும் யுத்தத்தில் இறங்கினால் இந்தியா இலங்கைக்குக் கைகொடுக்க முன்வருமா என்பது குறித்த அக்கறையும் ஜனாதிபதி சந்திரிகா தரப்பில் இருக்க காரணமுள்ளது. ஏற்கெனவே அவர் புலிகள் யுத்தத்தை ஆரம்பித்துவிடாதிருப்பதற்காகப் பல சமரசங்களைச் செய்ய வேண்டியிருந்தது. குறிப்பாக அரசியல் படுகொலைகள் குறித்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க முடியாதவராக ஆகியிருந்தார்.

தற்போதைய இந்திய விஜயத்தின்போது அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனும் சோனியா காந்தியுடனும் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடனும் சந்திப்புகளை நிகழ்த்தியிருந்தார். அத்துடன் எதிர்க்கட்சி முக்கியஸ்தர்களான வாஜ்பாய், அத்வானி போன்றவர்களுடனும் இலங்கைப் பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினார். இச் சந்திப்புகளில், ராஜீவ் காலத்தில் இலங்கைத் தூதுவராக இருந்த தீக்ஷித்தும் தற்போதைய அரசாங்கத்தின் வெளிவிவகார ஆலோசகராகக் கலந்துகொண்டிருந்தமை அக்கறைக்குரிய ஒன்று.

அதிக பரபரப்பில்லாமல் ஒரு முக்கியம் வாய்ந்த அரசியல் சந்திப்பொன்று நிகழ்ந்து முடிந்திருக்கிறதென்பதே உண்மை. இச் சந்திப்புகளையடுத்து சந்திரிகா புத்தபெருமான் தியானம் செய்த காயாவிலுள்ள மகாபோதி விகாரைக்குச் சென்று தியானம் செய்தார். இந்த இராஜதந்திர நகர்வின் பெறுபேறுகள் பின்னைய நாட்களில்தான் வெளித் தெரியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

# வன்னியில் என்ன பேசினார்கள்?

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தொடரும் என்ற நம்பிக்கை தற்போதைக்கு இல்லை. நின்று போன பேச்சுவார்த்தையை எப்படி ஆரம்பிப்பது என்பதே ஏற்பாட்டாளர்களுக்கு இருக்கக்கூடிய பிரதான சிக்கலாகும். இந்த முடிச்சுகளை அவிழ்ப்பதற்காக நவம்பர் மாதத்தின் முற்பகுதியில் பலதரப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஏற்கெனவே பல விஷயங்களை அலசி ஆராய்ந்திருப்பதால் இறுதியாக நடைபெற்ற நோர்வே வெளிநாட்டு அமைச்சர் ஜோன் பீற்றர்சனின் வன்னி விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது. புலிகளுக்கும் நோர்வேத் தரப்பினருக்கும் இடையில் என்ன பேசப்பட்டது என்பதை சில நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிந்த போதிலும், இவர்கள் புலிகளுடன் பேசி என்ன தீர்மானங்களை எடுத்தார்கள் என்பதை வெளியில் சொல்ல மறுத்துவிட்டார்கள். இதேவேளை ஜனாதிபதி அண்மையில் கூட்டமொன்றில் பேசும்போது எதிர்காலத்தில் புலிகளுடன் செய்யப்படும் எந்தவொரு சமாதான முயற்சியும் மறைமுகமானதாகவோ இரகசியமானதாகவோ, போலியானதாகவோ இருக்காதெனத் தெரிவித்திருந்தார். ஆனால், வன்னிச் சந்திப்பின் முடிவுகளை இரகசியமாக வைத்திருப்பது ஊடகக்காரர்கள் ஊதி எரித்துவிடாமல் இருக்கச் செய்யவுமாக இருக்கலாம். அந்த வகையில் எடுத்த தீர்மானங்களைத் தேடுவதற்குமுன் பேசப்பட்டவைகள் நல்ல பெறுபேறுகளைத் தரக்கூடியவையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியத்துவம் பெறுகிறது. நோர்வேத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மிக நேர்த்தியாகவும், கட்டங் கட்டமான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலும் அமைந்திருந்தது. நாட்டில் பரவலாக நடைபெற்று வரும் மனிதப் படுகொலைகள் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கப் போவதில்லை என்றும் ஜனநாயகத்தை மதிக்கின்றவர்களிடத்தே பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். தவிரவும் படுகொலைகளின்போது நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கைகள் குறித்து எழுப்பப்படுகின்ற கேள்விக் கணைகள் நடுநிலை குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றதெனவும், நோர்வே இவ் விவகாரத்தில் சாத்தியத்திற்கு அப்பால் மௌனமாக இருக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். தவிரவும், அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு குறித்து இதுவரை இலங்கை அரசும் கருத்துக்கள் எதையும் கூறாதிருந்தது. தற்போது ஏற்பட்டிருந்த சர்வதேச அழுத்தமும் பொருளாதார நெருக்கடியும், இந்திய அரசுடனான ஒப்பந்த ஏற்பாடுகளும், ஏதோ ஒருவகையில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் இலங்கை அரசு மேற்படி வரைபை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அல்லது பேச்சுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. புலிகள் இச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் தெளிவுபடுத்தியுள்ளனர். இதேவேளை இலங்கைக்கு வருகை தந்து திரும்பிய ஜப்பானின் விசேஷ தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்திருந்த கருத்துக்களும், மேற்படி சந்திப்பில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதாவது, சமாதான ஏற்பாட்டாளர்களாகவோ உதவி வழங்கும் நாடுகளாகவோ ஆதரவு வழங்குபவர்களாவோ எவரும் இருப்பது தவறல்ல. ஆனால், இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் தேவையற்ற தலையீடுகளை தீர்வுகளைத் திணிப்பதையும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று புலிகள் தெரிவித்திருந்தமையானது, சமாதான ஆர்வலர்கள் மத்தியில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமானது இலங்கை விவகாரத்தில் ஏனைய நாடுகளின் தலையீட்டை விடவும் இந்தியாவின் நெருக்க அதிகரித்திருக்கும் நிலைமை இராணுவ சமநிலையைப் பாதிக்கும் விடயமாக அமையலாம் எனப் புலிகள் அஞ்சுகின்றனர். அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவாகியிருப்பது மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் தீவிரவாத, பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்ற ஏற்பாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட முழு அங்கீகாரமாகவும் பார்க்கப்படுகின்றது. இதில் இந்திய - அமெரிக்க இராஜதந்திர நகர்வுகள் மேலும் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளையோ தீவிர வன்முறைப் போக்கையோ எதிர்காலத்தில் அனுமதிக்கும் என்று நம்புவதற்கு இல்லை. அவ்வாறு ஒரு சூழல் ஏற்படுமானால் தற்போது இருக்கக் கூடிய பேரம் பேசும் சக்தி குறைவடைய அல்லது இல்லாமல் போகவும் கூடும். இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படையாகப் பேசப்படாதபோதிலும், சூசகமாகப் பேசப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

மறுபுறத்தே புலிகளின் சார்பாக வழமையான சில விடயங்கள் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. இடைக்கால வரைபு தொடர்பில் தேவையான சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பதால் மீண்டும் ஒரு வரைபை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது, போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளோ, மீளக் குடியமர்வு நடவடிக்கைகளோ இடம்பெறவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை இலங்கை இராணுவத்திற்கு வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்ற இராணுவ உதவிகள் இராணுவச் சமநிலையை பாதிக்கும் ஒரு செயலென மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளனர் இப் பேச்சுக்களைக் கூர்ந்து அவதானிக்கும்போது சமாதானப் பேச்சுக்களில் எப்போதுமே இழுத்தடிப்புச் செய்வதென்ற புலிகளின் உள் நோக்கம் புலப்படுகின்றது. அதாவது நிரந்தரத் தீர்வு பற்றி அல்லாமல் இடைக்கால வரைபு பற்றியே பேசப்படும் என்று தெரிவித்து வந்தவர்கள், அதற்கு அரசு சம்மதம் தெரிவித்திருக்கும் வேளைகளில் அவ்வரைபை மீளவும் பரிசீலித்து புதிய வரைபு ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்திருப்பது சந்தேகத்தை வலுக்கச்செய்கிறது. மற்றொரு விடயம், ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் முடிவடைந்துவிட்டதும் பதவியை தக்கவைத்துக் கொள்ள அல்லது நீடிக்க அல்லது அரசியல் யாப்பில் மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதி ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடுமென்பதால் இப்போது பேச்சுவார்த்தகளில், பங்குகொள்வது எவ்வளவு தூரம் பொருத்தமானது எனவும் புலிகளை யோசிக்க வைத்துள்ளது. இதையும் எதிர்காலத்தில் ஒரு காரணியாக காட்டக் கூடும். தவிரவும் இயக்க உறுப்பினர்களில் அநேகமானோர் யுத்த சூழலிலிருந்து விடுபட்டு சுமுக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு வருவதால் அவர்களின் மனநிலையில் மாற்றங்கள் நிறையவே ஏற்பட்டுள்ளன. வீடுகளுக்குச் சென்று உறவினர்களோடு வாழும் புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும் விரும்புகின்றனர். கடந்த இரண்டரை வருட காலத்துக்குள் இவ்வாறு பலர் நாட்டை விட்டுச் சென்றுவிட்டதாகவும் அறியமுடிகின்றது. இதுகூட சமாதானக் காலத்தில் புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாகவே கருதப்படுகின்றது. இதேவேளை எத்தகைய கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றபோதும் எதையும் கவனத்தில் கொள்ளாமல் நடந்தேறுகின்ற எதிர்க் கருத்துக் கொண்டவர்களை அழிக்கும் அரசியல் படுகொலைகள் தற்போது அதிகரிக்கவே செய்துள்ளது. முன்னர் ஓரிரண்டு மாற்றுக் கருத்துக் கொண்ட அமைப்புகளே இருந்து வந்தன. இப்போது கூட்டமைப்புக்குள் உள்ளதை விடவும் கூடுதலான அமைப்புகள் புலிகளுக்கு எதிரானவர்களாக அல்லது அவர்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக்கொண்டவர்களாக உருவாக்கம் பெற்றுள்ளனர். இதுவும் சமாதான காலத்தில் புலிகளின் அராஜக நடவடிக்கைகளுக்குக் கிடைத்த பாரிய பின்னடைவுதான். இவையெல்லாவற்றையும் மூடி மறைப்பதோ அல்லது இவையெல்லாம் இலங்கையின் இனப் பிரச்சினையோடு சம்பந்தப்படாதவையென வெளியுலகத்திற்கு காட்டுவதோ நிரந்தர சமாதானத்திற்கான சரியான வழியாகாது.

**திருகோணமலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பேசிய கூற்று இவ் உண்மைகளை அடக்கியதாகவே இருந்தது. அதாவது, யுத்தமில்லாதது சமாதானம் ஆகாது. பிரச்சினைகளை இணங்கண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளோடு பேசித் தீர்வு காண்பதே நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும் என்று அவர் கூறியிருந்தார். கண்காணிக்க வந்தவருக்குப் புரிந்தது யுத்தத்தை அநுபவித்த நமக்குத் தெரியாதிருக்கும் என நினைப்பது புத்திசாலித்தனமன்று.**

அலசுவது

**மதியூகி**

திருகோணமலையில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் பேசியக் கூற்று இவ் உண்மைகளை அடக்கியதாகவே இருந்தது. அதாவது, யுத்தமில்லாதது சமாதானம் ஆகாது. பிரச்சினைகளை இணங்கண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளோடு பேசி தீர்வு காண்பதே நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும் என்று அவர் கூறியிருந்தார். கண்காணிக்க வந்தவருக்குப் புரிந்தது யுத்தத்தை அநுபவித்த நமக்குத் தெரியாதிருக்கும் என நினைப்பது புத்திசாலித்தனமன்று.

---

## அதிரடி அய்யாத்துரை



'**மினாமி** பெயரில பிஸினஸ்' எண்டு கேள்விப்பட்டிருப்பியள். அதைக் கொஞ்சம் அதிகமாகவே ரெண்டெழுத்தார் செய்யினமாம். ஏற்கெனவே உப்பிடித்தானே கன பேர் முதலாளிமாரா மாறினவை. இப்போ லேட்டஸ்டா கிடைச்ச கிசுகிசு என்னெண்டு தெரியுமோ. சீமெந்து ஏத்தி இறக்கிற ஏஜண்டா ஒருத்தரை ரெண்டெழுத்தார் நியமிச்சிருக்கினம். அதுக்காக ஒரு கோடி ரூபாவை சாக்கில கட்டிக் கொடுத்தவயாம். கசிப்பு வித்துத் திரிஞ்சவருக்குச் சாக்கில காசு எண்டதும் ஹாட்அட்டேக்கே வந்திடுமாப் போல குபீரெண்டு வேர்த்துக் கொட்டிச்சுதாம். அதென்னவோ டிப்பொஸிட் செய்து சாமான் இறக்கிறதாம். "எல்லாஞ் சரிதானே. காசைத் தாங்கோ! பிறகு லாபத்திலை யோசிப்பம்" எண்டு சொல்லியிருக்கினமாம்.

வரியெண்டும் கப்பமெண்டும் சனத்திட்ட வாரி வாங்கினதெல்லாம் இங்கால புதுப் புது முதலாளிமாருக்குத்தான் வாசியாப் போட்டுது. காசு குடுத்த சனந்தான் கஞ்சிக்கும் வழியில்லாமத் திரியுதுகள்.

**திருகோணமலையில** கண்காணிக்கிற குழுத் தலைவர் பேசின பேச்சைக் கேட்டு புல்லரிச்சுப் போட்டேனுங்கோ. பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில பேசேக்க அவருக்கு மனச்சாட்சிக்கு விரோதமாப் பேச முடியாமப் போட்டுது போல. "சண்டையில்லையெண்டது மட்டும் சமாதானமில்லை. வன்முறைகள் இல்லாதிருக்க மாற்றுக் கருத்துக் கொண்டவையளோடை பேசி பிரச்சினைக்கு தீர்வு காணுறதுதான் உண்மையான சமாதானம்" எண்டு கொஞ்சம் காரசாரமாவே பேசிப்போட்டார். யுத்த நிறுத்தம் மீறப்படேக்கையெல்லாம் "விசாரிக்கிறம்" எண்டு மட்டும் அறிக்கை விடுற கண்காணிப்புக் குழுக்காறர், இப்பிடி ஒரு விளக்கத்தையும் வச்சுக்கொண்டுதான் இருந்திருக்கினம். வசமாக் கிடைச்ச வாய்ப்பை சரியாப் பயன்படுத்திப் போட்டினம்.

**களுத்துறைச்** சிறையில இருக்கிற தமிழ்க் கைதிகள் இந்து சமய அனுஷ்டா னங்களை சர்வ அக்கறையா அனுஷ்டிக்கி னமாம். விஷேசமான நாள் வருகுதெண்டால் நேரா இந்து சமய அமைச்சுக்கே அறிவிக் கினமாம். போன தீபாவளிக்கும் அமைச்சுக்காறர் போய் உதவிப்போட்டு வந்திருக்கினம்.

இந்து அமைச்சரா இருக்கிறவர், முந்தி ஒரு தடவை இவையள் சாகும் வரை உண்ணா விரதமிருக்க அவையின்ர விடுதலை தொடர்பாகப் பேசப் போனபோது உள்ளுக்குள்ள வைச்சு தாக்கப்பட்டாரெல்லோ, அதுகளையும் மறந்து ஆள் உதவி செய்யிறார் எண்டு சொல்லினம். அந்தத் தாக்குதலில முதல் குற்றவாளியானவரை ரெண்டெழுத்தார் ஊருக்குள்ள வந்ததுமே விடுவிச்சுக்கொண்டினம். இன்னும் ரெண்டுபேர் உள்ளுக்குள்ள இருக்கினம். மன்னிக்கிறதுதானே மனிதப் பண்பு என்கிறாராம் அமைச்சர். எது எப்பிடியோ விடுதலைக்காக ஏங்கிறவையளுக்கு நல்ல காலம் பிறந்தாச் சரிதான்....சட்டம் படிச்சுப்போட்டு சனத்திட்ட சடையிறவையள் இவையளின்ர விசயத்தில தங்கட கெட்டித்தனத்தைக் காட்டலாமெல்லோ.....

**தீபாவளிக்** கொண்டாட்டத்தில இருக்கேக்க அரபாத் இறந்திட்டார் எண்ட செய்தி கேட்டு ஆடிப்போயிட்டனுங்கோ. பாலஸ்தீன மக்கள் மிகவும் நேசிக்கிற, அவையளுக்காகவே கடைசி வரையும் வாழ்ந்த, அவரை நேரடியாத் தெரியாட்டிலும் வரலாறுகள் தெரிஞ்சதால அவற்ற இழப்பு ரொம்பப் பெரிசுங்கோ. அவருக்கு அடுத்தபடியா ஜனாதிபதியா வாறவர் அவரளவுக்கு இல்லாட்டியும் இஸ்ரேலோட சமாதானமாகப் பேச்சுக்கு வருவார் எண்டு எதிர்பாக்கிறதாச் சில செய்திகள் வெளிவருகுது. அப்பிடியெண்டா அரபாத் சமாதான தீர்வுக்கு எதிராக இருந்தவர் எண்டு சொல்லமாப் போலயெல்லோ கிடக்கு நல்ல தலைவனை இழந்து தவிக்கிற பாலஸ்தீன மக்களோடு எங்கட கவலைகளையும் பறிமாற வேணும். ஏனெண்டால் நாங்களும் ஒரு சமூகத்தின்ர விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறதால அந்த வலி எங்களுக்கும் தெரியும்.

**கூட்டான** தமிழ்க் கட்சிக்காறர் அயலகத்துக்குப் போய் அதிகாரத்தில இருக்கிறவையளைச் சந்திச்சுப் பேச வேணுமெண்டு அயலகத்து எம்பஸிக்கு மனுக் கொடுத்தவையாம். அவயளிட்ட இருந்து சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லையாம். விஷயத்தைக் கேள்விப்படேக்க நானும் நம்பயில்லைத்தான். பிறகுதான் தெரிய வந்துது. அதிகாரத்தில இருக்கிறவையளைப் பாக்க வேணுமெண்டு கேட்டுப்போட்டு எண்டர் ஆகுவினமாம். பிறகு வரித் தோல் மயக்கத்தில அறிக்கை விடுற சாமிகளை சந்திப்பினமாம் எண்டு லேசா சந்தேகப்படுகினமாம்.

தாங்களாகக் கேட்டுப் போகாமல் யாரும் சொல்லிறபடி கேக்கேக்க உப்பிடித்தானாக்கும். ஒரு வகையில கெல்மட் பாஸ்போட்டில போற மாதிரி.....

**ஆலோசகரானவர்** வாய் திறக்கமாட்டனெண்டு நிற்கிறாராம்..."என்னண்ண ஏதாவது சொல்லுங்கோ. நோர்வேக்காறர் வந்திச்சினமே, என்ன பேசினியள்?" எண்டு ரொம்ப வழிஞ்சவராம் ஒரு ஊடக மேதை... சிங்கமண்ண உளறுவாரே? விஷயம் வெளியால வர இரண்டு சொய்ஸ் இருக்குது. ஒண்டில் அதிகார அம்மணி மூலமா வெளியால கசியும். இல்லாட்டில் தலைவற்ற பேர்த் டே வருகுதெல்லோ, அண்டைக்கு பேசிறாப்போல அவரே சொல்லுவார். அதுவரைக்கும் குடைஞ்சு குடைஞ்சு கேட்காதேயுங்கோ. நோர்வேக்காறர்தான் வெளியால சொல்ல வேண்டாமெண்டு சொல்லியிருக்கினம். எப்பிடிச் சொல்லிறது எண்டு ஒரே போடாப் போட்டாராம்.

**திருகோணமலையில** வயசுப் பெடியங்கள், பிள்ளைகளை காணக் கிடைக்குதில்லை. திடீரெண்டு என்னாச்சுது எண்டு உறவுக்காறர் ஒருவரிட்ட ரெலிபோனிலேயே இரகசியமாக் கேட்டன். முன்ன மாதிரி இல்லையாம். அறம்புறமா இயக்கத்துக்கு ஆள் பிடிக்கினமாம். அதால பிள்ளைகளை வெளியால விட முடியாம பெத்ததுகள் யோசிக்குதுகளாம். சில விளையாட்டுக்களைச் செய்ய யுத்த காலத்தை விடவும் சமாதான காலந்தான் ரொம்பத் தோதா அமையுதுங்கோ. இதுக்காகத்தான் சமயத்தில சமாதானத்துக்கு வருகினமோ?

வசன கவிதை எப்படியிருக்கும் தெரியுமே! கவிதையாகவும் இராது, கட்டுரையாகவும் இராது. இதை ஒருக்காப் படியுங்கோ.

*பெற்றவர்கள் கண்ணீர் வடிக்கும்போது*
*தியாகங்கள் தேவையற்றதாகிவிடுகிறது*
*அவர்களே தட்டிக் கொடுக்கும்போது*
*ஒவ்வொரு மரணமும் வரலாறாகிறது*
*கண்ணீரையா? பங்களிப்பையா?*
*தேசியம் தந்து நிற்கிறது.*

# குச்சவெளியின் குறைகள் நீங்குமா?


கிழக்கு மாகாணத்திலேயுள்ள குச்சவெளி எனும் கிராமத்தில் உள்ள அவல நிலையைச் சீர்படுத்த அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் யாருமே முன்வரமாட்டார்களா? என இக் கிராம மக்கள் அங்கலாய்க்க்கிறார்கள். கிராமத்தில் வைத்திய நிலையம் இருந்தும் கூட பக்கத்துக் கிராமத்துக்குப் போக வேண்டியதாக உள்ளது. வைத்தியர்கள் இல்லாமையே இதற்கான காரணம். இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் கஷ்டப்படுகின்றார்கள்.

கிராமத்தில் பாடசாலை வெகு தூரத்தில் இருப்பதால் மாணவர்களாகிய நாம் மிகவும் கஷ்டப்படுகின்றோம். பாடசாலைக்கான காணி இருந்தும் கூட அதில் கட்டட வேலையை மேற்கொள்வதற்கு ஒருவரும் முன்வரவில்லை. இப்படிப்பட்ட பல பிரச்சினைகள் உள்ளன. ஆகவே இக் கிராமத்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவதுடன் கிராமத்தை அபிவிருத்தி செய்து தருமாறும் கிராம மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

-ஏ.ஆர்.சலீம்,
குச்சவெளி.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 30 | | 23 |
| 03 | | 11 |
| 1978 | | 1996 |



## கனகரட்ணம் துஷ்யந்தன்

உள்ளத்தில் ஒளியாய்
விளங்கினாய்!
எமது உணர்வுகளில் சிகரமாகத்
தோன்றினாய்!
இன்று எமது ஒளியினை
இழக்கவோ?...!
எமது இன்பங்களை
தொலைக்கவோ?....!
காலனவன் உனைக் கூட்டிச்
சென்றான்!
உனை இழந்து கண்ணீருடன்
தவிக்கின்றோம்.....

அம்மா ,அப்பா, தம்பிமார், தங்கை
31/17, கண்ணகிபுரம், உவர்மலை, திருகோணமலை.

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

# விளம்பரப்பகுதி

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. - ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk


Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)


# மலையாள மாந்திரீக சக்தி
# கைகண்ட பலன் பெற



பேராசிரியர்
கருணாகரபூஷணம்
உலக மலையாள மாந்திரீக
ஜோதிட சக்கரவர்த்தி

எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்





**சந்திரன், இங்கிலாந்து!.**

திரு ஐயா அவர்களுக்கு நான் திருமதி ஆனந்தி ரணசந்திரன் எழுதுவது, ஐயா! நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம் தயவுசெய்து எந்தக் காரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டாம் நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கிவிடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.

**சிவகுமார், வத்தளை!.**

மதிப்பிற்கும் பெருமைக்கும் வணக்கத்துக்கும் உரிய சாமி ஐயா அவர்குகளுக்கு, எனது அக்கா மகளை விடுமுறைக்காக மட்டக்களப்பின் ஆச்சி வீட்டில் கொண்டுபோய் விட்டிருந்த நேரத்தில் அங்கு அவர் ஒருவரோடு பழகி வீட்டை விட்டு போய்விட்டார். அந்த சமயத்தில் தங்களிடம் வந்து எனது அக்கா மகளை (விஜயகுமாரி) மீட்டுத் தரும்படியும் காதலை விட்டு எங்கள் வசம் வரவேண்டும் என்று தங்களிடம் வேண்டி பரிகாரம் செய்துகொண்டதின் பேரில் ஐயாவின் அருள் சக்தியாலும் துர்க்கையின் ஆசீர்வாதத்தாலும் எனது அக்கா மகள் விஜயகுமாரி எந்தக் குறையுமில்லாமல் நல்லபடியாக வீடு வந்து சேர்ந்துள்ளார். தனது காதலையும் மறந்து நல்லபடியாக எங்கள் சொல் கேட்டு நலமாக உள்ளார் தங்களுக்கு பல ஆயிரம் நன்றிகளை நானும் எனது குடும்பத்தாரும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**நாகம்மா, திருக்கோணமலை.**

கௌரவத்திற்குரிய சாமி ஐயா அவர்களே! பலகோடி வணக்கத்துடன் நான் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். மார்கழி மாதம் 2003ஆம் ஆண்டு எனது கணவனின் நோய்காரணமாக தாங்களிடம் ஆசீர்வாதம் கேட்டு வந்த போது எனது வெளிநாட்டு பயணம் தடைபட்டுக் கொண்டிருப்பதை தங்களிடம் சொன்னேன். அதற்கு பயப்படாதே என்று எனக்கு அட்சரக் கூடு கட்டிவிட்டீர்கள் ஐயா ஆனால் தாங்கள் சொன்ன தினத்தில் நாளை 08.02.2004 அதிகாலை 4.00மணிக்கு வெளிநாட்டு போகின்றேன் ஐயா. உங்களுக்கு மிகுந்த நன்றி கூறி விடை பெறுகின்றேன். வெளிநாடு போய் சுபீட்ச வாழ்வு கிட்ட எனக்கு ஆசீர்வதியுங்கள் ஐயா

நன்றி

**கமலகுமாரி, மட்டக்களப்பு!.**

கனம் மேன்மைதங்கிய பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களுக்கு கமலகுமாரி எழுதிக்கொள்வது!

ஐயா எனது தொழிலில் ஏற்பட்ட எனது மேல் அதிகாரிகளின் தொல்லை, பிரச்சினைகள், காரணமாக சகோதரன் சாமித்தம்பியின் அறிமுகத்துடன் தங்களிடம் ஆலோசனை கேட்டு வந்தபோது அன்னை துணையுடன் தங்களின் அருட் கடாச்சத்துப் பரிகாரத்தின் பின் தொழில் அதிகாரிகளின் தொல்லை நீங்கி சுபீட்சத்துடன் தொழில் செய்கின்றேன் என்பதை நன்றியுடன் தெரியத் தருவதோடு மேலும் எனக்குள்ள சிறுசிறு பிரச்சினைகளுக்கு ஆசீர்வாதம் தாருங்கள் என்று த்யவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வராஜ், கொழும்பு-13**

அருள்ஞானசித்தர் ஜோதிட பக்குவ இளமை ஐயா அவர்களுக்கு! எனது மகள் ராதிகாவின் ஜாதகத்தை தங்களிடம் கொடுத்து அவளின் திருமண விடயம் கேட்ட போது கணித்து பார்த்து 21-5-2004க்குள் திருமண வாய்ப்பு உண்டு; அதுவும் வெளிநாட்டு வரன் தான் அமையும் என்று ஆணித்தரமாக கூறினீர்கள். ஐயா நாங்கள் முற்றிலும் எதிர்ப்பார்க்காத விதமாக ஐயா குறிப்பிட்ட கால எல்லைக்குள் எனது மகளுக்கு வெளிநாட்டு வரன் ஒரு நல்ல இடத்தில் இருந்து வந்து முடிவாகியுள்ளது. சொன்னது பலித்துவிட்டது. ஞானத்துடன் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை என்பது நிரூபணமாகிவிட்டது. 12-2-2004ம் ஆண்டு எனது மகளுக்கு நிச்சயதார்த்தம் நடக்கின்றது. ஏல்லாம் ஐயாவின் ஆசீர்வாதம். ஐயாவின் சேவை மென்மேலும் வளர ஸ்ரீ துர்க்கையைப் பிராத்திப்பதோடு, நானும் எனது குடும்பமும் என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்பதையும் கூறிக்கொள்கிரோம்.

நன்றி

**பாதிமா!**

கனம் மதிப்பிற்குரிய சாமி ஐயா அவர்களுக்கு வணக்கத்துடனும் நன்றியுடனும் எழுதும் கடிதம்.

ஐயா! எனது தகப்பன் பாரூள் குடிக்கு அடிமைப்பட்டு குடித்து குடித்துத் தன்னையே அழித்துக்கொள்வதைத் தங்களிடம் வந்து முறையிட்டபோது அதை நிறுத்தி தருவதாக கூறி செய்த பரிகாரத்தின் பின் எனது தகப்பன் படிப்படியாக முற்றாகவே குடியை நிறுத்திவிட்டார் என்பதை குடும்பத்தில் அனைவரும் சந்தோஷத்துடன் ஐயாவிடம் கூறிக்கொள்வதோடு மேற்படி எனது தகப்பனின் காலில் உள்ள புண் வருத்தத்தையும் குணப்படுத்தி அவரைக் காப்பாற்றித்தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்

**குறைம் சுவிஸ்!**

அன்புள்ள சாமி ஐயா அவர்களுக்கு பணிவுடன் எழுதிக்கொள்வது யாதெனில், நான் என்னுடைய வருத்தம் சம்பந்தமாகத் தங்களுடன் தொலை பேசி ஊடாகத் தொடர்புகொண்டு எனது வேதனையைத் தங்களுக்குத் தெரித்தேன். தாங்களும் என்மீது கூடிய கவணம் செலுத்தி ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளுடன் எனக்கு உதவி செய்தீர்கள். அதன் பின்பு என்னுடைய வேதனைகள் மிகவும் குறைந்துள்ளது. எனவே தங்களையும் ஸ்ரீ துர்க்கை அம்மனையும் எப்பொழுதும் வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரிக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

# நெருப்பில் பூத்த மலர்கள்

**இலங்கையில் 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்து முற்போக்கு சிங்களக் கவிஞர்கள் சிலர் எழுதிய கவிதைகளும் அவற்றுக்கான குறிப்புகளும் இங்கே தரப்படுகின்றன. தமிழ் - சிங்கள இலக்கிய உறவுப் பாலமாகத் திகழ்ந்த அமரர் எம்.எச்.எம். ஷம்ஸ் "அமுது" சஞ்சிகையில் எழுதி வெளியிட்ட இந்த ஆக்கம் இங்கே பிரசுரமாகிறது.**

1983 ஜூலைக் கடும் புயலின் பயங்கர நினைவுகள்......

சிங்களக் கவிஞர்கள் இது பற்றி என்ன கூறுகிறார்கள்? இன, மத, பேதங்களைக் கடந்து மனித நேயப் பாட்டையிலே துளிர்த்த அவை - நெருப்பிலே பூத்தவை. மேத்தாவின் வார்த்தையில் அக்கினிப் பூக்கள்.

வாள் கத்தி கரம் தாங்க
வன விலங்காய்த்
திரண்டு
ஆள் பெயர் ஊர்
கேட்டு
ஆவி பல பறித்து
தர்மத்தின் நாமத்தில்
தாவிக் கொள்ளையடித்து
வர்ஷித்த (து) ஊழி மழை
மா கொடுமை பாரீர்

இக் கவிதை காவியுடையணிந்த பௌத்த துறவியொருவரின் படைப்பு. பதகிரியே மேத்தானந்த தேரர் அவரது நாமம். பௌத்த தர்மத்தின் நாமத்திலேயேதான் அத்தனை அட்டூழியங்களும் அரங்கேறியுள்ளனவாம். மனிதர்களால் இத்தனையையும் செய்துவிட முடியாது. எனவேதான் வனவிலங்குக்கும் உவமககறாா அவா.

ஜ"லைப் பெரு நெருப்பால் பாதிக்கப்பட்டவர்கள் பல நிறத்தவர்கள். கடலை வியாபாரி, பாதணி திருத்துபவர், பாதை சுத்திகரிப்பவர்.......

இவர்களெல்லாம் அன்றாடம் பாதையில் சந்திக்கும் சாமானியர்கள். நமது கவிஞரின் கண்கள் அவர்களைத் தேடுகின்றன.

நேற்றும் முந்தநாளும் நமக்குள் ஒருவராக இருந்த அவர்களை ஏனோ காணவில்லை. அவர்கள் எங்கே சென்றுவிட்டார்கள்?

ஏக்கம் கலந்த தேடல் இது:

கண்கள் கூசும்
சமையலறைச் செந்தீயால்
முகமெல்லாம் வியர்க்க
கடலை வடை
கஜு வறுக்கும்
அந்த நறுமணத்தை
இழந்துவிட்டது காற்று
உன் வீட்டு இடிபாட்டில்
சாம்பல் தான் தெரிகிறது
பாதணி யறுந்து
கால் வலிக்க ஓடுகையில்
வழிப்புறங்களில் உன்
இயங்கும் கரங்களைத் தேடி
விழிச் சிறகசைத்தேன்
மைல்கள் கடந்தும்
உன் நிழலைக் காணேன்

இப்படி சோகக்
கவி இசைப்பவர்
மொனிகா ருவன்
பத்திரன. ஒரு பெண் கவிஞர்.

மற்றொரு காவியுடைக் கவிஞர் குடை திருத்தும் வேலுவின் பரிதாப நிலை கண்டு கண்ணீர் சிந்துகிறார். இந் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக மனித விழுமியங்களைப் பக்குவமாக்கிய அந்த 'தர்மம்' என்ன செய்தது? அந்தப் பிக்குவின் ஆவேசம் :

வேலுவின் உயிரற்ற
நீட்டங்கம் பார்த்தபடி
கருங் குடைத் துணியின்
கண்கள் செந்நீர் வடிக்கும்

இரண்டாயிரம் ஆண்டுகள்
தர்மோபதேசம் புரிந்த
கருணையும் சாந்தியும்
சாக்கடைக்குள் பதுங்கி
நாதியின்றிப் பார்த்திருக்கும்
செய்வதென்ன?
செல்வதெங்கே?
என்பன புரியாமல்.

இப்படி எழுதியவர் மண்டவல பஞ்ஞாவாஸ தேரர். போதிமாதவனின் தந்தத் தாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட புனித மாதம் ஜூலை மாதம். எனவேதான் எஸல பெரஹரா அந்த மாதத்தைச் சிறப்பிக்கிறது. இந்தப் பெரஹராவைப் பார்க்க கிராமத்துக்கு வரும்படி மனைவி அழைப்பு விடுக்கிறாள். கணவன் ஒரு கவிஞன் அவனுக்கு அதே ஜூலையில் நடைபெற்ற மற்றுமொரு பெரஹரா நினைவுக்கு வருகிறது. அங்கதச் சுவையுடன் மனைவிக்கான கடிதம் கவிதையாகிறது....

"பெரஹரா காண
புறப்படுவீரே"
லீவெனக்கில்லை
அதனால்
நான் வர
வில்லை

கடந்த
காலங்களில்
கொழும்பு
நகரிலும்
பெரஹரா நடந்ததாம்
இல்லை
மந்தைகள் ஊர்வலம்
புனித சின்னமும்
கொடியும் அங்கில்லை
தடியுடன் துவக்கும்
தாங்கின கரங்கள்

தீச் சக்கரத்தை
கைகளில் ஏந்தி
தலையைச் சுற்றும்
கிரீடையாளருள்
அந்த ஒரு சிலர்
தம் கரம் கொண்டே
தங்கள் சிரசை
எரித்துக் கொண்டனர்.

இந்தப் புது மாதிரி பெரஹராவைப் படைத்தவர் புஷ்பா இலங்கத்திலக என்ற பெண் கவிஞர்.

நகரத்தில் மத்திய வர்க்கக் குடும்பமொன்றைச் சேர்ந்த கவிஞர் ஒருவர். அந்தக் குடும்பத்தில் ஒரே ஒரு குழந்தைச் செல்வம். நாளாந்தம் தம்பதியினர் உத்தியோகத்துக்குப் புறப்பட்டால் அந்தக் குழந்தையைப் பாராமரிப்பவள் ஒரு தமிழ்ப் பெண். வேலைக்காரியாக மட்டுமன்றி பாசத்தைச் சொட்டும் அன்னையாகவும் அவள் திகழ்கிறாள். இனவாதப் பேய் அவளைத் துரத்திவிடுகிறது. அழுகின்ற குழந்தையை ஆறுதல்படுத்த முடியாமல் அந்தக் குடும்பம் அவதிப்படுகிறது.

வேலையகம் நாமிருவர்
சென்றால் நீயோ
வாஞ்சையுடன் எம்
சேய்க்கு தாயே ஆவாய்
தாலாட்டித் துயில்விக்க
முடியாதின்று
தவிக்கின்றோம் தங்கம்மா
விரைந்து வாம்மா.

லால்ஹேகொட தங்கம்மாவுக்கு விடுக்கும் கவிதை அழைப்பு அது.

பல கலாசாரக் கூறுகளால் பின்னப்பட்ட வர்ணமயமான சமூகப் பூங்கா சீரழிந்துவிட்டதை சிங்களக் கவிஞர்களின் மனிதநேய மனங்கள் உணர்ந்தன. கண்ணீர் உதிர்த்தன. எனவேதான் பாரபட்சமின்றி தமது உள்ளக்கிடக்கையை கவியாக்கினர். ஜூலை நெருப்பில் பூத்த இந்த மலர்கள் இனவாத இருட்டுக்கு எதிரான சிவப்பு மலர்கள்!

-நன்றி :- அமுது

## இன்னொருவர் பார்வையில்

# காஸ்ட்ரோவின் சோகக் கதை

***இது 78 வயதிலும் இன்னமும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் கஸ்ட்ரோவின் கதையல்ல. மட்டக்களப்பு நொச்சிமுனைக் கிராமத்தில் பிறந்து, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு, பதினைந்து வயதில் புலி இயக்கத்தில் சேர்ந்து பல களங்களைக் கண்ட இலங்கைக் காஸ்ட்ரோவின் கதை. பதினைந்து வயதில் விடுதலைப் போராட்டமெனக் கூறிக்கொண்டு துப்பாக்கி ஏந்தியவன், முப்பது வயதில் புலிகளால் "துரோகி" எனப் பட்டஞ் சூட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட ஓர் தமிழ் இளைஞனின் சோகக் கதை. கொழும்பு புறநகர்ப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த ஏழு பேரில் காஸ்ட்ரோவும் ஒருவன். இவனது கதையை 'எழுவான் கரையான்' என்பவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் "உதயம்" மாத இதழில் வெளியிட்டிருந்தார். அது இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகிறது.***

எழுவான்கரைப் பகுதியான நொச்சிமுனைக் கிராமத்தில் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவனே காஸ்ட்ரோ எனப் புலிகளால் பெயர் சூட்டப்பெற்ற கந்தையா ஆனந்தகுமார். தந்தை கிராம சேவகர். தாய் ஆசிரியை. படிப்பைக் கெடுத்துக் கொண்டு தனது 15 ஆவது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான். அவன் பிறக்கும்போதே இதயம் பலவீனப்பட்டவனாக இருந்தான். தொழில்நுட்பம் சார் அறிவு நிறையவே அவனுக்கு இருந்தது. இதனால் கருணா, காஸ்ட்ரோவை தனது மெய்க்காவலர் அணியில் சேர்த்துக்கொண்டு, தொலைதொடர்பு சாதனங்களுக்குப் பொறுப்பாக நியமித்திருந்தார்.

1989-90 பகுதிகளில், புலிகளின் மட்டக்களப்புத் தலைமையுடன் நான் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்த காலத்தில் புலிகளின் கஞ்சிகுடிச்சாறு பகுதிக்கு கருணாவைச் சந்திக்கச் சென்றிருந்த வேளை, எனது உறவுக்காரனான காஸ்ட்ரோவைச் சுட்டிக்காட்டி "மிகத் திறமையான தொழில் நுட்பப் புத்தியுடையவன்" எனக் கருணா என்னிடம் கூறியிருந்தார். 15 வருடங்களுக்கு மேலாகப் புலிப் போராளியாக இருந்த காஸ்ட்ரோ, கருணாவின் மெய்ப்பாதுகாவலனாக இருந்து, கருணா முன்னின்று நடத்திய பல படை நடவடிக்கைகளில் பங்குபற்றியவன். கருணா விவகாரம் வெடித்து, பின் கருணா தனது படைகளைக் கலைத்த பின்னர் இவன் வெளிநாடு செல்லும் நோக்கில் கொழும்பு சென்று தங்கியிருந்தான். இவனுக்கான தங்குமிட வசதிகளை கருணாவே செய்து கொடுத்திருக்க வேண்டும். கொழும்பு சென்றது முதல் என்னுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டிருந்தான். அவன் அவுஸ்திரேலியா வந்துவிடவே விரும்பினான். இதனால் முதலில் மத்திய கிழக்கிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட்டபோதும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவுஸ்திரேலியா வருவது சாத்தியமில்லை எனக் கண்டவுடன், மத்திய கிழக்குக்குச் செல்லும் முயற்சியை மீண்டும் ஆரம்பித்து, கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் கூட துபாய்க்கு வேலைக்குச் செல்லவென நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும் சென்றிருந்தான். கொல்லப்படுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என்னுடன் கதைத்தபோது கருணா அம்மான் தொலைபேசி மூலம் கேட்டதாகவும், தான் வெளிநாடு செல்ல விரும்புவதாகக் கூறி கருணா அம்மானின் அந்த அழைப்பைத் தான் ஏற்க மறுத்துவிட்டதாகவும் என்னிடம் கூறியிருந்தான். காஸ்ட்ரோ கொழும்பு சென்ற பின்னர் மட்டக்களப்பு திரும்பவில்லை. தனது கல்வித் தராதரப் பத்திரங்களைக் கொழும்புக்கு கொண்டு வந்து தருமாறு தனது உறவினரை கேட்டுப்பெற்றிருந்தான். கருணாவின் மெய்க்காவலனாக கருணாவுடன் புலிகளின் ஐரோப்பிய நகரப் பேச்சுகளில் கலந்துகொள்ளச் சென்றிருந்ததால், காஸ்ட்ரோவிடம் இலங்கை அரசின் சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு இருந்தது. காஸ்ட்ரோ இரு அணியினருக்கும் இடையிலான சகோதரப் படுகொலைகளில் கலந்துகொள்ளவில்லை.

அத்தகைய விருப்பும் கொண்டிருக்கவில்லை. பிரபா அணி புலிகளின் மட்டக்களப்பு அரசியற் பிரிவுத் தலைவனாக இருந்த சேனாதி சுடப்பட்டு, பின்னர் வைத்தியசாலையில் இறந்த காலகட்டத்தில் என்னுடன் தொலைபேசியில் கதைத்தபோது, அந்த இழப்பையிட்டு மனவருத்தப்பட்டே கதைத்திருந்தான். ஆனால் தன்னுடன் இருந்த ராஜன் என்பவன் புலிகளின் கையாளாக மாறி தன்னைப் பற்றியும் தன்னுடன் இருந்த ஏனையோர் பற்றியும் புலிகளுக்கு தகவல் கொடுத்து, தங்களைக் கொலை செய்யச் சதி செய்கிறானென்று காஸ்ட்ரோ நினைத்திருக்கவில்லை. உண்ட உணவில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டு தூங்கிக்கொண்டிருந்த நிலையில் எந்த இயக்கத்திற்காக தனது வாழ்நாளில் அரைவாசி காலப்பகுதியை அர்ப்பணித்தானோ, அந்த இயக்கத்தினால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான். முப்பது வயதில் அவன் உயிர் பிரிந்தது. 15 வருடங்கள் புலிகளுக்காகப் போராடியதில் காஸ்ட்ரோ எதனையும் பெறவில்லை. கடைசியில் துரோகி என்ற பட்டத்துடன் புலிகளால் நயவஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டிருந்தான். தன் வாழ்நாளில் அரைவாசிப் பகுதியைத்

தன் இன விடுதலைக்காய் அர்ப்பணம் செய்து போராடிய காஸ்ட்ரோ புலிகளால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டான்.

# மதசார்பின்மையும் சகிப்புத்தன்மையும் மாற்றுக் கருத்துக்கள் பலப்பட உதவியுள்ளன

## -"ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" கருத்தரங்கில் சோனியா காந்தி

***புதுடில்லியிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியான "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" அண்மையில் நடத்திய கருத்தரங்கில் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன. இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் இக் கருத்தரங்கில் உரையாற்றியமை குறிப்பிடத் தக்கது.***

இந்தியா பற்றியும் உலகைப் பற்றியும் எமது பார்வையைச் செலுத்துவதற்காக இங்கே குழுமியிருக்கிறோம். இந்த இரண்டுமே ஒன்றோடொன்று தொடர்புடையவை. இந்தியா அக்கறை செலுத்த வேண்டிய ஒதுக்கித் தள்ள முடியாத உண்மையான பல பாதுகாப்புச் சமாச்சாரங்கள் பல இருக்கின்றன. இதனால் தனது அண்டை நாடுகளுடன் மேலும் கூடிய அரசியல் மற்றும் பொருளாதாரப் பங்குதாரச் செயற்பாடுகளை இந்தியாவினால் மேற்கொள்ள முடியும். மேற்கொள்ளவும் வேண்டும். அதற்கு இந்தியா தலைமை கொடுக்குமென்றும் நம்புகிறேன். உலக அரங்கில் இந்தியா சரியானதொரு இடத்தைப் பிடிப்பதற்கு இதுவொரு அத்தியாவசியமான முன்தேவையாகும்.

உலகில் ஆச்சரியப்படத் தக்க வேகத்துடன் திட்டவட்டமான, அடிப்படையான மாற்றங்கள் பெருமளவில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமை எப்பொழுதுமே நீடித்திருக்குமா வென்று ஒருவர் கேட்கலாம். ஒரு புதிய சுதந்திரமாக தேசம், அரசென்ற வகையில் இந்தியாவில் எமது முன்னோடித் தலைவர் கள் சிறந்த இராஜதந்திரத்தையும் துணிவை யும் வெளிப்படுத்த வேண்டிய நிலைமை களைக் கையாள வேண்டியிருந்தது. ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் பாதுகாப்பற்ற ஓர் உலகத்தையுமே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இரு தரப்பாகப் பிரிந்த உலகின் மோதல்கள், எமது அயல்நாடுகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் அயல்நாடுகளில் இடம்பெற்ற யுத்தங்களுக் கூடாக அவர்கள் தமது கோட்பாடுகளை முன்னெடுத்துச் சென்றனர்.

நாம் இப்போது எதிர்கொள்ளும் சவால்கள் வித்தியாசமானதொரு வகையைச் சேர்ந்தவை. தேசங்கள் அரசுகளுக்கிடையிலான பழைய பிணக்குகளும் மற்றும் தேசங்கள் அரசுகளின் முகாம்களுக்கிடையிலான பழைய பிணக்குகளும் வளர்ந்துவரும் பயங்கரவாத நெருக்கடியை ஏற்படுத்தின. அரசு சார்ந்தவர்களுக்கும் அரசு சாராதவர்களுக்கு மிடையிலான வித்தியாசத்தை மங்கலாகக் காட்டுகின்ற ஓர் எதிரி இதுவாகும். எந்தவித எல்லைகளையும் அங்கீகரிக்காததும் அடையாளப்படுத்தக் கூடிய பூகோள எல்லைகளுமில்லாததுமான ஓர் எதிரியே இது. இதேவேளை எமக்குப் பரிச்சயமான இருபதாம் நூற்றாண்டின் பிந்திய அரைவாசிப் பகுதி ஆண்டுகள், குழப்பமான சமநிலையற்ற தன்மைக்கு இடங்கொடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் போன்ற மரபுவழி ஸ்தாபனப் பொறிமுறைகள் இதற்கு முகங்கொடுக்கத் தயாராக இல்லை. அதற்குப் பொருத்தமாகவும் இல்லை. ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றம் பிரமிக்கத் தக்கது. ஆனால், அதன் பலாபலன்கள் தேசத்துக்குள்ளும் தேசங்களுக்கிடையிலும் சமத்துவமற்ற முறையில் உள்ளன.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு உலகத்தில் இந்தியாவின் இடம் எப்படியிருக்கப் போகிறது? நிச்சயமாக எமது தேசத்திலும் எமது மக்கள் மத்தியிலும் தொடர்ந்திருந்து வந்த ஜனநாயகம், மாற்றுக் கருத்து மற்றும் அபிவிருத்தியென்ற முக்காலியையே அது அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்தியாவின் வெளிப் பலம் அதன் உள்ளார்ந்த ஐக்கியத்தில் தங்கியுள்ளது. இந்தியாவின் உலகளாவிய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதென்பது, உள்நாட்டு சௌஜன்யமென்ற மாபெரும் அமைப்பில் தங்கியுள்ளது. இந்தியா இப்போதிருப்பதைப் போன்று உலகில் பிரத்தியேகமானதாகக் காணப்பட வேண்டுமானால், அது நாட்டுக்குள் உள்ளார்ந்த தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். உறவுகளில் காணப்பட்ட ஏனைய நாடுகளுடன் நாம் கொண்டிருந்த சுறுசுறுப்பு, சுதந்திரம் ஆகியவற்றில் எமக்குக் கிடைத்த மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை, தாராளவாதம் ஆகியன எமது தேசியத் தன்மையில் அவசியமாக இருக்க வேண்டும்.


எமது நீண்ட பாரம்பரிய சகிப்புத் தன்மை மற்றும் மதச்சார்பின்மை ஆகியவற்றினால் எமது பல்வேறு கருத்துக்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. சமய மற்றும் இன வேறுபாடுகளால் ஏற்படுத்தப்பட்ட பிரிவினை வன்செயல் மற்றும் பிணக்குகளால் பல தேசங்களைச் சுக்குநூறாக்கிய ஓர் உலகத்துக்கு ஓர் உதாரணமாக இன்று எம்மை மாற்றியுள்ளன. அபிவிருத்தி தொடர்பாக நாம் கொண்டிருந்த தொடர்ச்சியான கடப்பாடு அழுத்தம் தரும் பலாபலன்களை ஏற்படுத்தியுள்ளன. நாம் ஈட்ட வேண்டியவை பெருமளவு இருக்கின்ற போதிலும், கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் பெறப்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள் மறுக்கப்பட முடியாதவை.

பன்முக சமூக அமைப்பில், சௌஜன்யத்துடன் வாழும் நூறு கோடி மக்களைக் கொண்ட ஜனநாயக நாடு எம்முடையது. உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரத்தை நாம் கொண்டுள்ளோம். இவற்றுக்குச் சான்று பகிர்கின்றவற்றை எவரும் இலகுவில் சந்தேகிக்க முடியாது. எனினும், இரண்டாம் உலக யுத்தத்தின் வெற்றி அல்லது தோல்வியின் அடிப்படையில் பல நாடுகளைக் கொண்ட அரசுக் குழுவாக உலகம் இன்னும் கருதப்படுகிறதென்பதை அறியும்போது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. உதாரணத்துக்கு ஐ.நா.பந்தோபஸ்துச் சபையின் அமைப்பு வெறுமனே போதிய பிரதிநிதித்துவமற்றதென்பது மட்டுமல்ல புத்திபூர்வமற்றதுமாகும்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**நா**கேஷ் அப்போது நடிகர் பாலாஜியின் நாடகங்களில் நகத்துக் கொண்டிருந்தார். எனக்குப் பால் பழமெல்லாம் வாங்கிக் கொடுத்து தனக்கு ஒரு நாடகம் எழுதித் தரச்சொல்லி, நாகேஷ் என்னை நச்சரித்துக் கொண்டிருப்பார். நான் இரண்டு சீன்கள் எழுதிவிட்டு சுருண்டு படுத்துக்கொள்வேன். Yor are



killing the time.... என்று நாகேஷ் என்னிடம் புலம்பாத நாளே இல்லை.

நாகேஷைப் பற்றி, இந்த இடத்தில் நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும்.

சகலகலா வல்லவன் என்கிற பெயருக்குப் பொருத்தமானவரை நாகேஷைத் தவிர பிறிதொரு பிறவியை நான் இது காறும் சந்தித்ததில்லை.

கேரம் விளையாட்டில், ஸ்டிரைக்கரை எடுத்தால், ஒன்பது காய்களையும் பாக்கெட்டில் அனுப்பிவிட்டுத்தான் ஓய்வார் நாகேஷ் டெபிள் டென்னிஸில் அவருக்கு இணையே கிடையாது அற்புதமாகப் பாடுவார். கர்நாடக ராகங்கள் பல அவருக்கு அத்துப்படி மேலை நாட்டு நடனங்களெல்லாம் அவருக்கு விரல் நுனியில் நல்ல நல்ல சிறுகதைகள், -கட்டுரைகள் எழுதுவார். கிரிக்கெட் விளையாட்டில் அவர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார், எப்பவோ இன்னொரு கவாஸ்கராக ஆகியிருப்பார். அந்த ஒல்லியான உருவத்திற்குள் இறைவன் இத்துணை திறமைகளை ஒளித்து வைத்திருந்ததைப் பார்த்து நான் வியந்ததுண்டு. இவ்வளவு இருந்தும் திரைப்படத்தில் சரியன வாய்ப்பு கிடைக்காமல் நாகேஷ் போராடிக் கொண்டிருந்த காலம் அது.

நான் எப்போதும் நாகேஷின் அறையில்தான் இருப்பேன். அந்த அறையில் மற்றும் இருவர் தங்கியிருந்தனர். ஒருவர் நாகேஷின் சொந்த ஊரான தாராபுரத்தைச் சேர்ந்தவர். இவர் அண்ணாமலை சர்வ கலாசாலையில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். இசையரசு தண்டபாணி தேசிகரின் பிரதான சீடர்.

நாள் எழுதும் பாட்டுக்களுக்கெல்லாம் இந்த தாராபுரத்துக்காரர் மெட்டுப் போட, அதை நாகேஷ் வாய்விட்டுப் பாடுவார். அந்த இசைக் கலைஞரும் திரைப்படத்தில் பாட முயற்சித்துக் கொண்டிருந்தார் தான்.

செல்லுகின்ற படக் கம்பெனிகளுக்கெல்லாம் தான் இசையமைத்திருந்த என்னுடைய பாடல்களைப் பாடிக் காட்டி வாய்ப்புக் கேட்பார். பிறகு இவர் திரு. எம்.எஸ் விஸ்வநாதன், திரு.கே.வி. மகாதேவன் முதலிய புகழ் வாய்ந்த இசையமைப்பாளர்களிடம் படப் பாடல்களைப் பாடினார் செல்வம் என்னும் திரைப்படத்தில் திரு கே.வி.மகாதேவன் இசையில் சிவாஜியும் - விஜயாவும் நடித்துப் பாடிய உனக்காகவா! எனக்ககாவா! என்ற என்னுடைய பாடலை இந்த தாராபுரம் சுந்தரராஜன்தான் பாடினார். அதுமிகவும் பிரலமாயிற்று திரு. ராமண்ணா அவர்கள் இயக்கிய ஒரு படத்திற்கும், திரு. சித்திர கால் கிருஷ்ணமூர்த்தி இயக்கிய படத்திற்கும் அந்த தாராபுரம் சுந்தரராஜன் இசையமைத்திருக்கிறார். என்னுடைய இனிய நண்பரான இவர், என் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தார் இவரால் தான். பல படக் கம்பெனிகளில் என் பாட்டுத் திறமை தெரிய வந்தது.


அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரிந்த கொண்டிருந்த வெங்கட்ராமன் என்பவரும், கிளப் ஹவுஸில் எங்களோடு தங்கிருந்தார். எங்கள் அனைவருக்கும் இவர்தான் அரிசி, பருப்பு வாங்கி அற்புதமாகச் சமைத்து அறுசுவை உணவளிப்பார். நான், நாகேஷ், தாராபுரம் சுந்தரராஜன மூவரும் பொருளாதார ரீதியில் மிகமிக சிரம தசையில் இருக்க இந்த வெங்கட்ராமன் ஒருவரே சம்பாதித்தவர். இவர் தனக்குச் சமைத்துக் கொண்டு எங்களக்கும் சமைத்துப போட்டார்.

(தொடரும்.......)



---

**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....**




## சில அநுபவங்கள்

**ரிச்சர்ட்டின் இருப்பிடம் தெரிந்த பிறகு அவனை மீட்டு வருவதில் கஷ்டம் இருக்கவில்லை.**

**உளவு பார்த்தல் மிகவும் புராதனமான கலை. காட்டுமிராண்டிகளாக மனிதர்கள் வாழ்ந்த காலத்திலே கூட ஒருவனிடம் உள்ள பொருள்கள் என்ன என்று அறிவதற்கு இன்னொரு மனிதனை அனுப்பி வேவு பார்க்கின்ற பழக்கம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.**

**கி.மு. 200ஆம் ஆண்டில் அதாவது இன்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததாகச் சொல்லப்படுகின்ற சம்பவம் அந்தக் காலத்திலேயே உளவு பார்த்தல் இருந்ததைத் தெரிவிக்கிறது.**

**பைபிள் கதை:**

**ஜெரிக்கோ நகரின் பாதுகாப்பு எப்படி அமைந்துள்ளது எனத் தெரிந்துகொள்ள ஜோஷ்வா விரும்பினான். அந்த நகரின் மீது தாக்குதல் நடத்துமுன் அது பற்றி அறிய அவன் ஆசைப்பட்டான். அறிந்து வர இரண்டு உளவாளிகளையும் அனுப்பி வைத்தான்.**

**உளவாளிகள் இருட்டுகின்ற நேரத்தில் ஜெரிக்கோ நகரத்தில் அங்குள்ள பிரபல தாசியான ரஹாப் என்பவளின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு வருகின்ற பிரமுகர்களிடம் பேச்சுக் கொடுத்து தகவல்களை அறிவது சுலபம் என்று எண்ணினார்கள்.**

**ரஹாப் பேரழகி. ஜெரிக்கோ நகரின் இராணுவத் தளபதிகள் பலரும் இன்பம் நாடி அவளுடைய வீட்டிற்கு வருவதுண்டு. உளவாளிகள் ரஹாபின் வீட்டிற்குச் சென்று, அவளுக்கு வேண்டியதைக் கொடுத்து, அவளைத் தம் வசப்படுத்தி அங்கே காத்திருந்தார்கள்.**

**ஜெரிக்கோ நகரின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றும் இருந்த வீரர்கள் இருட்டுகின்ற நேரத்தில் இரண்டு அந்நியர்கள் ரஹாபின் வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டார்கள். அவர்கள் ரஹாபிடம் வந்து விசாரணை நடத்தினார்கள். இரண்டு பேர் வந்தது உண்மைதான் என்றும் அவர்கள் தன்னோடு சற்று நேரம் தங்கி இருந்துவிட்டு உடனே புறப்பட்டுப் போய்விட்டார்கள் என்றும் ரஹாப் பொய் சொன்னாள்.**

**பாதுகாப்பு வீரர்கள் வருவதைப் பார்த்த உடனேயே உளவாளிகள் இருவரையும் பாதுகாப்பான இடத்தில் ரஹாப் ஒளிய வைத்துவிட்டாள்.**

**வந்த பாதுகாப்பு வீரர்களும் அழகி ரஹாபுக்குத் தொல்லை கொடுக்க விரும்பாமல் விடைபெற்றுப் போய்விட்டார்கள். உளவாளிகள் சேகரிக்க வேண்டிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டார்கள். ரஹாப், உளவாளிகள் இருவரையும் கயிற்றின் உதவியுடன் ஜன்னல் வழியாகக் கோட்டைச் சுவருக்குக் கீழே எவருக்கும் தெரியாமல் இறக்கிவிட்டுத் தப்பிப் போகச் செய்தாள்.**

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

## படித்ததில் பிடித்தது

# முதல் பெண் தோழி

**மு**தலும் கடைசியுமாய் முழுதாய் பாதித்தவள் அவள்தான்...அவளைச் சந்தித்த பிறகு எத்தனையோ பெண்களைச் சந்தித்துவிட்டேன். "அவள் ஏற்படுத்திய அந்த அதிர்வலைகளை இதுவரை எவரும் ஏற்படுத்தவில்லை எனக்குள்."

நான் சந்தித்த முதல் பெண் அவள்தான். நான் பழகிய முதல் பெண்ணும் அவள்தான். நான் விரும்பிய முதல் பெண்ணும் அவள்தான். நான் அணைத்த முதல்



பெண்ணும் அவள் தான். நான் முத்தமிட்ட முதல் பெண்ணும் அவள்தான். நான் யுத்தமிட்ட முதல் பெண்ணும் அவள்தான். எனக்குப் பிடித்த முதல் பெண்ணும் அவள்தான். என்னைக் கடித்த முதல் பெண்ணும் அவள்தான். என்னைப் பாதுகாத்த முதல் பெண்ணும் அவள்தான். அவளைப் பார்த்த பிறகுதான் மற்றப் பெண்களை நான் பார்த்தேன். பழகினேன். விலகினேன். கரைந்தேன். உறைந்தேன். "எந்தப் பெண்ணும் அவளைப் போல் என்னை ஆட்கொள்ளவில்லை"


கால் முளைத்து விளையாடி பருவத்தில் சந்தித்தது எத்தனையோ பெண்கள். அழகாய், அசிங்கமாய், உயரமாய், குள்ளமாய் கண்டாய், ஒல்லியாய், சுறுசுறுப்பாய், சோம்பேறியாய் எத்தனையோ பெண்கள் எத்தனையோ விதமாய்...எந்தப் பெண்ணும் அந்த முதல் பெண் மாதிரி என்னை முழுதாய் முழுங்கவில்லை.

"பள்ளிப் பருவம் முள்ளாய், பூவாய், மொட்டாய், காயாய், கனியாய், பிஞ்சாய், செடியாய், கொடியாய், மரமாய், எத்தனையோ பட்டாம் பூச்சிகள் என்னைச் சூழ்ந்தது. என்னென்னமோ எனக்குக் கற்றுத் தந்தது. எதை எதையோ யோசிக்கச் சொன்னது. எல்லாம் பிடித்திருந்தது. ஆனாலும் "அந்த முதல் பெண் மாதிரி என்னை அவர்கள் யாரும் ஆட்கொள்ளவில்லை."

பள்ளி முடிந்த வெற்று வெளியில் நிலவாய், விண் மீனாய், வானவில்லாய், வெண் மேகமாய், மழையாய், அருவியாய், பூந்தோட்டமாய், பொற் கூடமாய், அதிசயமாய், ரகசியமாய் எத்தனையோ பெண்களைக் கடந்து வந்தேன். "எந்தப் பெண்ணும் அந்த முதல் பெண்மாதிரி என்னை மயங்க வைக்கவில்லை-காரணம் தெரியவில்லை."

தேடுதலும் ஓடுதலும் நிறைந்த கலையுலகில் கண்கள் சிமிட்டும் சிற்பங்களாய், கால்கள் முளைத்த தென்றல்களாய். சிரிக்கத் தெரிந்த பறவைகளாய், சில்லென்று தழுவும் .மேகங்களாய், ஆடை அணிந்த பொக்கிஷங்களாய், ஆளை மயக்கும் தேவதைகளாய் அப்பப்போ எதிர் பட்டாலும் "எந்த அதிர்வலையும் ஏற்படுத்தவில்லை எனக்குள்." ஏன் என்றால் முதல் பெண்ணிடம் முழுதாய் அதிர்ந்து போனவன் நான்.

நான் இரசித்த பெண்களைவிட என்னை இரசித்த பெண்களே ஏராளம். சொல்லிக் கொள்வதில் சுயம் போகவில்லை எனக்கு. காதலியாய், தோழிகளாய், ரசிகைகளாய், உறவுகளாய் என்னை சுற்றி வளைத்த பெண்கள் எண்ணிக்கை பெரும் கூட்டம். "எந்தப் பெண்ணும் இதயம் தொடவில்லை. அந்த முதல் பெண் மாதிரி தேடித் தேடிப் பார்த்தாலும் தென்படவில்லை. அவள் ஜாடையில் எவளையும்.



மண வாழ்க்கை தொடங்க மரியாதைகயான பெண்கள் வேட்டை தொடங்கிவிட்டது. என் மனம் போல் பார்த்தாலும், என் குணம் போல் பார்த்தாலும், என் பணிக்கு ஏற்ப பார்த்தாலும், என் பண்புக்கு ஏற்ப பார்த்தாலும், சீர்வரிசையோடு பார்த்தாலும், சீமான்களின் மகள்களைப் பார்த்தாலும், இனம் தாண்டிப் பார்த்தாலும் மொழிதாண்டிப் பார்த்தாலும், நாடு தாண்டிப் பார்த்தாலும் "நான் நம்பமாட்டேன் அவள் போல் ஒருத்தி எனக்குக் கிடைப்பாள் என்று"

அவளோடு இருந்தகாலம் அழகானது. அவளோடு இருந்த காலம் சுகமானது. அவளோடு வாழ்ந்த காலம் நிஜமானது. அவளோடு வாழ்வேன் என்பது இனி முடியாதது........முதலும் கடைசியுமாய் முழுதாய் என்னை முழுங்கியவள் அவள்தான்.

**"என் அம்மா......."**

# சமஷ்டி முறை பற்றிய அடிப்படை அறிமுகம்

உலகின் ஏழு கண்டங்களிலும் இருபத்தைந்து சமஷ்டி அமைப்பு முறை உள்ள நாடுகள் காணப்படுகின்றன. அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, இந்தியா, ஸ்பெயின், பிரேஸில், ஆர்ஜென்டீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐக்கிய அமெரிக்கா, கனடா, மலேசியா, ஒஸ்ரியா, பாகிஸ்தான் என்பன அவற்றுள் சிலவாகும்.

இந்த நாடுகளின் வரிசையை உற்று நோக்கும்போது, உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகள் பல சமஷ்டி அமைப்பு முறையைக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். இந்தியா உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சிலதும் இதில் அடங்குகின்றன.

சமஷ்டி அமைப்புள்ள நாடொன்று பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். (பெரும்பாலும் பூகோள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே பிராந்தியங்கள் பிரிக்கப்படுகின்றன) ஒவ்வொரு பிராந்தியத்துக்குள்ளும் அந்தந்தப் பிராந்தியங்களின்

***அதிகாரப் பகிர்வின் போது சகல பிராந்தியங்களுக்கும் சம அளவிலான அதிகாரப் பகிர்வே ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான சமஷ்டி முறையாகும். இதற்கு மாறாக பிராந்தியங்கள் மத்தியில் வெவ்வேறு அளவிலான அதிகாரப் பகிர்வு முறையும் உண்டு. இது மரபு ரீதியற்ற அல்லது சமச்சீரற்ற சமஷ்டி என அழைக்கப்படுகிறது.***

நிர்வாகத்தை நடாத்தும் அரசுகள் காணப்படும். இது பிராந்திய அரசாங்கம் என அழைக்கப்படும். இந்தப் பிராந்திய அரசுகளுக்கு மேலதிகமாக நாட்டில் மத்திய அரசொன்றும் இருக்கும்.

ஐக்கிய அமெரிக்கா ஐம்பத்தெட்டுப் பிரிவுகளைக் கொண்டது. (ஐம்பது பிராந்தியங்களும் எட்டு வேறு பிரிவுகளும்) கனடா பதின்மூன்று பிரிவுகளையும் இந்தியா முப்பத்தைந்து பிரிவுகளையும் ஜேர்மனி பதினாறு பிரிவுகளையும் கொண்டுள்ளன.

நிறைவேற்றதிகாரம், பாராளுமன்றம், நீதித்துறை என்பவற்றிற்கு நாட்டின் அரசியலமைப்பு ரீதியாக வகுக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும்.

மத்திய அரசின் அதிகாரம் நாட்டின் அனைத்துக் குடி மக்களுக்கும் பொதுவான விதத்தில் பிரயோகிக்கப்படும். மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்குமிடையில் தெளிவான அதிகாரப் பகிர்வு காணப்படும். வெளிநாட்டு விவகாரம், தேசிய பாதுகாப்பு போன்ற அம்சங்கள் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வருவதுடன். பிராந்தியத்துக்குள் கல்வி, சுகாதாரம், நலன்புரித் திட்டங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தைப் பிராந்திய அரசுகள் கொண்டிருக்கும்.

கனடாவின் மத்திய அரசிற்கு பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான வர்த்தகம், ஆதிவாசிகள் தொடர்பான விடயங்கள், சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல், நிதி மற்றும் வங்கிச் செயற்பாடுகள், இடைக்கால நிர்வாகப் போக்குவரத்து போன்ற துறைகளில் பூரண அதிகாரம் இருக்கிறது. அதே போல் கனடாவின் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் வரி, பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள், சுகாதாரம், நலன்புரி விடயங்களில் முழு அளவிலான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் மத்திய அரசுக்கு தேசிய பாதுகாப்பு, அணுசக்தி, பிரஜா உரிமை, வருமான வரி போன்ற துறைகளில் பூரண அதிகாரம் காணப்படுவதோடு, பொலிஸ் துறை, வரி, விவசாயம், சுகாதாரம் போன்றவற்றின் அதிகாரங்களை பிராந்திய அரசுகள் கொண்டிருக்கின்றன.

அதேவேளை, குற்றவியல் தடுப்புச் சட்டம், கல்வி, மின்சாரம், தொழிற்சங்க செயற்பாடுகள் போன்ற சில அம்சங்களை மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றிணைந்த அதிகார வரையறைகளைக் கொண்டுள்ளன. எந்தவொரு சமஷ்டி முறையின் கீழும் ஒரு சில விடயங்கள் தவிர்ந்த ஏனைய துறைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் பிராந்திய அரசிற்கு வழங்கப்படும்.

மத்திய அரசின் அதிகாரம் குறித்தும் பிராந்திய அரசின் அதிகாரம் குறித்தும் இவ்விரண்டு தரப்பினரும் கலந்தாலோசித்து வரையறை செய்துகொள்ள முடியும். ஆரம்பத்தில் கனடாவின் மத்திய அரசு தேவையானபோதெல்லாம் பிராந்திய அரசுகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடியதாக இருந்தது. மேலும் தேவையேற்படின் சில சந்தர்ப்பங்களில் பிராந்திய அரசுகளின் அதிகாரங்களை மத்திய அரசு தன்வசமாக்கிக்கொள்ளவும் முடியும்.

அதிகாரப் பகிர்வின்போது சகல பிராந்தியங்களுக்கும் சம அளவிலான அதிகாரப் பகிர்வே ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான சமஷ்டி முறையாகும். இதற்கு மாறாக பிராந்தியங்கள் மத்தியில் வெவ்வேறு அளவிலான அதிகாரப் பகிர்வு முறையும் உண்டு. இது மரபு ரீதியற்ற (சமச்சீரற்ற) சமஷ்டி என அழைக்கப்படுகிறது.

முழு நாட்டுக்கும் பொதுவான தீர்மானங்கள் மத்திய அரசினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்போது பிராந்திய அரசுகளின் கருத்தை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தவும், மத்திய அரசின் ஆலோசனைகள், தீர்மானங்களுக்கு உடன்பாடு, ஆட்சேபம் தெரிவிக்கவும், மத்திய அரசில் பிராந்திய அரசுகளின் பிரதிநிதித்துவம் அவசியமாகும்.

இந்தச் செயன்முறையை இலகுபடுத்தும பொருட்டு சமஷ்டி நாடொன்றின் பாராளுமன்ற அமைப்பு இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கும். இதில் ஒரு பிரிவு பிராந்திய அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் செனட் சபைகளையும் இந்தியாவின் ராஜ்ய சபை, ஜேர்மனியின் சமஷ்டி கவுன்ஸில் என்பவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூற முடியும். மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதத்தை நாட்டின் அரசியலமைப்பு குறிப்பிடும்.

அமெரிக்கா மற்றும் கனடா அரசியலமைப்புகளில் மத்திய அரசின் அதிகாரங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு, ஏனைய அதிகாரங்கள் பிராந்திய அரசுகளுக்கும் உரித்தாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பில் மத்திய, பிராந்திய அரசுகளுக்கான அதிகாரங்கள் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் தொடர்பிலும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் மத்திய, பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தெளிவாக எழுதிய அரசியலமைப்புச் சாசனம் ஒன்றின் மூலம் அதிகாரம் தொடர்பான பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்க முடியும். எழுதி வைத்தால் மட்டும் போதாது. அவ்வரசியலமைப்பு சாசனம் சகலராலும் அதியுயர் கௌரவத்தைக் கொண்டதாகக் கருதப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க திருத்தங்களை மேற்கொள்ளும்போது மத்திய, பிராந்திய அரசுகளின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்.

சமஷ்டி அமைப்புக் குறித்து ஆராயும் போது அத்தகைய அமைப்பொன்றின் தேவைகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்வது அவசியமாகும். சிறிய நாடுகள் பல ஒன்றிணைந்து ஒரு சமஷ்டி நாட்டை உருவாக்க முடியும். அன்றேல் ஒற்றையாட்சி உள்ள ஒரு தேசம் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்கு பகிர்வதன் மூலம் சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

அந்நிய சக்திகளிடமிருந்து தங்களது சுயாதிபத்தியத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலைத் தவிர்க்கும் பொருட்டு சிறிய நாடுகள் ஒன்றிணைந்து சமஷ்டி அமைப்பை உருவாக்கலாம். கனடா இவ்வாறுதான் உருவானது. 1867ஆம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த மூன்று நாடுகள் தங்களுக்குச் சமீபமாக இருந்த சக்தி வாய்ந்த நாடாக உருவாகி வந்த - அமெரிக்காவுடன் தம்மை இணைத்துக் கொண்டன. பின்னர் இதற்குள் இன்னும் சில சிறிய நாடுகள் உள்வாங்கப்பட்டு படிப்படியாகத் தற்போதைய கனடா உருவானது. சுவிற்ஸர்லாந்து நாடும் தனது பாதுகாப்புக் கருதி ஒன்றிணைந்த சிறிய நாடுகளின் மூலமே தோற்றம் பெற்றது.

***‘சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு நாட்டில் சிறுபான்மை இன மக்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் அதிகமாக வாழும் பட்சத்தில் தங்களின் தேவைக்கு ஏற்றவாறு சட்ட ஒழுங்குகளை வகுத்துக்கொள்ள முடியும்’***

பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையிலும் சிறிய நாடுகள் ஒன்று சேர்ந்து சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்கலாம். இதன் மூலம் சிறிய நாடுகள் தங்களுக்கிடையே வர்த்தகப் போட்டியில் ஈடுபடுவது தவிர்க்கப்பட்டு பாரிய சந்தை ஒன்று உருவாகும். ஐக்கிய அமெரிக்கா சமஷ்டி நாடாக உருவாவதற்கு இத்தகைய பொருளாதாரமும் நோக்கமும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

இதே போல் கீழ்க் குறிப்பிடப்படும் அடிப்படைகளுக்கு அமைய ஒற்றை அரசொன்று சமஷ்டி அரசாக மாற்றமடைய முடியும்.

பல மொழி பேசும், பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் நாடுகளில் அனைத்து மக்கள் சமூகத்தினருக்கும் கௌரவமாக வாழும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதாவது, சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு நாட்டில் சிறுபான்மை இன மக்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் அதிகமாக வாழும் பட்சத்தில் தங்களின் தேவைக்கு ஏற்றவாறு சட்ட ஒழுங்குகளை வகுத்துக்கொள்ள முடியும்.

உதாரணமாக கனடாவை எடுத்துக் கொண்டால், அங்குள்ள மக்களில் அறுபது சதவீதமானவர்கள் பிரிட்டிஷ் பாரம்பரியத்தையுடைவர்கள். 24 வீதமானோர் பிரெஞ்சு வழிமுறையினர். இவர்களுக்கு மத்தியில் காணப்படும் மொழி, கலாசார வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்ற விதத்தில் சட்டம் இயற்ற சமஷ்டி முறையில் பிராந்திய அரசுகளுக்கு வழியுள்ளது.

இதன் மூலம் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டெழும் சிக்கல்களைத் தவிர்க்க முடியும்.

ஒரு நாடு பாரிய பரப்பளவைக் கொண்டதாக அமைந்திருக்கும்போது (மாநிலங்களாக) பகுதிகளாகப் பகுத்து நிர்வாகம் செய்வது சுலபமானது. மிகப் பெரிய நாடான இந்தியா அதிகாரப் பகிர்வின் அவசியம் கருதி 1935ஆம் ஆண்டு சமஷ்டி அமைப்புக்கு மாறியது. இந்தியா அடிப்படையில் சமஷ்டி அமைப்பு முறையாக உருவாக்கப்பட்டிருந்தாலும் அரசியலமைப்பில் இது குறித்து எழுதப்படவில்லை. இந்திய அரசியலமைப்பு பிராந்தியங்களின் ஒன்றியம் என்றே அந் நாட்டை அழைக்கின்றது. அவசியமானால் இந்தியா சமஷ்டி முறையில் இருந்து பின்வாங்கி ஒற்றையாட்சிக்குச் செல்ல முடியும். அவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் இருக்கின்றன. நாட்டின் நிர்வாகத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து செயற்படுத்தும்போது அரசாங்கம் மக்களுக்கு மிகவும் சமீபமாகிறது என்பதும் உணரப்பட வேண்டும்.


இந்தக் கட்டுரையின் உள்ளடக்கத்தை சாராம்சப்படுத்தினால் கீழ்வரும் விடயங்கள் தெளிவாகும்.

- சமஷ்டி முறையென்பது பிராந்திய அரசு, மத்திய அரசு என இரண்டு பீடங்களைக் கொண்டது.
- இந்த அதிகார பீடங்களிடையே தெளிவான அதிகாரப் பகிர்வு காணப்படும்.
- மத்திய அரசில் பிராந்தியங்களின் பிரதிநிதித்துவம் காணப்படும்.
- அதியுயர் கௌரவத்துடன் கூடிய எழுதப்பட்ட அரசியலமைப்பொன்று இருக்கும்.

சமஷ்டி அமைப்புள்ள நாடொன்று கீழ்வரும் தேவைகளின் அடிப்படையில் உருவாகலாம்.

- சிறிய நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக.
- சிறிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்காக பாரிய நாடுகளின் நிர்வாகத்தை வசதியாக்கும் பொருட்டு.
- பல்லின நாடொன்றில் முரண்பட்ட சலுகைகளால் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக.


-நன்றி : சமதான நோக்கு.



# காஞ்சி காமகோடிகள் கொடியவர்களின் கூடாரமா? உண்மை என்ன?

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய நிர்வாகி சங்கராமன் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இலங்கையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்திலுள்ள இந்து சமய மக்கள் மத்தியில் பெரும் மதிப்போடும் கௌரவிக்கப்பட்டவர், உயர்ந்த ஆசார சீலராகச் சாதாரண மக்களால் மட்டுமல்ல, வீ.ஐ.பீ.க்கள், உயரதிகாரிகள், அரசியல்வாதிகளால் பெரிதும் மதிக்கப்பட்ட அவர், கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பது அவரைச் சின்னத்தனமாகவும் பார்க்க வைத்துள்ளதென்ற குற்றச்சாட்டையும் நாம் மறுத்துவிட முடியாது. இவரது கைது குறித்து நாஸ்திகர்கள் வரவேற்கிறார்கள். ஆஸ்திகர்கள் அதிர்ச்சியுற்று நிற்கின்றனர். மொத்தத்தில் தமிழகமே திக்குமுக்காடுகிறது.

“பாவங்களைக் கங்கையில் கழுவலாம்; கங்கையே பாவமானால் யாரிடம் போவது?”



என்று தி.மு.க. தலைவா கருணாநிதி பொடி வைத்து வெளியிட்ட கருத்து, அவரது ‘பராசக்தி’ திரைப்பட வசனத்தைத்தான் ஞாபகமூட்டுகிறது. “இந்தக் கோயில் பூசாரி கூட என் தங்கை கல்யாணியின் கடைக்கண் பார்வையை வேண்டினான். நான் பூசாரியைத் தாக்கினேன். கோயில் கூடாது என்பதற்காகவல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாதென்பதற்காக” என்று பராசக்தியில் கலைஞர் எழுதிய வசனத்தைத்தான் இப்போதைய அவரது கருத்தும் பிரதிபலிக்கிறது.

1950களின் ஆரம்பத்தில் இக் கதை வசனம் எழுதப்பட்டபோது, இளைஞரான கருணாநிதி பிராமணிய எதிர்ப்பையும் நாஸ்திகத்தையும் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்ட தி.மு.க. வின் முக்கியஸ்தர். ஆனால் 53 வருடங்கள் கழித்து தி.மு.க.வின் நிலை அதுவல்ல. இதே கருணாநிதியின் ஆட்சியில் கூட இந்து நலத்துறை அமைச்சு இருந்தமை குறிப்பிடத் தக்கது.

மேலாளர் சங்கர் ராமனுக்கும் - காஞ்சி காமகோடிகளுக்குமிடையில் முரண்பாடுகள் இருந்தன என்பதும் இக் கொலையில் சங்கராச்சாரியாருக்கும் தொடர்புகளுண்டு என்பதும் பொலிஸ் புலனாய்வுத்துறையின் வாதம். கொலையாளிகளுக்குக் கூலியாகப் பத்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் கொலையாளிகள் சங்கராச்சாரியாரின் செல்லிடத் தொலைபேசியில் பேசினார்களென்றும், நேபாளத்துக்குத் தப்பிச் செல்வதற்காகவே காஞ்சிப் பெரியவர் ஹைதராபாத் சென்றாரென்றும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

எது எப்படியிருந்தாலும் காஞ்சி மடத்தோடு சம்பந்தப்பட்ட முக்கியஸ்தரொருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அத்துடன் சங்கராச்சாரியாருக்கும் அவருக்குமிடையே பாரிய முரண்பாடுகள் இருந்ததற்கான ஆதாரங்களும் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் அரசியல், ஆன்மீக மற்றும் அதிகார அழுத்தங்களையும் மீறிச் சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட ஒருவரைக் கைதுசெய்த பொலிஸ் அதிரடிப் படையினர் பாராட்டப்பட வேண்டியவர்களே. காஞ்சிப் பெரியவாள், ஒன்றில் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களின்படி அல்லது ஆதாரபூர்வச் சாட்சியங்களின்படி ஒரு சந்தேக நபராகவே கைதுசெய்யப்பட்டிருக்கிறார். இந்த அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் குற்றவாளியாகக் கூட இருக்கலாம். ஆனால் இப்போது குற்றவாளியல்ல; சந்தேக நபரே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவருக்குச் சாமரம் வீசுவதற்காகவோ அல்லது பாதபூஜை செய்வதற்காகவோ நாம் இப்படி எழுதவில்லை.

அடுத்து நாம் பார்க்க வேண்டிய விடயம் - உலகிலுள்ள அனைத்து மதங்களுமே மனிதனை நல்வழிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டவை. இந்த அனைத்து மதங்களிலுமே புல்லுருவிகளும் வேடதாரிகளும் ஆன்மீக மூடுதிரைகளுக்குள் மறைந்து அயோக்கியத்தனங்கள் புரிந்திருக்கின்றனர். இதற்கு எந்தச் சமயமும் விதிவிலக்கல்ல. ரஷ்யாவின் ரஷ்புட்னிலிருந்து அமெரிக்காவில் ரோல்ஸ் ரோய் ஆடம்பரக் காரில் பவனி வந்த நிர்வாண சுவாமி ரஜ்னீஸ் வரை அயோக்கியர்கள் இருந்திருக்கிறார்கள். மதத்தின் பேரால் மதம் பிடித்தாடியவர்கள், ஆடுபவர்கள் சகல மதங்களிலுமே உள்ளனரென்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இலங்கை மாத்தளையில் பிறந்த ரவீ பிரேமானந்த சுவாமிகளாக அவதாரம் பெற்று வயிற்றுக்குள்ளிருந்து இலிங்கம் எடுப்பதாகப் போக்குக் காட்டி வந்தவர், கடைசியில் தமிழகச் சிறையில் ஆயுட்காலம் முழுவதும் கம்பியெண்ண வேண்டிய நிலைக்கு வந்தாரென்பது அண்மைய சம்பவம். பெண் விவகாரத்தில் பலே கேடியான சதுர்வேதி சுவாமிகளின் லீலைகள் பற்றித் தமிழ்ப் பத்திரிகைகள் மறந்துவிடக் கூடாது.

இதில் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயம் இதுதான். அற்பதர்கள், மோசடிக்காரர்கள் ஆன்மீக முக்காடுகளுக்குள் புகுந்துகொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். மக்கள் ஏமாந்தும் போகிறார்கள். இன்னுமொன்று உண்மையிலேயே ஆன்மீக சேவை புரிய முன்வருபவர்கள் பலர், சமூக அந்தஸ்தும் தனிநபர் வழிபாட்டுப் பெருமையும் பெற்றுத் தலைவர்களாகும்போது அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களுமே கிடைக்கின்றன.

இதனால் வழி தவறி லௌகீக இன்பங்களுக்குள் சிக்கிக்கொள்கிறார்கள். தடையாக வருபவர்களைத் தட்டிவிடும் அளவுக்கு உயர்ந்தும் விடுகிறார்கள்.


எனவே, சமூகத்தில் மதிப்புப் பெற்ற காஞ்சி காமகோடிகள் இப்படிச் செய்துவிட்டாரே என்பதற்காக இந்துசமயம் புனிதத்தை இழந்துவிடாது. இதற்காக இந்து சமயத்தைக் கண்டிப்பதும் தவறானது. ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றால் அவர் களையெடுக்கப்பட வேண்டியவரே. இதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. 2,500 வருடங்களுக்கு முன்னர் ஆதிசங்கரர் ஸ்தாபித்த காஞ்சிபீடம் மேலும் தூய்மை பெறுமென்பதே உண்மையாகும்.

-செங்குட்டுவன்




ஓம, சக்தி சக்தி சக்தியென்று சொல்ல – கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு;
சக்திசக்தி சக்தியென்று சொல்லி – அவள்
சந்நிதியி லேதெழுது நில்லு.

சுப்பிரமணிய பாரதியார்–



# பாப்பா முரசு

## முயல்கள் எவ்வாறு யானையை முட்டாள்களாக்கின?



ஒரு காட்டில் வசித்த யானைகளுக்கு சதுரதந்தன் என்றொரு யானை அரசனாக இருந்தது. தாங்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் குளம் மழை பொய்த்து வற்றிப் போனதால் அந்த யானைகள் வேறொரு குளத்தைத் தேடின.

"தூரத்திலுள்ள காட்டில் ஒரு குளம் இருப்பது எனக்குத் தெரியும். நாம் எல்லோரும் அற்கு செல்வோம்" என்று சதுரதந்தன் சொன்னது.

யானைக் கூட்டம் உடனே புறப்பட்டு சில நாட்களில் அந்தக் குளத்தை அடைந்தன.

அந்தக் குளத்தின் கரையில் ஏராளமான முயல்கள் வசித்து வந்தன. இந்த யானைகள் எல்லாம் அக்குளத்திற்குச் செல்லும்பொழுது அவற்றின் கால்கள் மிதிபட்டு பல முயல்கள் இறந்தன. அவை தங்கியிருக்கும் வளைகளும் அழிந்தன.

அந்த யானைகள் நீர் அருந்தச் சென்றவுடன், முயல்கள் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடின.

"நண்பர்களே, நாம் விரைந்து ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையேல், யானைகள் தினமும் குளத்திற்கு வருவதனால் நாம் எல்லோரும் அழிந்துபோவோம்" என்று ஒரு முயல் சொன்னது.

"என்ன! தலை முறையாக நாம் இருக்கும் இடத்தை விட்டு வேறொரு இடத்திற்குச் செல்வதா? முடியாது; யானைகளை பயமுறுத்தி இந்தக் குளத்திற்கு வராமல் தடுக்க நாம் ஒரு வழியைச் சிந்திக்க வேண்டும்" என்று இன்னொரு முயல் சொன்னது.

"இந்த இடத்திலிருந்து யானைகளை வெளியேற்ற என்னிடம் ஒரு அருமையான யோசனை இருக்கிறது" என்று ஒரு முயல் கூறியது.

இவ்வாறு கூறிவிட்டு அந்த முயல் குளத்திற்கு வந்துகொண்டிருந்த யானை அரசனைச் சந்தித்தது.

"இங்கிருந்து சென்று விடு, பழி பாவத்துக்கு அஞ்சாத யானையே! இந்தக் குளம் சந்திர தேவதைக்குச் சொந்தமானது என்று உனக்குத் தெரியாதா?" என்று ஆத்திரத்துடன் கேட்டது.

**பாப்பா முரசு சிறுகதை**

அதற்கு யானை, "நீ யார்?" என்று முயலிடம் கேட்டது.

"நான் சந்திர தேவதையின் தூதன். தூதர்களுக்குத் துன்பமிழைக்கக்கூடாது என்பதை நீ அறிவாய். சந்திரதேவதையே இச்செய்தியை என்னடம் சொல்லி அனுப்பியது" என்று முயல் பதிலளித்தது.

"என்ன செய்தி அது?" யானை மீண்டும் கேட்டது.

"நீங்கள் எல்லோரும் குளத்திற்கு வருகையில் அவள் பாதுகாப்பிலுள்ள ஆயிரக்கணக்கான முயல்களை மிதித்துக் கொன்று விட்டீர்கள். அவற்றின் வளைகளையும் அழித்துவிட்டீர்கள் என்று சந்திர தேவதை உங்கள் மீது சினம் கொண்டிருக்கிறாள். அவளது இக் குளத்திலுள்ள தூய்மையான நீரை நீங்கள் கலக்கிச் சேறாக்கி விட்டீர்கள். அதனால் இந்த இடத்தை விட்டு நீங்கள் அனைவரும் உடனே சென்றுவிட வேண்டுமென்றும், இல்லையேல் உங்களைக் கடுமையாகத் தண்டிக்கப் போவதாகவும் அவள் சொல்லியனுப்பினாள்" முயல் கூறியது.

இதைக் கேட்டு அஞ்சிய யானை, "இப்போது தேவதை எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டது.

"அவள் மற்ற முயல்களுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருக்கிறாள்" என்று முயல் மறுமொழி கூறியது.

"அவளிடம் மன்னிப்புக் கேட்டு, நாங்கள் இங்கிருந்து போய்விடுவோம். என்னைக் குளத்திற்கு அழைத்துச் செல்!" என்று யானை சொன்னது.

அப்போது அந்திவேளை நேரம் ஆதலால் வானில் பூரண சந்திரன் உதயமாயிற்று. அதன் உருவம் குளத்தில் தெரிந்தது.

"இதோ சந்திர தேவதை" என்று குளத்தில் தெரிந்த சந்திர பிம்பத்தை முயல் யானையிடம் காட்டியது.

"நான் இங்கு நீராடி என்னைத் தூய்மை செய்துவிட்டு, அவளிடம் மன்னிப்புக் கேட்பேன்" என்று யானை குளத்தினுள் இறங்கியது. அதனால் நீரில் சலனமுண்டாகி சந்திரனின் நிழல் அங்குமிங்கும் அசைந்தது.


"முட்டாள்! உனது செயலால் நீ சந்திர தேவதையின் ஆத்திரத்தை அதிகரிக்கிறாய். உனக்கு தண்டனை கிடைக்குமுன் இங்கிருந்து ஓடிவிடு" என்று முயல் கத்தியது.

உடனே யானை அரசன் தலை வணங்கி அங்கிருந்து தனது கூட்டத்துடன் அகன்றது. அன்று முதல் முயல்கள் நிம்மதியாக வாழ்ந்தன.

***ஆம், பிள்ளைகளே!***

***புத்திசாலித்தனமான செயலும் சமரசமான பேச்சும் எந்தவொரு பிரச்சினையும் எளிதில் தீர்த்துவைக்க உதவும். முயலின் தந்திரமான அறிவு பெரிய ஆபத்தையே தடுத்து நிறுத்த உதவியது. ஆதலால் வீணான பிரச்சினைகளை உருவாக்காமல் தந்திரமாக வாழப் பழகுவோம்.!.***

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.11.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **571**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 569

பரிசுக்குரியவர்:
**ந. செல்வகுமார், ஸ்ரீ முருகன் கோயில் வீதி, களுதாவளை -04, களுவாஞ்சிக்குடி.**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.எச். அமானி, கஹட்டபிட்டியா, முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | ஆர். அஜிமால், மாங்குளம், நேரியகுளம், வவுனியா. |
| எம்.எச்.எப். சபானா, மட்/ பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், ஓட்டமாவடி. | ஜெ. ஜெமீலா, புதியதெரு, உப்புக்குளம், மன்னார். |
| உபைதுல்லா, 414/2, 1ஆவது ஒழுங்கை, கொணவலை, களனி. | சித்தி முஹாரா, லேயட்ஸ் பிரட்ஸ்வே, கொழும்பு-11 |
| கே.எம். நிஸ்வார், 101/3 கொழும்பு வீதி, குருனாகல். | எஸ். நிவேதா, கண்டி வீதி, வவுனியா. |
| எம். சிந்துஜா, 35/4, பிரஜா சேவ மண்டல மாவத்த, பெரியமுல்ல, நீர்கொழும்பு. | ஜெ. திவ்யா, ஆஸ்பத்திரி, வீதி, களுபோவில. |

## ஆத்திசூடி

### எண் எழுத்து இகழேல்

நீ எதையும் கணிப்பற்கு தோரமான எண்ணையும் உணர்த்துவதற்கு ஆதாரமான மொழியையும் தாழ்வாக எண்ணித் தூற்றாதே.

நிரஞ்சலா, கண்டி. –ஔவையார்

## ஓடுவது ஏன்?



எலியே, எலியே, ஓடுவதேன்?
என்னைப் பூனை துரத்துவதால்.

பூனையே, பூனையே, ஓடுவதேன்?
பொல்லா வெறிநாய் துரத்துவதால்.


நாயே, நாயே, ஓடுவதேன்?
நாலடிச் சிறுவன் துரத்துவதால்.

சிறுவா, சிறுவா, ஓடுவதேன்?
சிறுத்தை பின்னால் துரத்துவதால்.

சிறுத்தையே, சிறுத்தையே, ஓடுவதேன்?
சிங்கம் என்னைத் துரத்துவதால்.

சிங்கமே, சிங்கமே, ஓடுவதேன்?
எங்கோ வேட்டுக் கேட்டதனால்.

## அதிசய உலகம்



**ரயில்வே தண்டவாளம் என்றால் இடை இடையே வளைந்தும், நெளிந்தும்தான் செல்லும். ஆனால் 297 மைல் தொலைவுக்கு, ஒரே நேர் கோட்டில் செல்லும் ரயில் பாதை இது. தென்மேற்கு அவுஸ்திரேலியாவில் நல்லர்பார் சம வெளியில் உள்ளது இது உலகிலேயே மிக நீண்ட, நேரான ரயில் பாதை இதுதான்.**

**கடற் பறவைகளிலேயே, மிக அதிக எண்ணிக்கையில் உள்ளவை. அண்டார்க்டிக் பெருங்கடல் பகுதியில் காணப்படும். வில்வன்ஸ் ஸ்டாம் பெட்ரல் என்ற பறவை இனந்தான். அதன் எண்ணிக்கை பல கோடிக் கணக்கில் இருக்கும் என்கிறார்கள். இதை சென்சஸ் எடுக்க முடியவில்லையாம்!**






**படத்திலிருக்கும் 'ரென்' என்ற இந்த அவுஸ்திரேலியப் பறவையின் சாதனையை எந்த கின்னஸ் சாதனையாளரும் தொட்டுவிட முடியாது. காரணம் ஏழு வினாடிகளில் 130 வகையான ராகங்களில் பாடக்கூடியது இந்தப் பறவை. கின்னஸ் சாதனையோ 10 வினாடிகளில் 5 வகையான ராகங்கள்தான் பாடப்பட்டுள்ளன.**

## உங்கள் பொது அறிவு எப்படி?


1. மாட்டின் வயதைக் கணிப்பது எந்த உறுப்பைக் கொண்டு?
**பற்களைக் கொண்டு.**
2. தேனீக்கள் தம் கூடுகளை எதனால் கட்டுகின்றன?
**தம் உடலில் இருந்து சுரப்பி மூலம் பெறும் மெழுகால்.**
3. பாம்புகள் கண்களைத் திறந்த வண்ணம் துயில்வதேன்?
**கண் இமை இன்மையால்.**
4. பல்லில்லாத பிராணி எது?
**தேவாங்கு.**
5. பிராணிகளில் அதிக காலம் கருத்தரிப்பது எது?
**ஆமை (350 ஆண்டுகள்).**
6. மிக தடித்த தோல உள்ள பிராணி எது?
**திமிங்கலம்.**
7. மிகவும் நச்சுத்தன்மை உள்ள பூச்சி எது?
**கரும் விதவைச் சிலந்தி.**
8. உணவு உட்கொள்ளும் முன் நீர் அருந்தும் மிருகம் எது?
**குதிரை.**
9. கடல் பிராணிகளில் மிகப் பெரியது?
**நீலத் திமிங்கலம்.**
10. முட்டையில் நின்றபடி அடைகாக்கும் பறவை எது?
**பென்குவின்.**





## ஊதும் றப்பர்




மது அருந்தியவர்கள் போதை ஏறியதும் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாததால் மதுபான சாலைகளை மிகவும் பலமானதாக அமைக்க வேண்டியுள்ளது. ஆனால், இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மதுபானசாலை றப்பரினால் அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும்போது ஊதிப் பெருப்பிக்கவும் இல்லாதபோது சுருக்கிக்கொள்ளவும் முடியும் என்பதே இதன் விஷேசம்.



## எதிர்பாராத விதமாகத் தொங்குதல்



அமெரிக்காவின் நியூ மெக்ஸிக்கோ நகரில் அண்மையில் நடைபெற்ற பலூன் கண்காட்சி ஒன்றின்போது ஓர் சுவையான சம்பவம் இடம்பெற்றது. அது ஒரு பலூனின் குறிப்பிட்ட வழிநடத்துனரைத் தவிர மேலதிகமாகப் பயணம் செய்த 10, 14 வயதுடைய இரு சிறுவர்களும் அடங்கினர். அவர்கள் அனைவரும் 700 அடி உயரமான ரேடியோ கோபுரம் ஒன்றில் தொங்கி எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் பாதுகாப்பாக கீழே இறங்கினார்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

## மனித பிரமிட்


மனித பிரமிட் உருவாக்கும் கலை இப்போது உலகில் அரிதாகி வருகிறது. ஆனால் ஸ்பானியாவில் வருடாந்தமாக மனித பிரமிட் உருவாக்கும் போட்டி ஒன்று நடைபெறுகிறது. டேரகோனா நகரில் அண்மையில் நடைபெற்ற அவ்வாறான போட்டி ஒன்றில் மனித பிரமிட் ஒன்றை 250 மனிதர்கள் சேர்ந்து உருவாக்கிய காட்சியே இது.



## பழக் கலை நயம்

வாழைப்பழத்தில் என்ன கலை நயமோ? என்று நினைக்க முடியாது. ஏனெனில் ஓர் கலைஞரான ஓக்ஸிப்போன் இங்கிலாந்தின் ட்ரல்கார் சதுக்கத்தில் இவ்வாறானதொரு வாழைப்பழக் குவியலைக் குவித்தது கலைப் பொருள் ஒன்றை உருவாக்கும் பொருட்டு.

இவர் பழங்களை மட்டுமே உபயோகித்து இக் கலை அலங்காரத்தை உருவாக்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






## கல்லுக்குள் ஈரம்

போர் ஒன்றில் எதிரியைக் கொலை செய்யும் அளவுக்கு கொடூரமான மனமுடைய போராளியின் மனதுக்குள் ஈரமும் உள்ளது. ஈராக்கில் காவலரண்களை அமைத்துத் தங்கியுள்ள இங்கிலாந்து படைவீரர் ஒருவர் பாக்தாத் எல்லைப்புறக் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தம்போது நாடோடியாக அலைந்து திரிந்த ஒரு தெரு நாயைக் கொஞ்சிக்கொண்டிருந்த காட்சியே இது.

## துவைபடும் பூனை



இப் படத்தில் உள்ள 'மிலோ'வுக்கு வயது 8 வாரங்கள் மாத்திரமே. இங்கிலாந்தில் வசிக்கும் மிலோ கடந்த நவம்பர் 1ஆம் திகதி வோஷிங் மெஷின் ஒன்றில் குட்டித் தூக்கம் ஒன்றைப் போட்டார். அதன் உரிமையாளரான எஜமானி அம்மா அது பற்றித் தெரியாமல் மெஷினை இயக்கினார். அவர் அது பற்றித் தெரிந்துகொண்டது கொஞ்ச நேரத்திற்குப் பிறகுதான். ஆனால் மிலோவுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்பதே ஆச்சரியமான உண்மை.

‘ராமகிருஷ்ணா’வில் அறிமுகமாகி ‘அந்த நாள் ஞாபக’த்தில் நடித்து வரும் ஸ்ரீதேவிகா கேரளத்துப் பெண்குட்டி. பெண்குட்டி என்றாலும் சாதா பெண்குட்டி இல்லை. நிலக்கிழார் வீட்டுப் பெண் குட்டி. நெல்லு வயல் ஏராளம். பழத்தோட்டம் நிறைய. அதுபோக, ஒரு பெரிய குளமும் அம்மணிக்குச் சொந்தம். அந்தக் குளத்தில் நிறைய மீன் வளர்த்து அந்த பிசினஸும் பண்ணுகிறதாம் ஸ்ரீதேவிகா.


மும்தாஜ் - சத்தியராஜ் - நமிதா

ரஜினி - சிவா
படம்: சந்திரமுகி

இந்த வருட தீபாவளிக்கு 7 வகை பட்சணம்தான்! அளவோட வந்தாலும் வளமோட வருது!

‘நெறஞ்ச மனசு’டன் விஜயகாந்த் வர்றாரு!, ‘சத்ரபதி’யாக சரத் அவதாரம் எடுக்கிறார்!


‘அட்டகாசம்’ பண்ண வருகிறார் அஜித்!, ‘மன்மதன்’ ரூபமெடுத்திருக்கிறார் சிம்பு.

‘ட்ரீம்ஸ்’ காண்கிறார் தனுஷ்!, ‘மகா நடிகன்’ ஆகிறார் சத்யராஜ்.

‘புதிய ஜனனம்’ எடுக்கிறார் அருண்குமார்.

## நெறஞ்ச மனசு!

திருட்டுத்தனம் பண்ணுவதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டது வினுசக்கரவர்த்தியின் பெரிய குடும்பம்! அந்தக் குடும்பத்து இளைஞன் அய்யனார், “திருட்டுத் தொழில் வேண்டாம்! நாம் உழைத்து வாழணும்!” என்று தாத்தா வினுவிடம் சொல்ல... “குலத் தொழிலையே விடச் சொல்றியா?” எனக் கொந்தளிக்கிற வினு, பேரனை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்கிறார். வீட்டை விட்டு வெளியேறிய அய்யனார் அந்த ஊரையே திருத்தி நல்வழிபடுத்துவதுதான் ‘நெறஞ்ச மனசு’ கதை!



## அட்டகாசம்

ரௌடி - டிரைவிங் ஸ்கூல் மாஸ்டர்....என இரண்டு வேடத்தில் அமர்க்களமாக வருகிறார் அஜித்! இருவருக்குமான பிரச்சினைதான் மெயின் கதை!

அஜித்தின் செல்லநாய் வயாக்ரா மாத்திரையை விழுங்கிவிடுகிறது. காமம் தலைக்கேற லொள்ளு லொள்ளுனு ஜொள்ளு விட்டபடியே நாயகி பூஜாவின் வீட்டுக்குள் போய் பூஜாவின் நாயிடம் இந்த நாய் வழிகிறது! இப்படித் தொடங்குகிறது அஜித் - பூஜா காதல். இன்னொருபுறம் ரௌடி அஜித் ரவுசு பண்ணுகிறார்.

பி.கார்த்திகேயன் தயாரிப்பில் சரண் இயக்கத்தில் சூப்பர் மசாலாவாகத் தயாராகி வருகிறது படம்!

**சாம்பிளுக்கு.......**

இந்தப் படத்தில் நடிகை கிரண் நடிகை கிரணாகவே வருகிறார்!

அஜித் முதன்முதலாக காமெடிக் காட்சிகளில் ரொம்ப ஆர்வம் காட்டி நடித்திருக்கிறார்.

டிரைவிங் கற்றுக்கொள்ள வரும் மாமிகள், “மாமாவுக்கு செல்ப் எடுக்கல” எனச் சொல்வதும் செல்ப் எடுக்க மாமிகளுக்கு அஜித் டிப்ஸ் தருவதும் காமெடிக் காட்சிகள்.

## மன்மதன்

ஒரு சம்பவத்தால் மனதளவில் பாதிக்கப்பட்ட சிம்பு அழகிய இளம் பெண்களைக் காதலித்துக் கொலை செய்கிறார்! அதிலிருந்து ஜோதிகா மட்டும் தப்புகிறார்...என்கிற சிகப்பு ரோஜாக்கள் பாணிக் கதை! ஆனால், ‘மன்மதன்’ சிம்பு வேறு. சைக்கோ சிம்பு வேறு என்பது க்ளைமாக்ஸில் தெரியவரும்!

இந்தியன் தியேட்டர்ஸ் எஸ்.கே.கிருஷ்ணகாந்த் தயாரிப்பில் சிம்புவின் திரைக்கதை, வசனத்தில் கதை எழுதி இயக்கியிருக்கிறார் புதிய இயக்குநர் முருகன்.

க்ரைம் கதையாக இருந்தாலும் இளைஞர்களைக் கவரும் வண்ணம் ஃபேண்டஸியாகப் பண்ணியிருக்கிறார்கள்.

**சாம்பிளுக்கு......**

நாயகியாக ஜோதிகா, மனோதத்துவ டாக்டராக மந்த்ராபேடி, ஜோதிகா தோழியாக ஷாலினி அப்புறம் நமீதா, சிந்துதுலானி, யானாகுப்தா, ஜெனிஃபர் உட்பட சுமார் 25க்கும் மேற்பட்ட ரதிகளின் இளமை பொங்கும் அணிவகுப்பு படத்தில் உண்டு.

இது தவிர சிம்புவின் தாய்மாமாவாக வரும் கவுண்டமணியின் காமெடி தூள் கிளப்பப் போகுது!

டீன் ஏஜ் மன்மதர்களுக்கு செம ஜாலிதான்!

## ட்ரீம்ஸ்

அரும்புமீசைக்குறும்பு வயசின் புரிதலற்ற வாழ்க்கையை மையமாக வைத்து பேசும் படம்! ‘டீன் ஏஜ் கனவு அவர்களுக்குச் சுகமானதாக இருக்கும். காண்கிற கனவையெல்லாம் நனவாக்கப் பார்ப்பார்கள். அதில் நல்லது கெட்டது பார்த்துச் சொல்ல வேண்டியது பெற்றவர்களின் பொறுப்பு......’எனப் போதிக்கிற படம்!

திருமதி பி.ஜி.ஸ்ரீகாந்த் தயாரிப்பில் கஸ்தூரிராஜா கதை, திரைக்கதை வசனம், இயக்கத்தில் தனுஷ் - தியா நடித்திருக்கிறார்கள் ‘ட்ரீம்ஸி’ல்!

**சாம்பிளுக்கு.....**

‘ட்ரீம்ஸ்’ இன்னொரு ‘துள்ளுவதோ இளமை’ டைப்தான்!

சபரிமலைக்கு மாலை போட்டுச் செல்லும் தனுஷ் கோஷ்டி, வந்ததும் வராததுமாய் மாலையைக் கழற்றிவிட்டு...."துண்டக் காணோம் துணியக் காணோம்! தூங்கும் போது மணியக் காணோம்... என்னடி செஞ்ச?” என ஏடாகூடப் பாடலோடு வயசுப் பசங்களை வசீகரிக்க வருகிறது ‘ட்ரீம்ஸ்.’


## ஜனனம்

ஒரு பத்திரிகையாளனுக்கும் சமூக விரோத சக்திகளுக்கும் இடையேயான யுத்தம்தான் ‘ஜனனம்’ கதை!

‘உளவுத்துறை’ டி.ரமேஷ் இயக்கத்தில் ‘ப்ரீம்வேர்ல்டு சினிமாஸ்’ நிறுவனம் தயாரிப்பில் அருண்குமார், பிரியங்கா திரிவேதி, ரகுவரன். நாசர் உட்படப் பலரும் நடித்திருக்கிறார்கள்!

**சாம்பிளுக்கு......**

சமகால அரசியல் சீர்கேடு, அரசு அலுவலகங்களில் தலைவிரித்தாடும் இலஞ்சம். வேலையின்மை, மாணவர் சக்தி....எனத் தீப்பிடிக்கிற பல விஷயங்கள் படத்தில் உண்டு! இதுவரை பார்த்திராத ஒரு மாறுபட்ட அருண்குமாரை படத்தில் பார்க்கலாம்.


மும்தாஜ்

ரஜினிகாந்த் தனது திருமண அறிவிப்பை வெளியிட்ட நேரம் பகல் 1.50. அதே செண்டிமெண்டில்தான் ரஜினியின் மகளைக் கைப் பிடிக்கும் தனுஷ் தனது திருமண அறிவிப்பையும் அதே பகல் 1.50 மணிக்கு வெளியிட்டிருக்கிறார். சூப்பர் செண்டிமெண்ட்!

சினேகா ஹாலிவுட் படம் ஒன்றில் நடிக்கிறார். லாஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த ராம் என்கிற இயக்குநரின் படத்தில் நடிக்கிறார். இதற்காக ஃபுல் ஸ்கிரிப்ட்டையும் சினேகாவுக்கு அனுப்பி வைத்துள்ளார். வெகு விரைவில் சினேகாவின் புன்னகை ஹாலிவுட்டில் மலரக்கூடும்.


சாயாசிங்

விந்தியா தன் மனேஜர் அருணோடு “டும் டும்” பண்ணாமலே தனிக்குடித்தனம் பண்ணி வந்தார். மகளின் வருமானம் தனக்கு வராததால் விந்தியாவின் அப்பாவை கவனிக்கவில்லை விந்தியாவின் அம்மா. இதனால் நோய்வாய்ப்பட்டிருந்த விந்தியாவின் அப்பா நொந்துபோனார். பிள்ளை மனம் பித்தாச்சே! விஷயத்தைக் கேள்விப்பட்டு அப்பாவை அழைத்து வந்து வைத்தியம் பண்ணினார் விந்தியா. ஆனால், அருணுக்கு அது பிடிக்கவில்லை போல. அதனால் என்ன, அருணை வெளியேற்றிவிட்டார் விந்தியா. இப்போது ‘மச்சி’ பட நாயகி சுபா புஞ்சாவுக்கு மனேஜராகி இருக்கிறார் அருண்.

டைரக்டர் ரமணா சங்கவி வீட்டுப் பக்கம் அடிக்கடி தட்டுப் படுகிறார். என்னவாக இருக்கும்? வேறு, என்னவாக இருக்கும்?

**வ**ழக்கம்போல்தான், எல்லாரையும் போல்தான் காவேரியும் தன் காதலை மூடி மறைக்க முடிந்தளவு முயற்சித்தார். ஆனால், கர்ப்பத்தையும் காதலையும் எத்தனை நாளைக்குத்தான் மூடி மறைக்க முடியும். காவேரியின் காதல் கத்தரிக்காய் முத்தி கடைவீதிக்கு வந்துவிட்டது. நடிகரும் இயக்குநருமான சூர்யகிரண், அதாவது 'மௌன கீதங்கள்' படத்தில் சிறுவனாக நடித்த மாஸ்டர் சுரேஷ்தான் இந்த சூர்ய கிரண் - காதல் விவகாரம் இப்போது கல்யாணத்தில் முடிந்திருக்கிறது.



தனுஷ் ஐஸ்வர்யா

கலக்கல்' படத்தில் நடித்து வரும் பாரதி தீபாவளிக்காக நமக்களித்த ஒரு கலக்கல் பேட்டி சுய புராணம்?

**சுய புராணம்?**

அப்பா பாலசுப்பிரமணியம், ஆயுர்வேத மருந்து பிசினஸ். அம்மா பாக்கியலட்சுமி. வீட்டு எஜமானி. அக்கா பிரியா பி.காம் படிக்கிறார். தம்பி மணி எழாவதுகினால் போகிறான். நான்தான் நடிக்கிறேன்.

**சினிமாவுக்கு வந்தது?**

கோயமுத்தூரில் படித்துக்கொண்டிருந்தபோது "ஏய் நீ சிவப்பா. அழகா இருக்கேடி. சினிமாவுக்கு ட்ரை பண்ணு" என சக தோழிகள் சொல்வார்கள். எனக்கு அதில் உடன்பாடு இல்லை. சில வருடங்களுக்கு முன் பிரபுதேவாவை வைத்து சேரன் பண்ணுவதாக இருந்த படத்திற்கு புதுமுகம் தேவை என விளம்பரம் வந்தது. அதைப் பார்த்துவிட்டு என் புகைப்படத்தை அனுப்பி வைத்தேன். ஆனால், அந்தப் படம் எடுக்கப்படவில்லை. அதன் பிறகு அப்பாவுக்குச் சென்னையில் வேலைமாற்றலாக குடும்பத்தோடு இங்கே வந்தோம். வந்த இடத்தில் காஸ்ட்யூமர் மாசானம் மூலம் 'வயசுப் பசங்க' படத்தில் வாய்ப்புக் கிடைத்தது.

**தொடர்ந்து ஜெயிக்கலையே?**

'வயசுப் பசங்க' சரியாகப் போகாததால் ஊருக்கே போய்விடலாமா என்று கூட இருந்தேன். அந்த நேரத்தில்தான் கேமரா மேன் ஒருவர் மூலம் 'கலக்கல்' பட வாய்ப்பு வந்தது.

**நடிப்பில் என்ன பாலிசி?**

கிளாமராக நடிப்பேன். ஆபாசமாக நடிக்கமாட்டேன்.

**அடுத்து....?**

'காதல் முடிச்சு', 'வில்'. இதுபோக இரண்டு தெலுங்குப் படங்கள் பேசிக்கிட்டிருக்கேன்.

**ரோல் மாடல்....?**

முன்பு பத்மினி, இப்போது ஜோதிகாவை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

**ஹீரோயின் தான் எனப் பிடிவாதம் பண்ணுவீர்களா?**

ஹீரோயினோ ஹீரோயின் இல்லையோ, கதையின் நாயகியாக இருக்கணும். நல்ல நடிகைன்னு பேர் வாங்கணும்.

**தனித்தன்மை....?**

தமிழ்ப் பொண்ணு, குடும்பப் பாங்கான முகம். தமிழ் மொழி தெரிவதால், கேரக்டரை புரிந்து நடிக்க முடியும்.

**போட்டியைச் சமாளிக்க....?**

கடுமையா உழைக்கணும். மும்பை நடிகைகளிடமிருந்து தனித்துத் தெரிய மேக்கப்பிலிருந்து காஸ்ட்யூம் வரை எல்லாத்திலயும் கவனம் செலுத்தணும். அதைப் பண்ணிக்கிட்டு இருக்கேன்.

**இலட்சியம் ?**

நிறைய சாதிச்சுக் காட்டணும்.

**தீபாவளி...?**

இது எனக்கு தலைத் தீபாவளி. போன வருஷம் நவம்பரில் 'வயசுப் பசங்க'ளுக்கு கமிட்டானேன். இந்த வருஷம் நிறைய நடித்துக்கொண்டிருக்கிறேன். இதுதான் தலை தீபாவளி.

**தூங்கப் போகும் முன்....?**

நான் படுக்கையில் பசங்களை நினைப்பதில்லை. பசங்களை நினைத்தால் கெட்டுப்போவோம். இயேசுநாதரை நினைத்துக் கும்பிட்டுவிட்டுப் படுப்பேன்.



சத்தியராஜ்

அதனால் இப்போதே ஹோம் ஒர்க் செய்து கொண்டிருக்கிறேன்.இந்தக் கேரக்டருக்கு தேசிய விருது கிடைப்பதற்கான வாய்ப்புகள் கூட உண்டு. மலையாளத்தில் இந்த படத்தில் நடித்த ஷோபனாவுக்கு தேசிய விருது கிடைத்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நானும் அந்த விருதுக்கு முயற்சிப்பேன். ஏற்கெனவே, 'கோவில்பட்டி வீரலட்சுமியில்' அந்த விருதை எதிர்பார்த்தேன். ஆனால், நான் சொந்தக் குரலில் பேசாததால் அந்த விருது மிஸ்ஸானது. இந்த முறை சொந்தக் குரலிலேயே பேசி விருதை கைப்பற்றியே தீருவேன்.

**தொடர்ந்து நடிப்பீர்களா?**

எனக்கேற்ற கதாபாத்திரங்கள் - நான் பண்ணாத பாத்திரங்கள் கிடைத்தால் தொடர்ந்து புதுமையான நடித்துக்கொண்டுதான் இருப்பேன்?

# சினிவிசிட்



**ஏவி.எம்.** ஸ்ருடியோவில் ஒரு பருப்புக் கம்பெனி விளம்பரத்திற்காக நடித்துக் கொண்டிருந்த சிம்ரனைச் சந்தித்தோம். பக்கத்திலே கணவர் தீபக்கும் இருந்ததால் மனசுக்குள் ஒரு பக்கு பக்கோடு ஒரு மின்னல் பேட்டி எடுத்தோம்.

**திருமண வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

ரொம்ப சந்தோஷ மாக அனுபவித்து வாழ்ந்து கொண் டிருக்கிறோம் வாழ்க்கையை. டெல்லியில்தான் எங்கள் வீடு. படப்பிடிப்பிற்காக அவ்வப்போது வந்து போகிறோம். இந்த தீபாவளி எங் களுக்கு சந்தோஷமான தீபாவளி. காரணம், இதுதானே தலை தீபாவளி. மாமியார் வீட்டில் தீபாவளியைக் கொண்டாட திட்டமிட்டு அதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன்.

**என் கணவருக்கும் வாய்ப்பு தந்தால்தான் நான் கால்ஷீட் தருவேன் என அடம் பண்ணு கிறீர்களாமே?**

நான் அப்படி யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. நான் எனக்குப் பொருத்த மான பாத்திரங்கைத்தான் தேர்வு செய்து நடிக்கிறேன். எனக்குப் பொருந்தாத பாத்திரம் உள்ள படத்தில் அவருக்கும் வாய்ப்புத் தருவதாகச் சொன்னால் உடனே நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அவருக்கு நடிக்கிற ஆசை இருந்தால் அவர்தான் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் எல்லாம் ரெக்கமண்டேஷன் கிடையாது. கிச்சா வயசில் ஏதோ முறைமாமன் கேரக்டர் இருக்கு அதை தீபக் செய்தால் நல்லா இருக்கும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அது டைரக்டர் பாடு, தீபக் பாடு.

**ரஜினியின் சந்திரமுகியில் சந்திரமுகியாக நடிக்கப் போகிறீர்களே?**

ரஜினி தவிர எல்லாருடன் நடித்துவிட்டேன். இப்போது ரஜினி படத்திலும் நடிக்கிற வாய்ப்புக் கிடைத்துவிட்டது. ரொம்ப சந்தோஷம். அதுவும் டைட்டில் கேரக்டரிலேயே நான் நடிப்பது கூடுதல் சந்தோஷம். இந்தப் படத்தின் கன்னட மொழியிலான 'ஆப்த மித்ரா' படம் பார்த்தேன். சந்திரமுகி கேரக்டர் ரொம்ப ரிஸ்க் எடுத்து பண்ண வேண்டிய கேரக்டர்.

**கர்ப்பமாக இருக்கிறீர்களாமே?**

"கல்யாணமாகி குடும்பம் நடத்தறவங்க கர்ப்பமாதான் ஆவாங்க. ஏன் இந்த மாதிரியெல்லாம் கேக்கறிங்க. இருந்தாலும் சொல்றேன். நான் இப்போது கர்ப்பமெல்லாம் இல்லை. இன்னும் ரெண்டு மூணு வருஷம் ஆகும்" என சீறிப்பாய்ந்தார் சிம்ரன்.

சிம்ரனின் முகம் டென்ஷனாவதைப் பார்த்துவிட்டு தீபக் வர நாம் விடு ஜூட்.

**டை**ரக்டர், நடிகர் மணிவண்ணனின் மகன் ரகுவண்ணன் ஏற்கெனவே 'மாறன்' படத்தின் மூலம் நடிகராகி இருக்கிறார். தொடர்ந்து படம் இயக்குவதிலும் ஆர்வத்தோடு இருக்கிறார். இப்போது 'அது ஒரு கனாக்காலம்' படத்தில் கிளித்தட்டு கிளித்தட்டு என்ற பாட்டை இளையராஜா இசையில் பாடியிருக்கிறார் மணிவண்ணன் மகள் ஜோதி.

-சக்திநாதன்

**பூ**ர்வீகம் இராமநாதபுரமாக இருந்தாலும் வீரப்பனின் சத்தியமங்கலம்தான் சக்திநாதனுக்கு ஊர் . புட்பால் மேட்சின்போது கால் ஒடிந்து படுத்துக் கிடந்தபோது நண்பர் ஒருவர் புல்லாங்குழலைக் கொடுத்துவிட்டுப் போனார். அதை விளையாட்டாக வாசிக்கப் போய் இன்று தமிழ் சினிமாவில் எம்.எஸ்.வி., இளையராஜா, தேவா என முன்னணி இசையமைப்பாளர் பலருக்கும் புல்லாங்குழல் வாசிப்பவர் சக்திநாதன்தான்.

தற்போது வெளிவந்திருக்கும் 'கிரி', 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி', வரப்போகிற 'அந்நியன்', 'ஏய்' படங்கள் வரை புல்லாங்குழல் வாசித்து வருகிறார் சக்திநாதன்.

தற்போது வாணிஜெயராமை வைத்து மொத்தம் பத்துப் பாடல்களை இசையமைத்து 'மகிழம்பூ மனையிலே'னும் இசை ஆல்பத்தை வெளியிட்டிருக்கிறார் சக்திநாதன். அமெரிக்காவில் வெளியிடப்பட்ட இந்த ஆல்பத்திற்கு ஏக வரவேற்பாம். இதைத் தயாரித்தவர் அமெரிக்காவில் வசிக்கும் நீலமயில்.



விவேக் சாயாசிங்




## அடை மழை....

அடை
வானத் தட்டில்
ஏற்பட்ட பொத்தலினால்
எத்தனை அனர்த்தம்!

கிராமத்து
கிறவல் ரோடுகளில்
கால் நடைகளின்
இரா முற்றம் துயிலும் காட்சி!

மேகக் காமனின்
பிடியில் சிக்கிய சூரியத்தாய்
கற்பிழந்த நிலையில்
வடிக்கும் கண்ணீர்!

ஓலைக் குடிசைக்குள்
உறங்க மறக்கும்
ஓராயிரம்
மழலைக் குழந்தைகளின்
முனகல் மின்னல்கள்!


இடையிடையே சில
வெற்றிலை இடிப்புகள்
அதனால்...
லொக்கு...லொக்கு..சப்தங்கள்!

உனது வரவால்
எனது முற்றம் கூட
சிறு குட்டையானது.....
அதனால் எனது
மழலைகள்
நீந்தக் கற்றுக்கொண்டன!

முகில் கூழங்களை
சூரிய...
சுத்திகரிப்போன் வந்து
துப்புரவாக்கும் வரை
எங்களுக்கு
வானக் "குடைகள்"
எங்களின் கைகளில்தான்!!!

-ரியாத், சவூதி அரேபியா.

## நீ சிரிக்க நான் அழுவேன்?




உன் நினைவுகள்
பசுமையானதா
பலமானதா
இன்னும்
உயிரானதா?!

என் மூச்சு
இருக்கிறதே
என்றென்னும்போதே
கூடவே - உன்
நினைவும்
வருகிறது.

சூரியனையும்
மேகங்களிடையே
நிலவையும்
கூடவே
நட்சத்திரங்களையும்
பார்க்கையிலே
நீதானே
தெரிகிறாய்.
மொட்டில்
ஒளிந்திருக்கும்
பூவைப் போல
சிப்பியில்
மறைந்திருக்கும்
முத்துப்
போல
நீயேதான்
சிரிக்கிறாய்!

ஆனால்,
கண்ணே -
நான்
அழுகிறேன்
ஏன் தெரியுமா?



நீ சூரியனாய்
மறைகிறாய்
நிலவாய்
தேய்கிறாய்
பூவாய்
உதிர்கிறாய்!?

-எம்.நளர், மன்னார்.

## தாயே! நீ வாழ்க!!

உறங்குகிறேன் அன்னையே
நான் மட்டும் - உள்ளமோ
உறங்க மறுக்கிறது - என்
உணர்வுகளுடன் சேர்ந்து
உன் அருகாமையை எண்ணி....



கடல் கடந்த தீவில் நின்று
உள்ளம் கடந்து - எங்கோ
ஒழுகிய சில நிமிடங்களை
தேடிப் பார்க்கிறேன்.

உள்ளம் தொட்டு உதிரத்தில்
உறங்கிக் கொண்டிருப்பது - என்றும்
மாறாத உண்மை அன்பும்
உன் நினைவுகளும்தான் தாயே!

ஈரஞ்சு மாதங்கள் எனைச்சுமந்து
இன்னல்கள் பல அனுபவித்து - இவ்வுலகில்
ஈன்றெடுத்த என் தாயே!
எனக்காக நீ செய்த தியாகங்கள்தான்
எத்தனை! எத்தனை!! - அவற்றை
ஈடுசெய்ய இப்பிறவி போதாதம்மா!
ஆனாலும் தாயே! என் உயிர் உள்ள வரை
என் நிழலில் நீ வாழ இறைஞ்சுகிறேன்
இறைவனையே!

எஸ். சுதாகர், மாலைதீவு.

## ஞாபகச் சிறகுகள்

கண்ணீர் துளிர்விடாமல்
கண்கசக்கி அடம்பண்ணிய
சின்ன வயதின்
அறியாத ஞாபகங்கள்.

தட்டான் பிடிக்க
ஆற்றில் இறங்கி
கால்கள் தடுமாற
ஆற்றில் விழுந்து
அழுக்கு நீர் பருகிய
குமட்டல் ஞாபகங்கள்.

நண்பனோடு ஊர்ச்சுற்றி
கெட்டப்பழக்கமொன்றை
சட்டைப் பையில் வைத்து
அப்பாவிடம் குட்டுவாங்கிய
தப்பான ஞாபகங்கள்.

தீபாவளி தினமொன்றில்
எனக்கும் முடியுமென்று
கையில் வெடி கொளுத்திய
சாகஸ ஞாபகங்கள்.

அடை மழையினிலே
வர்ணக்குடை மடக்கி
இயற்கையோடு நான்
நனைந்து
இரவெல்லாம் தும்மி
இரண்டு மீட்டர் துணி நனைத்த
ஈர ஞாபகங்கள்.

இத்தனை ஞாபகங்கள்
இரசித்து நான் பார்க்கையிலும்
சொல்லாமல் வந்த
மரணம் போலவல்லாமல்
சொல்லிவிட்டு வந்த
சோக ஞாபகங்கள்
எல்லாமே பொய் நாடகங்கள்.

-பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

## எதிர்பார்ப்பு....

கட்டிலில் தூங்கினேன்
கனவாய் வருவாய் என....
சோலையில் வீற்றிருந்தேன்
தென்றலாய் வருவாய் என....

வாசலில் காத்திருந்தேன்
வாஞ்சையோடு வருவாய் என....
தனிமையை விரும்பினேன்
தரிசனம் தருவாய் என......

கவிதையாய் எழுதித் தந்தேன்
காதலை உணர்வாயென.....
கற்பனை உலகில்
சஞ்சரித்தேன்
கவிதையாய் வருவாய் என.....

இன்னும்
மலரோடு காத்திருக்கின்றேன்
நண்பனாய் அல்ல....
காதலனாய் வருவாய் என....

-பொபிதா, மன்னார்.

## ஈரநிலவு....!

அணு ஒன்று
தயாரிக்க வேண்டும்.
அப்துல் கலாம்
தேவையில்லை;
அவள் பார்வையே
போதும்!

வீட்டாருக்குப்
பயந்து
கண்டம் விட்டு
கண்டம் தாவுகிறது
அவள் இதயம்!

வொஷிங்டன்
வெள்ளைக்காரியே
பச்சோந்தித்தனம் - உன்
பரம்பரை
வியாதியா?

என்
சின்னச்சின்ன
ஆசைகளெல்லாம்
சீனப் பெருஞ்சுவராகி
விட்டன.

காதல் தந்தவள்
மட்டும் - உலக
வர்த்தகமையமாய்
எனை உடைத்துவிட்டு
ஒஸாமாவாய்
ஒளிந்துகொண்டிருக்கிறாள்!
எப்போது என் எதிரே வருவாய்
அந்நாளில்.......

ஈபில் டவரிலிருந்து
இதயம் ஒழுகி
அரபிக்கடலில் - என்
ஆத்மா
அமிழ்வதை
வங்காள விரிகுடா
எல்லாம்
வாய்பிளந்து
பார்த்துக்கொண்டிருக்கும்!

-நஸீம் ரூமி, புத்தளம்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

கடிதம் இருவரிடையே பகிர்ந்துகொள்ளப்படும் அந்தரங்கம் என்பதுதான், மூன்றாவது நபருக்கு அதில் ஏற்படும் ஈர்ப்புக்குக் காரணம் என்று தோன்றுகிறது. இன்னொருவரிடம் நம் மனதைத் திறந்து காட்டுகிற அவசியமும், சுதந்திரமும் கடிதங்களை சுவாரஸ்யப்படுத்துகின்றன. கடிதங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பதுகூட வாழ்க்கையின் சுவாரஸ்ய கணங்களாகின்றன.

கவிதைகளிலும் கடிதங்கள் சுவை மிகுந்த பகுதிதான். விலங்குகளை, பறவைகளை அஃறிணைப் பொருட்களை எல்லாம் தூதுவிட்டுப் பாடிய கவிதைகள் அந்தக் காலத்திய கடித முறைதான்.

பின்னர் சீட்டுக் கவியாக எழுதியவையும் கடிதங்கள்தான். இன்றும் கடிதங்களாக எழுதப்படும் கவிதைகளுக்குக் கூடுதல் சுவை இருக்கிறது. கடிதங்களுக்கு இருக்கும் இரகசியத் தன்மை கவிதைகளுக்கும் ஈர்ப்பைச் சேர்க்கிறது.

### உன் கடிதம்

பெயர் வேறெனிலும்
கிழமைகள் ஒன்றைப் போல் ஒன்று.
திடுமென அவற்றிற்கு
முகங்கள் முளைத்து
ஒவ்வொன்றுமொரு சேதியுடன்
உதடு பிளந்தன.
புழுங்கிப் பொருமி,
மிகமிகச் சிறியதாய்
விரிசல் விட்டன சுவர்கள்.
புராதன இருளுள்
வெளிச்சம் விரைந்தது.
அறைக்குள் தப்பிப் புகுந்த
சிட்டுக்குருவியைப் போல
அழகிய கூச்சல்களிட்டுப்
படுக்கை மேல் படபடத்தது
உன் கடிதம்.
தனிமையின் மென்தளத்தில்
இரக்கமின்றிப் பாய்ந்தன
பனிக் கத்திகள்.
முனை முடமாக்கிக் காத்த
முட்கள் பூத்தன.
இனிமைகள் பெருகவும்
திடமிழந்த சோகங்கள்
தேங்கும் அடியில் கரைந்து.
புதைத்தலும், எரித்தலுமில்லா
வேதனைகள் மட்டும் வெறித்தபடியே
இருப்பினும் உயிர்த்தல் பழகென்று
உரத்துச் செல்லும் உன் வரிகள் மட்டும்.

-உமா மகேஸ்வரி

* * *

### எழுதப் போகும் கடிதம் பற்றி....

அர்த்தமற்ற பொழுதுகளில்
கோர்த்துக் கொண்டிருந்த வார்த்தைகளால்
உனக்குக் கடிதமொன்று எழுதுவேன் – அது
கடந்த நிகழ்வுகளின் ஆறாத் தழும்புகளை
விளக்குவதாயிருக்கும் அல்லது
பரவிக் கிளைத்த பெருமரம் தாங்கிய
வேரும் விழுதுகளும் மக்கி மரமும் மடிந்ததன்
காரணம் கேட்டுவரும்.
குழம்பிய கதைகளைத் தெளிவுருவாக்கும்
தெளிந்த பிம்பங் காட்டுவதை
அடியோடு கலக்கித் தேடும்
எரிகின்றதில் நீராய் வீழ்ந்து
கருகியது போக மீதம் காக்கும் அல்லது
எண்ணெய் வார்த்து வானெழும்பும்
தீப்புகையின் ஊடே அலையும்.
பதப் பிரயோகங்களின் பண்பாடு பற்றி
நிச்சயிக்க முடியாது
சொற்றொடர்கள் முடிவடையாதிருந்தால் அது
எழுதும்போது ஏற்பட்ட பெருமூச்சால் கரைந்திருக்கலாம்
தகவல்களில் தவறிருக்கலாம் – திருத்தங்கள்
தீர்ந்து போனதால்.
அஸ்திரவாரத்தைப் பெயர்த்துப் பார்த்தது யாரென்றும்
சுவர்களைத் தாங்கியதில் காயம்பட்டவர் யாரென்றும்
காண முயல மாட்டேன்.
கோபுரப் புறாக்களின் விலாப்புறக் கதகதப்பு
இருட்டுமரட் பொந்தாந்தையின்
பார்வைக் கனலாய்ப் பெயர்ந்ததை எழுதுவேன்
உயிரொட்டி வளர்த்த பூவின்
திசையொட்டி வீசும் மணத்தை மட்டும்
அழித்துப் போன பெயர் தெரியா அரக்கனின்
சுவடுகளைச் சுட்டுவேன் – சிகரங்கள் சிதைந்து
சிறு
குன்றுகளாய்க் குறுகிய கொடுமையைக் கூறுவேன்.
கடல் கிடந்த இடத்தில் இன்று
தோண்டத் தோண்டத் துளியும் தோன்றாத
துயரத்தை அறிவிப்பேன்
சூறையாகித் தோட்டம் தகர்த்த
தென்றலை வியந்து
முயலின் முதுகில் வண்ண வரி விழுந்து
நீளவால் முளைத்து அது வலிவான உடல் முறுக்கி
வேட்டைக்குப் பாய்ந்த மாயத்தைக் குறிப்பிடுவேன்.
ஆணையிடுவேன் அடங்கிப் புதைந்திருப்பேன்
குதிரை மீதேறி வாள் சுழற்றுவேன்
நதி வேகமெதிர்த்து நீந்திக் காட்டுவேன்
அழுக்குக் குட்டையினுள் மூழ்கித் திணறுவேன்
கொக்கரிப்பேன் கூத்தாடுவேன். உறுதியிழந்து
உதவி கேட்டு ஒடிந்திருப்பேன்.
எழுதத் தொடங்கும்போது எல்லாமும் மறந்தாலும்
என் நெஞ்சில் ஒற்றியெடுத்த
உன் பெயரெழுதி வைப்பேன்
விஷயங்கள் அனைத்தின்
ஒரு சொல் சுருக்கமாக.


-பூமா வாசுகி.

### கடிதம்


எனக்கு யாரும் கடிதமெழுதவில்லை என்று
யோசனை பல காலமாய்.
என் கவலைகள்
நானும் எழுதமுடியாமல் போய்விட்டதென்று.
பல பேர்களில் சிலருக்காவது
ஏதாவது எழுதலாம்
அந்தச் சில பேர்கள்
யாரென்று எப்படித் தீர்மானிப்பது?
என்ன எழுதுவார்களென்பது இருக்கட்டும்
யாருக்கும் நேரமில்லையா எதுவும் தெரிவிக்க?
நேரிடையாகச் சிலர் என்னுடன் பேசி
அலுத்துப் போயிருப்பார்.
அவர்களாவது எனக்கு
ஏதாவது எழுதலாம்.
ஆனால் என் முகம் பிடிக்காமல் போயிருக்கலாம்.
நான் திரும்பவும் எழுதி
படிக்க நேரிடுமோவென்று பயந்திருப்பார்.
என் கடிதங்களின் கோணல்கள்
அவர்களைத் திகைக்க வைத்திருக்கும்
அவர்கள் முகங்களைப் பிளக்க வைக்கும் வரிகள்
தென்பட்டிருக்கலாம்.
உறவினர் ஒருவர் புத்தாண்டு வாழ்த்து
அனுப்பி இருந்தார்.
நான் தயாராய் இருந்தேன் பதில் எழுத
ஞாபகமாய் முகவரியைத் தவிர்த்திருந்தார்.
யாரோ ஒரு நண்பன்
பேர்முகவரி எதுவுமில்லாமல்
அவனுக்குக் கிடைத்த பதவி உயர்வைத்
தெரிவித்திருந்தான்.
கடிதத்தில் அவன் கிறுக்கிய
கையெழுத்து புரியவில்லை.
இன்றுவரை எனக்கு எந்தக் காதலியும் கிடையாது.
நானே ஒருத்தியை உருவாக்க
கற்பனையில் தான் கடிதம் எழுதவேண்டும்.
யாரும் என்னுடன் கடிதம் மூலம்
பேசவிரும்பவில்லை.
நானோ காத்திருக்கிறேன்
கையில் பேனாவுடன்.

-அழகியசிங்கர்


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : M.S. Moh`d rafeek
வயது : 23
முகவரி : Pipe Technology System, P.O.Box - 10850, Dammama - 31443, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர் : Y.Puspan,
வயது : --
முகவரி : Al. Huda, P.O.Box -17015, Doha, qatar.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், பத்திரிகை.



பெயர் : வி. தமிழ்ச்செல்வன்.
வயது : 22
முகவரி : A12 S.4 N.H.S மாளிகாவத்தை, கொழும்பு –10.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.



பெயர் : ஐ.ஏ.றசாக்
வயது : --
முகவரி : இல. 303, ஓடாவியார் வீதி, ஏறாவூர் –02.
பொழுதுபோக்கு : வழமைமையானவை.







உண்மையில் பசளிக் கீரை போல் உடலுக்கு நன்மை தரும் காய்கறி வேறெதுவும் இல்லை. இரும்புச் சத்து, பீட்டா கரோட்டின், ஃபோலிக் அமிலம், கல்சியம் எல்லாமே இதில் அதிகம். ஃபோலாசின் நோய்த் தடுப்புக்கு முக்கியம் என்பதால் இருதயநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

குழந்தைகளுக்கு வரும் சில நரம்பு வியாதிகளை வராமல் தடுப்பதால் மேலைநாடுகளில் கோதுமை, மைதா போன்ற மாவுகளில் கலந்து விற்கிறார்கள். இந்தக் கீரையில் உள்ள சில இரசாயனப் பொருட்கள் பார்வைக் குறைவைத் தடுக்கிறது. மலச்சிக்கலுக்கு எதிரி.

**சரித்திரம் :-** பசளி ஆசியாவில் முதலில் பழக்கத்திற்கு வந்ததாகச் சொல்கிறார்கள். பத்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அறிமுகமானது. 1800களில் பிரபலமானது. பிரான்ஸ், இங்கிலாந்து வந்து பின் அமெரிக்காவுக்குப் போனது.


மக்கள் அதிக நேரம் வேகவைத்ததால் சாம்பல் கலருக்கு மாறி வாசனையும் போய் சத்தெல்லாம் வீணானது. அப்புறம்தான் கீரையை எவ்வளவு ஃப்ரஷாக சமைக்கிறோமோ, அந்த அளவுக்கு நல்லது; சத்து வீணாகாது என்று புரிந்தது.

**கிடைக்கும் பருவம் :-** ஆண்டு முழுவதும் கிடைக்கும். குளிர் காலத்தில் இளசாகக் கிடைக்கும். மணமும் அலாதி.

**தேர்ந்தெடுத்தல் :-** பசுமையாக ஈரப்பசையுடன், கரும்பச்சை நிறமாக இருக்க வேண்டும். மஞ்சள் இலைகள் இருந்தால் கீரை பழசு. தண்டு மெலிதாக இருந்தால் இளசு. முகர்ந்து பார்த்தால் அதன் பச்சை வாசனையிலேயே தெரியும் புதியது என்று.

**பாதுகாத்தல் :-** சாதாரணமாக கீரையை நறுக்கிவிட்டு அலம்புவார்கள். அப்படிச் செய்தால் சத்துக்கள் வெளியேறிவிடும். பதிலாக ஒரு பெரிய பாத்திரத்தில் நீர் வைத்து அப்படியே முழுசாகப்போட்டு அலசி எடுக்கவும். தண்ணீரில் மண் குப்பையெல்லாம் தங்கிவிடும். பின்பு நறுக்கிச் சமைக்கவும். முற்றிய தண்டுகளையும், இலைகளின் நடுவில் தடித்துள்ள பாகங்களையும் கிள்ளி போட்டுவிட வேண்டும்.

**மருத்துவக் குணங்கள் :-** இதில் அதிகமாக உள்ள பச்சையம் கொழுப்பைக் கரைக்கும் தன்மையுள்ளது. இரத்தத்தின் சிவப்பு அணுக்கள், ஹீமோகுளோபின் ஆகியவை அதிகமாக உற்பத்தியாக



உதவுகிறது. ஹீமோகுளோபின் இரத்தத்தில் ஆக்ஸிஜனை ஏற்றிச் சென்று உடலின் செல்களுக்கு தந்து, அங்கிருந்து கரியமிலவாயுவை வெளியேற்றுகிறது. இதனால் இரத்தம் சுத்தமாகி உடலில் பாக்டீரியா தாக்காமல் தடுக்கிறது. இக் கீரையில் இருக்கும் பொட்டாசியம் நரம்பு மண்டலத்துக்கு வலுவூட்டுகிறது. இரத்த அழுத்தம் சீராக இருக்கவும் பயன்படுகிறது.

அதே சமயம் இதிலிருக்கும் ஆக்ஸாலிக் அமிலம் உடலில் இரும்பு, கல்சியம் சேராமல் தடுக்கிறது. இதனால் இருதய நோயாளிகள் இந்தக் கீரையை அளவுக்குமீறி சாப்பிடக் கூடாது.

சமைப்பது :- கட்டாக இருந்தால் பிரித்து கொஞ்சம் வாடிய மஞ்சள் நிற இலை, தண்டை எடுத்துவிட்டு காற்றோட்டமாகச் சிறிது நேரம் வைத்தால் உள் ஈரம் போய்விடும். அலசும்போது இருக்கும் ஈரமே போதும். அதிக தண்ணீர் வைத்து வேகவைப்பது தவறு. தேவைப்பட்டால் கொஞ்சம் தண்ணீர் தெளித்து மூடாமல் வேக விடலாம். நிறம் மாறாமல் இருக்க சிறிது சர்க்கரை சேர்க்கலாம். கீரையில் இருக்கும் உப்பே போதுமானது; கூடுதலாகத் தேவையில்லை என்கிறார்கள். தேவைப்பட்டால் கடைசியில் கொஞ்சம் போடலாம். வெந்தால் கீரை சுருங்கி விடுமென்பதால் முதலில் சேர்த்தால் உப்பு கரிக்கும். குறைந்த நேரமே வேகவைக்கவும்.

**உணவுச் சத்து :-** இதிலுள்ள விட்டமின் ஏ பார்வைக் கோளாறைத் தடுப்பதோடு சோர்வை நீக்கி, இரத்த விருத்திக்குத் உதவுகிறது. ஒரு கப் பசலைக் கீரையில் இருக்கும் உணவுச் சத்து கலோரி 40, கொழுப்பு0, சோடியம் 80 மில்லி கிறாம், விட்டமின் ஏ 6800 IU (இது ஒரு நாளைக்குத் தேவைப்படும் அளவை விட ஒன்றரை மடங்கு அதிகம்.) விட்டமின் சி 28 மில்லி கிறாம், ஃபோலாசின் 200 மி.கிறாம், கல்சியம் 100 மி.கிறாம், பொட்டாசியம் 560 மி.கிறாம்.

**சில சமையல் வகைகள் :-** இதை பச்சையாக சாலட்டுடன் சேர்த்துச் சாப்பிடலாம். வெங்காயம், தக்காளி சேர்ந்துக் கடைதல், தேங்காய், மிளகாய் வற்றல் சேர்த்து அரைத்துக் கூட்டு செய்தல், புளி, பருப்பு போட்டு குழம்பு, மோர் தேங்காய் அரைத்து மோர்க் குழம்பு இப்படி நிறைய முறையில் சமைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

### பேஸ்ரி

***தேவையான பொருட்கள் :-***

| | |
|---|---|
| கோதுமை மா | - 1 கிலோ கிறாம் |
| தண்ணீர் | - அளவிற்கு (1/2 லீற்றர்) |
| சீனி | - 20 கிறாம் (1 மே.க.நிரப்பி) |
| தேன்கூடு மாஜரீன் | - 100 கிறாம் |
| லில்லி மாஜரீன் | - 600 கிராம் |
| உப்பு | - 15 கிறாம் |
| முட்டை வெண்கரு | - 01. |

***செய்முறை***

மாவை அரித்தெடுத்துப் பாத்திரத்திலிட்டு தேன்கூட்டு மாஜரீனையிட்டு கைகளால் நன்றாகப் பிசிறிச் சேர்த்துக் கொள்க.

பிசைந்த மாவைக் குவியலாக்கி, நடுவே ஓர் குழி போல அமைத்து அக் குழியினுள் சீனி, உப்பு என்பன இட்டுத் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாக அளவிற்கு விட்டு, பற்றீஸ் மாப்பதத்திற்குக் குழைத்துப் பாத்திரத்தில் அடித்து மென்மையாக்கி, கையில் ஒட்டாத பதத்திற்கு உருண்டையாக உருட்டி 20 நிமிடத்திற்கு வைத்துக்கொள்க.

லில்லி மாஜரீனை பிறிதொரு பாத்திரத்திலிட்டு கைகளால் நன்கு பிசைந்து 4x4 அளவுடைய சதுர வடிவில் தட்டிக்கொள்க.

பின்பு மாப் பசை உருண்டையின் மேல் வடிவில் குறுக்கும் நெடுக்குமாகக் கோடு வரைந்து கோடுகளுக்கு இடைப்பட்ட நான்கு மூலைகளையும், உள்ளங்கையால் மெதுவாக அமர்த்தி விரித்துக் கொண்ட பின்பு, நடுவே மேடாக உள்ள பகுதியை உள்ளங்கையால் அமர்த்தி அதன் மேல் "4x4"ஆகத் தட்டிக்கொண்ட மாஜரீனைக் குறுக்காக வைத்து விரித்த நான்கு பகுதிகளாலும் மாஜரீன் தெரியாத வண்ணம் மூடி சதுர வடிவில் மடித்துக்கொள்க.

சதுர வடிவான மாப் பசையை நீளப் போக்கில் இருபுறமாகவும் மெதுவாக உருட்டி பாய் போன்ற பகுதியை மூன்று முறை மடித்து லஞ்ச் பேப்பரில் சுற்றி 10 நிமிடத்திற்கு குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.

மீண்டும் எடுத்து முன்பு போல் உருட்டி மூன்று முறை மடித்து லஞ்ச் பேப்பரில் சுற்றி மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் 10 நிமிடம் வைக்குக.

மீண்டும் எடுத்து முன்பு போல் உருட்டி நான்கு முறை மடித்து மிக மெல்லியதாகப் பாய் போல விரித்து உருட்டி மேல்பரப்பிற்கு முட்டை வெண்கரு பூசியபின் "4x4"அளவான சதுர வடிவான துண்டுகளாக வெட்டியெடுத்து நடுவே கறிவைத்து முக்கோண வடிவில் மடித்து, எண்ணெய் பூசிய தட்டில் இடைவெளி விட்டு அடுக்கி 430 பாகை F இல் 25 நிமிடத்திற்கு அவணில் வைத்து பேக் செய்து எடுத்துக் கொள்க.

***குறிப்பு***

ஒவ்வொரு முறையும் மடிப்புகள் அமைப்பதன் மூலம் இறுதியில் 81 படைகள் உருவாகும்.

அறை வெப்பநிலை குறைவாக இருந்தால் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டியதில்லை.

மாப் பசைக் கலவையைத் தயாரித்து 2 வாரமளவிற்கு குளிர்சாதனப் பெட்டியில் வைத்துத் தேவையானபோது எடுத்து உருட்டி பேக் செய்து கொள்ளலாம்.

## தலைவலி

பெண்களுக்குத் தோன்றும் இன்னொரு முக்கியமான உபாதை தலைவலி. குடும்பத் தொல்லைகளினாலும் வெளியே வேலைத் தொல்லைகளினாலும் மிகவும் சோர்வு அடைந்த ஒரு பெண் சாதாரணமாக அனுபவிப்பது தலைவலி. தொடர்ந்து கவனத்தை ஈடுபடுத்துவது, சிக்கலான அடுப்படி வேலைகள், தொடர்ந்த இரத்தப் போக்கு, கண் பார்வை பாதிக்கப்படுவது போன்ற பல காரணங்களினால் குடும்பப் பெண்ணுக்கு எளிதாகத் தலைவலி உண்டாகிறது.

தலைவலி என்றதும் தலைவலி மாத்திரை



ஒன்றைச் சாப்பிட்டுவிடுவது நமது பெண்களிடையே சாதாரணமாக இருக்கிறது. தலைவலி ஒரு நோயின் அடையாளமே தவிர, அதுவே ஒரு நோய் அல்ல. தலைவலியின் காரணம் என்ன என்பதை அறிந்து அதற்குரிய மருத்துவம் செய்துகொள்ள வேண்டும். உடம்பிலோ, உள்ளத்திலோ ஒரு டென்ஷன் ஏற்படுமானால் தலைவலி தோன்றக்கூடும். இரவு நேரங்களில் கண் விழித்து வேலை செய்வதினாலும், அடுப்பில் பல விதமான புகைகளுக்கும் வாசனைகளுக்கும் நடுவே வேலை செய்வதினாலும், வெய்யிலில் வெளியே போய் வருவதினாலும் குடும்பப் பெண்களுக்கு ஏற்படும் தலைவலி சகஜமானது. கண்ணுக்கு ஓய்வு கொடுப்பதும், சற்றுத் தூங்கி ஓய்வு எடுப்பதும் குணம் தரும். சளி உபத்திரவத்தினால் மூச்சுக் குழாய் அடைபடுவது அல்லது கண் பார்வைக் குறைவினால் ஏற்படும் தலைவலி தொடர்ந்து இருக்கும். இவற்றிற்கு அதற்குரிய உடல் குறை என்ன என்பதைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்துகொள்வது நல்லது.

மைக்ரேன் என்று சொல்லப்படும் தீவிரத் தலைவலி தொடர்ந்து தலையின் ஒரு பாகத்தில் தோன்றும். இந்த வலியைத் தொடர்ந்து கடுமையான வாந்தியும் இருக்கலாம். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுதனால் இந்தத் தலைவலி உண்டாகிறது. மனோதத்துவ அடிப்படையிலும் இந்தத் தலைவலி ஏற்பட வாய்ப்பு உண்டு. தலைவலிக்குக் குறிப்பிட்ட வைத்தியம் எதுவும் கிடையாது. காரணம் என்ன என்பதை அறிந்து அதற்கு உரியதாகச் செய்யும் வைத்தியமே சிறந்தது. எப்போதாவது சில நேரம் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே தோன்றும் தலைவலிக்கு, தலைவலி மாத்திரையே போதுமானது. மாதவிடாய் நேரங்களில் ஏற்படும் தலைவலி, ஓய்வு, மன அமைதி கிடைத்தால் நீங்கிவிடும். 40 வயதுக்குப் பிறகு கண் பார்வையில் குறையிருந்து தலைவலி ஏற்பட்டால் டாக்டரிடம் காண்பித்துத் தகுந்த மூக்குக் கண்ணாடி போட வேண்டியது அவசியம்.

## பிறந்த வீடா? புகுந்த வீடா?

திருமணமான புதிதிலும், சிலருக்கு வாழ்க்கை முழுவதிலும் கூட பிறந்த வீடா? புகுந்த வீடா? பிரச்சினை இருப்பதுண்டு. பெற்று வளர்த்து, பாராட்டிச் சீராட்டி வளர்த்த தாய் தந்தையரை, இருபது வருடங்களுக்கு மேலாக ஒன்றாக இருந்த நினைவுகளை திருமண பந்தம் சற்று வேறுபடுத்துகிறது. இது சோகமல்ல, சுகம். தன் பெண்ணுக்கு நல்ல இடத்தில் திருமணம் என்றால் எந்தப் பெற்றோருக்குத் தான் மகிழ்சியளிக்காது?

வரன் கிடைக்காமல் தத்தளிக்கும்போது, 'ஆஹா! நல்ல வேளை. நம் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாகவில்லை. இன்னும் கொஞ்சநாள் நம்முடன் இருக்கப்போகிறாள்' என்று எந்தப் பெற்றோராவது சந்தோஷப் படுவார்களா? நாள் தள்ளத் தள்ள சுமைதான் ஏறும். மனத்தில் பாரம்தான் அழுத்தும்.

வேலைக்குப் போகும் பெண்களின் வருமானத்தில் வாழும் வயதான ஓரிரு பெற்றோர்கள் வேண்டுமானால் மகள் பிரிவதால் மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கஷ்டம் உண்டாவதை உணர்வார்கள். அந்த நிலையிலும் தன் மகளுக்குத் திருமணமாக வேண்டும் என்றுதான் நினைப்பார்கள்.

இந்த நிலையில் திருமணமாகி வந்த உங்களுக்கு, உங்கள் தாய் தந்தையரைப் பற்றிய எண்ணமும், அவர்களைப் பிரிந்த ஏக்கமும் உங்களை வாட்டும். அது இயல்புதான். அதற்காக அதையே நினைந்துருகி, பிறந்த வீட்டின் பெருமையையே பேசி, புகுந்த வீட்டின் வசவுக்கு ஆளாகாதீர்கள்.



இனி இதுதான் உங்கள் வாழ்க்கை. நீங்களும் உங்கள் கணவரும் தாய் தந்தையராகி, உங்கள் தாய் தந்தையரைப் போல எல்லாப் பொறுப்புக்களுக்கும் ஆளாகப் போகிறீர்கள். உங்கள் பிறந்த வீட்டின் பெருமையைப் புகுந்த வீட்டிலுள்ளோரே அறிந்துணருமாறு அடக்கமாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் வீடும் உங்கள் மகளுக்குத் திருமணமாகும்போது உங்கள் புகுந்த வீடு, உங்கள் மகளுக்குப் பிறந்த வீடாகும். புகுந்த வீடு பிறந்த வீடு என்பதெல்லாம் மாறும் தன்மையுடையதே, நீங்கள்தான் பேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# ஒரு தாய் மகள் 06

இந்தத் தடவை வெளியூர் சென்ற வேளை அவன் மகள் ஆலிஸன் தன் நண்பியின் அப்பா வெளியே செல்வதாக பொய் கூறிவிட்டு தன் வகுப்பு தோழர்களுடன் வெளியே செல்ல காத்து நிற்கிறாள். மகள் நண்பியின் வீட்டுக்குச் சென்று இரவு பதினொரு மணிக்கு திரும்பி வருவாள் என்று தாய் பேஜ் காத்திருக்கிறாள்


திருட்டுத்தனமாகப் போன் பண்ணி, ஸ்கூலில் இரகசிய மாகப் பேசி, அன்று க்ளோவின் வீட்டுக்குப் பக்கத்தில் நால் வரும் சந்திப்பது என்று முடிவு செய்திருந்தார்கள்.

பிலிப்பிடம்தான் கார் இருந்தது. ஆகவே அவன்தான் எல்லோரையும் அழைத்துப் போவதென்று ஏற்பாடு.

க்ளோவுக்கு ஒரு சந்தேகம். ஜேம்ஸிடம் இரகசியமாக "அவரவர் செலவு அவரவர்களுடையது அப்படித் தானே?" என்று குழந்தை தனமாகச் சொன்னாள். 'பாக்கெட் மணி'யாக அப்பா அவளுக்குக் கொடுத்திருந்த பணம் ஏற்கெனவே பெரும்பகுதி செல வழிந்துவிட்டது அப்பா வாங்க வேண்டாமென்று சொல்லியும் ஒரு ஜதை ஷு வாங்கிக்கொண்டதிலும் ஒரு சினேகிதிக்கு ஐந்த டொலர்கள் கடன் கொடுத்ததிலும் கையிருப்பு தீர்ந்து விட்டது. கட்! பதினைந்து வயதாகியும் செலவுக்கு இப்படிக் கஷ்டப்பட வேண்டிருக்கிறதே" என்று அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

"அபத்தமாய்ப் பேசாதே!" என்று ஜேம்ஸ் சிரித்தான்."உங்கள் இரண்டு பேரயைும் கூப்பிட்டதே நாங்கள்தான். ஆகவே செலவெல்லாம் எங்களுடையது!" என்றான் பெரிய மனுஷன் போல.

ஒரு வாரமாக ஆவிஸனுக்கும் க்ளோவுக்கும் இதேதான் பேச்சு. இதேதான் சிரிப்பு. இந்த இரவு எப்போது



வரும் என்று படபடத்துக் காத்திருந்தார்கள்.

இதோ வந்துவிட்டது.

ஆனால் ஏன் இத்தனை நேரம்? ஜேம்ஸையும் காணோம் பிலப்பையும் காணோம்?"

"சும்மா விளையாட்டுக்காகச் சொன்னார்களோ என்னவோ. அனோகமாய் வரமாட்டார்கள் பார்" என்றாள் ஆலிஸன். ஒருவகையில் ஏமாற்றமாயிருந்தாலும் சங்கடத்திலிருந்து தப்பினோம் என்று நிம்மதியாயும் இருந்தது. அவர்கள் தமாஷ் பண்ணியதை நாம் தப்பாக எடுத்துக்கொண்டு விட்டோம். என்னை வெளியே அழைத்துப் போக வேண்டும் என்று பிலிப் ஆசைப்பட்டிருக்கவே மாட்டான். அவனுக்கு வயது பதினேழு ஏன், பதினெட்டுக் கூட இருக்கும் இரண்டு மாதத்தில் பட்டம் வாங்கிக்கொண்டு மேல்படிப்புக்குப் போகப் போகிறவன். நீச்சல் டீமில் கேப்டனாயிருக்கிறான்...."

"இருக்கட்டுமே? அதனால் பெரிய ஆளாகிய் ஆகிவிடுவானனா?" என்ற க்ளோ தோழியை ஏற இறங்கப் பார்த்து, "நீ எத்தனை அழகாக இருக்கிறாய்? உன்னை வெளியே அழைத்துப் போக அவன் அதிர்ஷ்டம் பண்ணியிருக் கணுமாக்கும்!" என்றாள். ஆனால் ஆலிஸனுக்கு ஏற்பட்ட பயம் அவளுக்கும் ஏற்பட்டிருந்தது. பிலிப்பும் ஜேம்ஸும் வெறுமனே கலாட்டா பண்ணியிருப்பார்களோ என்று அவளுக்கும் கலக்கம் உணண்டாயிற்று.

அவர்கள் பேசிக்கொண்டிருக் கையில் தெருமுனையில் காரின் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. ஒரு மெர்ஸிடிஸ் கார் அவர்களை நோக்கி வந்து டக்கென்று நின்றது.

பிலிப்தான் காரை ஓட்டி வந்தான். ஜேம்ஸ் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். இருவருமே ஷர்ட்டும் கோட்டும் அணிந்து டையும் கட்டிக் கொண்டிருந்தார்கள். 'என்ன அழகாயிருக்கிறார்கள்!' என்று அவர்களைப் பார்த்த வுடனே தோழிகள் இருவரும்

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

நினைத்துக் கொண்டார்கள்.

ஆலிஸனைப் பார்த்துப் புன்னகை செய்தான் பிலிப். "லேட்டாகிவிட்டது, ஸாரி. காருக்கு டீஸல் போட வேண்டியிருந்தது. ஆனால் டீஸல் விற்கிற பங்க் ஒன்று கூட அகப்பட வில்லை" என்றான்.

ஜேம்ஸ் இறங்கி வந்து பின் ஸீட் கதவைத் திறந்து அவளை ஏறிக் கொள்ளச் சொல்லி, தானும் ஏறிக் கொண்டான். க்ளோவின் மயக்கும் அழகு அவனைச் சொக்க வைத்து விட்டது. ஆலிஸன் பிலிப்பின் அருகில் உட்கார, "சீட் பெல்ட்களை எல்லோரும் போட்டுக்கொள்ளுங்கள். ப்ளீஸ்" என்று மிடுக்காகச் கூறிவிட்டு, ஓட்டலை நோக்கிக் காரைச் செலுத்த லானான் அவன்.

பதினெட்டு வயதைத் தாண்டிய பெரியவர்களைப் போல ஒரு பெருமிதம் அந்த நான்கு பேர் நெஞ்சி லும் நிறைந்தது.

என்னவோ பல வருடங்களாகப் பழகியவர்கள் போலவும், எத்தனையோ தடவை இது போல ஓட்டல்களுக்குச் சேர்ந்து சென்றவர்கள் போலவும் பின் ஸீட்டில் ஜேம்ஸும் க்ளோவும் சளசள வென்று பேசிக்கொண்டிருந்தார்கள் ஆனால் ஆலிஸனுக்கும் பிலிப்புக்கும் கூச்சம். மெதுவாகப் பேசிக்கொண் டார்கள்.

"உனக்கு இந்த டிரெஸ் ரொம்ப நன்றாயிருக்கிறது" என்றான் பிலிப். சற்றுத் தயங்கிய பின், "நீ வருவாயோ மாட்டாயோ என்ற நினைத்தேன். வந்ததில் சந்தோஷம்" என்றான்.

"எனக்கும்தான்" என்றாள் ஆலிஸன்.

"இப்படி நீ பையன்களோடு வெளியே போவது உன் வீட்டிலே பிடிக்காதா? அல்லது பையன்களுடன் காரிலே போகிறதென்றால் பிடிக்காதா?" என்று பிலிப் வெளிப்படையாகக் கேட்டான்.


"என் வீட்டில் எனக்கு நல்ல சுதந்திரம் உண்டு. எதற்குமே ஆட்சேபம் சொல்ல மாட்டார்கள்" என்று கூறவே ஒரு கணம் நினைத்தான் ஆலிஸன் ஆனால், பிலிப்பை அவளுக்குப் பிடித்து விட்டது. நல்ல பையன் அவனிடம் பொய் பேசாமல் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. நாணத்துடன் கன்னகை செய்து, "பையன்களுடன் போவது, காரில் போவது இரண்டுமே என் அம்மா அப்பாவுக்குப் பிடிக்காது சுத்தக் கிறுக்குத்தனமான கட்டுப்பாடு!" என்றாள்.

"அப்படியில்லை. அவர்கள் சொல்வது ஒருவகையில் நியாயம் தான்" என்றான் பிலிப். "ஆனால் நான் ரொம்ப ஜாக்கிரதையாகக் கார் ஓட்டுவேன். எனக்கு ஒன்பது வயதானபோதே என் அப்பா எனக்குக் கார் டிரைவிங் கற்று கொடுத்து விட்டார்." என்றவன் ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தபடி, "ஒருநாள் உன் வீட்டுக்கு வந்து உன் அப்பா அம்மா வைச் சந்திதால் ஒரு கால் எல்லாம் சரியாகிவிடும்." என்றான்.

"ஓ, கட்டாயம் வா" என்றாள் ஆலிஸன். தங்கள் நட்புக்கு அப்பா அம்மாவின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதில் அவள் காட்டும் ஆர்வம் அவன் மனத்தை நெகிழச் செய்தது.

(தாய் தொடர்வாள்.....)

## விபரீத ஆசை...!



சீனாவின் பொருளாதார்ரத் தலைநகரான ஷங்காய் நகர ஆண்களுக்கு ஒரு விநோத ஆசை. வேலைப்பளு காரணமாக அவர்களால் தினமும் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள முடியவில்லை. காதலி கண்டுகொள்ளாதது கஸ்டமர்களை ஈர்க்க முடியாதது, பொஸ்ஸிடம் திட்டு வாங்குவது, வேலையில் குழப்பம்... என எல்லாத் தோல்விகளுக்கும் உடம்புதான் காரணம் என நினைக்கிற இவர்களுக்கு, அர்னால்டு மாதிரி தங்களை மாற்றிக்கொள்ள ஆசை. நேராக ஆஸ்பத்திரிக்குப்போய் செயற்கை மார்பு பொருத்திக்கொள்கிறார்கள்.

பெண்களுக்குச் செய்கிற அதே மாதிரி ஆபரேஷன்தான்! ஆனால், ஆண்களுக்குப் பொருத்தப்படும் செயற்கை மார்பகம் கொஞ்சம் இறுக்கமாக இடுக்கும்.

## அப்படியென்ன கோபம்?



பாப் இளவரசி கிறிஸ்டினா இகுலேரா மீது பிரபல பாப் பாடகர் ராபி வில்லியம்ஸு க்கு என்ன கோபமோ? சமீபத்தில் வெளியான இவரது சுயசரிதையில் கிறிஸ்டினாவைப் பற்றி கன்னாபின்னா வென்று திட்டி வைத்திருக்கிறார். 'ரொம்ப அசிங்கமான மூஞ்சி அவளுடையது. ஓரினச் சேர்க்கைப் பிரியர்களுக்குப் பிறந்தவள் மாதிரி ஒரு உடல்வாகு' என்றெல்லாம் எழுதியவர், புத்தகம் வெளியாகி எல்லாப் பரபரப்பும் அடங்கிய பிறகு இப்போது வருந்துகிறார்....

"நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது! கிறிஸ்டினாவுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதி இருக்கிறேன். அவரிடமிருந்து பதில் வந்தால் எனக்கு மன நிம்மதி" என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்.

அது சரி, கிறிஸ்டினா அவ்வளவு அசிங்கமாகவா இருக்கிறார்...? அநியாயம்.

## விழாவில் நடிகை ஆடை அவிழ்ந்தது

இங்கிலாந்தில் நடந்த ஒரு விழாவில் கலந்துகொண்ட நடிகையின் ஆடை அவிழ்ந்ததால் அவர் அதிர்ச்சி அடைந்தார்.

பிரபல பாடகர் பீ.டிட்டியின் பிறந்தநாள் விழா இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்தது. இந்த விழாவில் ஹாலிவுட்டின் முன்னணி நடிகை மாரா ரெய்டு கலந்து கொண்டார். அவர் படுகவர்ச்சியாக லோ - கட் ஜாக்கெட் அணிந்து வந்திருந்தார். அப்போது எதிர் பாராத விதமாக பிராவின் ஜாக்கெட் லூப் நழுவியது. அதில் அவரது இடதுபக்க மார்பழகு அப்பட்டமாக வெளியே தெரிந்தது. அதை நடிகை கவனிக்கவே இல்லை. அவருக்கு மது பரிமாறிய சர்வர் நடிகையின் கோலத்தைப் பார்த்து அதைச் சுட்டிக்காட்டினார். அதன் பின்னர் அவசர அவசரமாகத் தனது ஆடையைச் சரி செய்தார்.



அது குறித்து நடிகையிடம் கேட்டபோது, ஒரு வெட்கச் சிரிப்பை உதிர்த்துவிட்டு மறைந்துவிட்டார்.

# 36 ஒரு பெண்ணின் வாழ்நர் வரலாறு



ஹிலாரி கிளின்டன் எழுதுகிறார்


தோழியுடன் பல கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டேன். அத்துடன் எனது எதிர்கால அரசியல் நிலைப்பாடுகள், மற்றும் அரசியலில் முழுமையாக ஈடுபடுவது சம்பந்தமான முயற்சிகள், எதிர்பார்ப்புகள் பற்றி எனது தோழியுடன் விவாதித்துக் கொண்டிருப்பேன். அத்துடன் விஷேடமாக எனது அரசியல் நடவடிக்கைகளில் பல்வேறு விடயங்களுக்கு அவள் காத்திரமான ஆலோசனைகளை எனக்கு தொடர்ந்தும் வழங்கிக்கொண்டே இருந்தாள். ஒருமுறை நானும் எனது தோழியும், சிக்காகோவில் நடைபெற்ற ஜனநாயகம் பற்றிய ஒரு விஷேட மாநாட்டில் கலந்துகொண்டோம். அந்த மாநாட்டில் அமெரிக்க ஜனநாயத்தின் விஷேட தன்மைகள் பற்றியும், உள்நாட்டு, வெளிநாட்டு இராஜதந்திர ரீதியாக, அமெரிக்கா ஜனநாயகத்தின் சிறப்பம்சங்கள் எவ்வாறு முழு அளவில் ஆற்றுப்படுத்துகின்ற அதேவேளையில் முன்மாதிரியாக இருக்கின்றது என்பது பற்றியும் அந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் ஜனநாயகம் மனித உரிமை மற்றும் மானிட சமூகத்தின் சிவில் உரிமைகளின் போராட்டத்தில் அதன் இருப்பு. பாதுகாப்பு. மனித இனவர்க்கத்தின் முழுமையான சுதந்திர வாழ்வுக்கு அமெரிக்காவிலும். இந்திய உபகண்டத்திலும் இரு முக்கிய நடவடிக்கைகளின் கருத்துக்களும் அவர்களின் சிந்தனைப்போக்குகளும் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தின என்பது பற்றி அந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது. இங்கு நான் குறிப்பிடும்

**மேலும்,** இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தினையும், நான் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது எனது உற்ற நண்பியான பெட்சி ஜோன்சன் என்பவர் விஷேட கற்கை நெறியொன்றுக்காக ஸ்பெயின் நாட்டில்



Betsy Johnson



Hillary and Betsy Johnson

ஒருவருட கல்வியினை பூர்த்திசெய்து கொண்டு வீடு திரும்பியிருந்த வேளையில் அந்த நண்பியும்கூட அந்த வியட்னாம் போர் பற்றி என்னுடன் பலவாறு வாதப்பிரதிவாதங்களில் சிலநேரங்களில் ஈடுபடுவாள். அந்தவேளையிலும் நான் எனது நியாயமான கருத்துக்களை வியட்னாம் போர்பற்றி நியாயமான, மற்றும் அநியாயமான நடவடிக்கைகள் பற்றியும் அமெரிக்காவின் அப்போதைய அரசாங்கத்தின் போக்குகள் பற்றியும் எனது உற்ற

அந்த இருநபர்களும் நான் சொல்லாமலே யார் என்பது பற்றி உங்களுக்கு நன்கு தெரியும் என நினைக்கிறேன். அதாவது எமது ஐக்கிய அமெரிக்காவில் இவ்வழியில் புகழ்பூத்தவர்தான் டாக்டர் மாட்டின் லூதர் கிங் என்பவராகும். அதேவேளையில் இந்திய உபகண்டத்தில் இந்த சிவில் உரிமைப்போரில் மகாத்மா காந்தி சிறப்புற்று விளங்குகிறார். அமெரிக்க இந்திய மக்களால் மட்டுமன்றி முழு உலக மக்களாலும் நன்கு நேசிக்கப்படுகின்றவர்கள் தான் டாக்டர் மாட்டின் லூதர் கிங்கும், மகாத்மா காந்தியுமாகும் என்பது இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். இவர்கள் இருவரும், இந்தப் புரட்சியின் மூலம் அந்த நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளை உறுதியாக நின்று வென்றெடுத்தவர்கள் என்பதை வரலாறுகள் பதிந்து வைத்துள்ளது. இவர்கள் இந்த நூற்றாண்டின் புகழ்பூத்த மானிடத் தலைவர்களாகும் என்றால் அது மிகையாகாது.

இவர்கள் பற்றியும் எனது தோழியுடன் பல கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வேன். அத்துடன் எனது எதிர்கால அரசியல் நிலைப்பாடுகள், மற்றும் அரசியலில் முழுமையாக ஈடுபடுவது சம்பந்தமான நிலைப்பாடுகள், எதிர்பார்ப்புகள் பற்றி எனது தோழியான பெட்சி ஜோன்சனுடன் விவாதித்துக்கொண்டிருப்பேன்.

இன்னும் வரும்....

# யுத்தத்தின் விலை!




**1914ம்** ஆண்டு நாடுகளுக்கிடையே நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக 'பெல்ஜியம்' நாட்டவர்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருப்பதையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். இந்த யுத்தத்தில் ஜேர்மனி படையினரால் இவர்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. உலகின் ஒரு பகுதியில் 1914ம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் கோர வடுக்கள் தான் இதுபோன்ற காட்சிகள். யுத்தம் இப்படியான கண்ணீர்க் கதைகளைத்தான் நமக்கு வரலாற்றில் ஆதாரமாக்கியுள்ளது.

# ஐரிஸ் பிரச்சினை!



ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகப் பெரிய பிரச்சினைகளுள் ஐரிஸ் பிரச்சினையும் ஒன்று. இந்த ஐரிஸ் பிரச்சினை 26.07.1914ம் ஆண்டு இடம்பெற்றது. அதில் மக்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின் முன் பிரித்தானிய தலைவர் சேர் எட்வார்ட் கார்சன் உரையாற்றுவதையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். இது 1914ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி இடம்பெற்ற நிகழ்வாகும்.

# மரணச் சடங்கில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளம்!



ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகப்பெரும் பிரச்சினைகளில் ஒன்றான ஐரிஸ் பிரச்சினை ஆரம்பித்த அன்றே சிலர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களுடைய மரணச் சடங்கில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளத்தையே இந்தப் படம் எமக்கு தெளிவுபடுத்துகிறிது.

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**

**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத் தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தந்தை செல்வா, அமிர், சிவாவின் வீடுகள் மீதும் தாக்குதல்

இவர்களனைவரும் மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டனர். இரண்டு மாதங் களுக்குப் பின்னர் மட்டக்களப்புச் சிறையுடைப்பு இடம்பெற்றது. இதில் ஐம்பது தமிழ்க் கைதிகள் தப்பிச் சென்றமை குறிப்பிடத் தக்கது. இதற் கிடையில் 26ஆம் திகதி இந்திய லோகசபைக் கூட்டத்தில் இலங்கைப் படுகொலைகள் தொடர் பாக வெளியிடப்பட்ட காரசாரமான கருத்துக் களை அமைச்சரவைக் காரியதரிசி பி.சி.அலெக் ஸாண்டர் பிரதமர் இந்திரா காந்தியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அப்போது புதுடில்லியில் தங்கியிருந்த சட்வாலை உடனடியாகக் கொழும் புக்கு விரையுமாறு இந்திரா காந்தி பணித்தார். இலங் கையில் ஏற்பட்ட படுகொலைகளையும், இந்தியா வில் நிலவிய பதற்றத்தையும் தடுக்கும் வழி வகைகள் பற்றி இந்திரா ஆராய்ந்தார். சென் னைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை இரத் துச் செய்த இந்திரா காந்தி, அப்போது வெளி விவகார அமைச்சராகவிருந்த நரசிம்மராவிடம் கலந்தாலோசித்தார். திருமதி காந்தி ஜெயவர்த்தனவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரையாடினர்




திருமதி காந்தி:- இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் கொல்லப்படுவதாக வெளிவரும் வதந்திகள் பற்றிய அறிக்கைகள் எனக்குக் கிடைத் திருக்கின்றன. இவை குறித்து நான் கவலையும் அக்கறையும் கொண்டுள்ளேன். இப்போது கூட நடைபெற்றுக்கொண்டிருக்கும் லோக சபைக் கூட்டத்தில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

**ஜெயவர்த்தன** : "அதேயளவு நானும் கவலை கொண்டுள்ளேன். குழப்பத்தையும் அதன் விளைவுகளையும் கட்டுப்படுத்துவதற்காக சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன்."

**சிவசிதம்பரம் அப்போது மருதானை நொரிஸ்கனல் வீதியில் வசித்து வந்தார். அவரது இல்லமும் தாக்குதலுக்கு இலக்கானது. சிவாவின் வீட்டிலிருந்த அவரது மனைவியும் பிள்ளைகளும் வீட்டின் பின்புற மதிலேறிப் பாய்ந்து அயலிலுள்ள சிங்கள நண்பரொருவரின் வீட்டுக்குள் தஞ்சம் புகுந்தனர். அந்தச் சிங்களக் குடும்பம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. சிவசிதம்பரத்தின் வீடு தீமூட்டி எரிக்கப்பட்டது.**

**திருமதி காந்தி** : "அதுபற்றி எனக்குச் சந்தேகமில்லை. உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை வழங்கி உதவி செய்யலாமென நான் நினைக்கிறேன்."

**ஜெயவர்த்தனா** : "இந்த அன்பான உதவிக்காக நன்றி தெரிவிக்கிறேன். தேவை என்றால் நான் உங்களுக்கு இது பற்றி அறிவிப்பேன்."

**திருமதி காந்தி** : "எனது வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ நரசிம்மராவ் இலங்கைக்குப் பயணம் செய்தால் அவரோடு நீங்கள் கலந்துரையாட முடியுமா?

**ஜெயவர்த்தனா** : "நான் உங்கள் வெளிவிவகார அமைச்சரை வரவேற்கிறேன்."

அன்று மாலையே நரசிம்மராவ் இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே.சங்கர் பாஜ்பாயுடன் கொழும்புக்குப் பறந்து வந்தார். வெளிவிவகார அமைச்சர் ஏ.எஸ்.ஹமீத் இவர்களை விமான நிலையத்தில் வரவேற்றார்.

அன்று மாலையே நரசிம்மராவ் இலங்கை செல்வது பற்றி லோக சபைக் கூட்டத்தில் இந்திரா காந்தி அறிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஜூலை 25ஆம் திகதி நடைபெற்ற முதல் கட்டத் தாக்குதலில் 35 தமிழ் அரசியல் கைதிகள் கொல் லப்பட்டபின்பும் அங்கு தமிழ்க் கைதிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படாததாலேயே இரண்டாம் கட்டத் தாக்குதல் நடைபெற்றது. இது உலகெங்கும் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியது. இதற்கிடையில் 26, 27ஆம் திகதிகளில் கொழும் புக்கு வெளியே கண்டி, நுவரெலியா, குருநாகல், தம்புள்ளை ஆகிய பகுதிகளுக்கும் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் பரவின. இந்த நிலையில் தான் ஜூலை மாதம் 26ஆம் திகதி மாலை இந்திராகாந்தி இலங்கை நிலைமைகள் குறித்து முதல் தடவையாக ஜனாதிபதி ஜெயவர்த்த னாவுடன் பேசினார். கொழும்பில் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பித்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற முக்கியஸ் தர்கள் மன்னாரில் தங்கியிருந்தனர். ஜூலை 23ஆம் திகதி சனிக்கிழமையும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாநாடு நடைபெற்றது. 27ஆம் திகதிய சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென்று 23ஆம் திகதி மன்னாரில் கூடிய தமிழர் கூட்டணியின் பேராளர் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. மாநாடு முடிவடைந்த பின்னர் 25ஆம் திகதி கூட்டணித் தலைவர்கள் கொழும்பு திரும்ப முடியாதளவுக்கு நிலைமை மோசமாகி யிருந்தது. மன்னாரிலிருந்து வவுனியா வந்தடைந்த தலைவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர். அப்போது கொழும்பில் தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரின் வீடுகள் தாக்குதல்களுக்கு இலக்காகின. கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள அல்பிரட் ஹவுஸ் கார்டனில் தந்தை செல்வாவின் வீட்டில் இளைய மகனான சந்திரஹாசன் குடும்பத்தாரோடு தங்கியிருந்தார். சிங்களக் காடையர்கள் இவ்வீட்டைத் தாக்கியபோது, சந்திரஹாசனின் சிங்கள நண்பர்கள் பலரும் அயலிலுள்ள சிங்கள மக்களும் சந்திரஹாசனையும், குடும்பத்தினரையும் காப்பாற்றினர். அமிர்தலிங்கம் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததால், பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான 'சிராவஸ்தி' விடுதி யில் வாழ்ந்தார். இந்த விடுதிக்கருகே அமைந் திருந்த எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலமும் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்கானது. இந்த வாசஸ்தலத்தின் ஒரு பகுதி தீமூட்டி எரிக்கப்பட்டது. சிவசிதம்பரம் அப்போது மருதானை நொரிஸ்கனல் வீதியில் வசித்து வந்தார்.

அவரது இல்லமும் தாக்குதலுக்கு இலக் கானது. சிவாவின் வீட்டிலிருந்த அவரது மனை வியும் பிள்ளைகளும் வீட்டின் பின்புற மதிலேறிப் பாய்ந்து அயலிலுள்ள சிங்கள நண்பரொருவரின் வீட்டுக்குள் தஞ்சம் புகுந்தனர். அந்தச் சிங்களக் குடும்பம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. சிவசிதம்பரத்தின் வீடு தீமூட்டி எரிக்கப்பட்டது.

இதற்கிடையில் 27ஆம் திகதி அமைச்சரவை கூடியது. அமைச்சர் சிறில் மத்தியூ ஆத்திரத்தோடு கூட்டத்தில் பேசினார். அமிர்தலிங்கமே இக் குழப்பங்களுக்குக் காரணமென்றும், அவரைக் கைதுசெய்ய வேண்டுமென்றும் கூறினார். தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தடைசெய்ய வேண்டு மென்றும் அவர் ஆக்ரோஷமாகப் பேசினார். குழப்பங்களுக்குக் காரணம் அமிர்தலிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியுமேயென்று பல அமைச்சர்கள், அமைச்சரவைக் கூட்டத்தில் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தனர். நாட்டில் பிரிவினையை வலியுறுத்தும் கட்சிகளைத் தடைசெய்யப் போவதாகவும் அதற்காக அரசியலமைப்புக்குத் திருத்தமொன்றினைக் கொண்டுவரப் போவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அக் கூட்டத்தில் அறிவித்தார்.

(தொடர்ந்து வரும்....)

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

**(அரசியல் தொடர்)**

# தமிழ்ப் புலிகளினால் சிறார்கள் பலவந்தமாக படைகளில் சேர்ப்பு

**2002**ஆம் ஆண்டு தீவிரமான மோதல் நிலைமைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் புலிகள் இயக்கமானது குடும்பங்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியும், பலவந்தமாகக் கடத்தியும் ஆயிரக்கணக்கான சிறார்களைப் படைகளில் சேர்த்துக்கொண்டும் உள்ளதாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004 நவம்பர் 11இல் வெளியிட்ட அறிக்கையின் மூலம் தெரிவிக்கின்றது.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ்க் குடும்பங்களை அச்சுறுத்தியும் துன்புறுத் தியும் அவர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தி யும் இக் குடும்பங்களின் பிள்ளைகளைத் தமது இராணுவ சேவைக்கு வழங்குமாறும் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கொடுக்க மறுக் கின்ற பட்சத்தில், அச் சிறர்கள் வீடுகளில் இருந்து இரவு நேரங்களில் பலவந்தமாகக் கொண்டு செல்லப் படுகின்றனர். அல்லது பாடசாலைக்குச் செல்லும் வழியில் பலவந்தமாகக் கொண்டு செல்லப்படுகின்றனர். தமது பிள்ளைகள் படைகளில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக் கின்ற பெற்றோர்கள் புலிகள் இயக்கத்தின் வன் முறைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் அல்லது அவர்களால் கைதுசெய்யப்படுகிறார்கள்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின், சிறார்கள் உரிமை தொடர்பான நியாய பிரசாரப் பணிப்பாளரும் இவ்வறிக்கையின் இணை ஆசிரியருமான ஜோ பேக்கர் கூறுகையில், "யுத்த நிறுத்தமானது சண்டையை முடிவுக்குக் கொண்டு வந்தாலும், சிறார்களைப் படையில் சேர்க்கும் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. சமாதானத்தினால் கிடைக்கும் நற்பலாபலனை எதிர்பார்த்து ஆவலாய் இருந்த அநேக தமிழ்க் குடும்பங்கள், இன்று தம் பிள்ளைகளைப் படைகளில் சேர்க்க வரும் ஆயுதம் தாங்கிய புலிகளின் வேண்டத் தகாத வருகையை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

அச்சத்திற்குள் வாழ்தல் : 'இலங்கையில் புலிகளும் சிறார் படையினரும்' எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள எண்பது பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையானது, இலங்கையின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நாளில் இருந்து, புலிகளால் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்ட, வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பல சிறார்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட நேரடியான வாக்குமூலங்களை உள்ளடக்கியி ருக்கிறது. கனரக ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மற்றும் கண்ணிவெடிகள் என்பவை தொடர்பான பயிற்சி உட்பட, மிகக் கடுமையான, சில வேளைகளில் மிகக் கொடுமை யான பயிற்சிகளுக்குத் தாம் முகங்கொடுத்ததாக இச் சிறார்கள் விபரிக்கிறார்கள். தப்பியோட எத் தனிப்பவர்களுக்குத் தமது படையணியின் முன்னால் வைத்தே பகிரங்கத் தண்டனை கொடுப் பதன் மூலம் மற்றவர்களுக்கு எச்சரிக்கை வழங் கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில், 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அரசாங்கத்தோடு மேற்கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் 3,516 சிறார்கள் புலிகளால் படைகளில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இந்த எண்ணிக்கையானது, உண்மை யாக அவர்களால் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையின் ஒரு பகுதி மட்டுமே என்று யுனிசெப் அமைப்பு மேலும் கூறுகிறது.

இவ் வருட ஆரம்பத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற பிரிவினரால் விடுவிக்கப் பட்ட சிறார்களைக் குறிவைத்து மேற்கொள்ளப் பட்ட தீவிர மீள் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பாகவும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இவ்வறிக்கையில் ஆவணப்படுத் யுள்ளது. வடக்குப் பிரதேசத்தில் வன்னி என அழைக்கப்படும் பகுதியில் நிலைகொண்டுள்ள, வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமான பிரதான புலிகள் இயக்கப் படையணிகளில் இருந்து, கிழக்கு மாகாண புலிகள் இயக்கத்தின் தளபதியாக இருந்த கேணல் கருணா இவ்வருட மார்ச் மாதத்தில் பிரிந்து சென்றார். ஏப்ரல் மாதத்தில் வன்னிப் புலிகள் என அழைக்கப்படும் பிரபாகரனின் படைகள் கருணாவின் கிழக்குப் படைகள் மீது தாக்குதல்களைத் தொடுத்து அவர்களைத் தோற்கடித்ததனால் அது உடனடியாகக் கலைக்கப்பட்டது. சுமார் 2,000 சிறார் போராளிகள் கருணா படையில் இருந்து ஓடினார்கள் அல்லது படையை விட்டுச் செல்லும்படி அவர்களின் தளபதிகளினாலேயே ஊக்குவிக்கப்பட்டார்கள். பலர் சண்டையில் இறந்துபோயினர்.

சிறார்கள் உட்பட, கருணாவின் முன்னாள் படையினர்களை மீளவும் படைகளில் சேர்த்துக் கொள்வதற்காக வன்னிப் புலிகள் இயக்கமானது மிகத் தீவிர பிரசாரத்தை உடனடியாக மேற்கொண்டது. வன்னிப் படையினர், வீடு வீடாகச் சென்றும், கிராமங்களில் கூட்டங்களை நடத்தியும், மோட்டார் வாகனங்களைப் பாவித்து அறிவித்தல்களை விடுத்தும், சிறார்களுக்குக் கடிதங்களை அனுப்பியும், முன்னாள் சிறார் போராளிகள் மீண்டும் தமது படைகளில் வந்து சேர வேண்டும் என வலியுறுத்தினார்கள். பல சிறார்களை அவர்கள் பலவந்தமாகவே எடுத்துச் சென்றனர்.

"அன்றைய தினம் அவர்கள் எனது தம்பியை பிடித்துச் சென்றுவிட்டார்கள். அவன் சந்தையில் இருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியிலேயே கொண்டுசெல்லப்பட்டான்" எனத் தெரிவித்த வாஞ்சி, 1997ஆம் ஆண்டில் தனது 16ஆவது வயதில் புலிகள் இயக்கத்தினால் படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டாள். "அவர்கள் என் தம்பியை விடுவிக்கவில்லை, அதேவேளை இக் கடத்தல் பற்றி நான் யாருக்காவது அறிவித்தால் என்னையும் சுட்டுவிடுவதாக அச்சுறுத்தினார்கள். அத்துடன் நானும் அவர்களுடன் மீள இணைந்துகொள்ள வேண்டும் எனவும் எச்சரித்தனர்."

ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துவது, அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களால் 18 வயதுக்குக் குறைந்த சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப் படுவது என்பவை சர்வதேச சட்டங்கள் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன. 15 வயதிற்குக் குறைந்த சிறார்களைப் படைகளில் சேர்ப்பது என்பது இப்போது ஓர் யுத்தக் குற்றமாகவே கருதப்படுகிறது.

புலிகள் இயக்கமானது தாங்கள் சிறார்களைப் படையில் சேர்த்துக்கொள்ளும் விடயத்தை மறுப்பதோடு, தமது படைகளில் வந்து இணையும் சிறார்கள் வறுமை, போதிய கல்வி வாய்ப்புக்கள் இல்லாமை, அல்லது யுத்தத்தில் தமது பெற்றோர்களை இழந்தமை மற்றும் வீடுகளில் சரியான கவனிப்பு இன்மை போன்றவற்றினாலேயே தம்முடன் வந்து இணைந்துகொள்வதாகக் கூறுகிறார்கள். சுதந்திரமான தமிழ் தேசம் ஒன்றுக்காகப் போராட வேண்டும் என்னும் நோக்கிலும், அல்லது சமூக, பொருளாதார காரணிகளின் அடிப்படையிலும் சில சிறார்கள் போய்ச் சேர்ந்து கொண்டாலும், அவ்வாறு சுயமாகச் செல்லும் சிறார்களைப் படையில் சேர்த்துக் கொள்வது கூட சர்வதேச சட்டத்தை மீறுகின்ற செயலாகும்.

2003ம் ஆண்டு ஜுன் மாதத்தில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான முறையான ஓர் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஏற்றுக்கொண்டன. அச் செயற்றிட்டத்தின் கீழ் சிறார்களைப் படையில் சேர்த்துக்கொள்வதை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் தமது படையில் இருக்கும் சிறார்களை, ஒன்றில் நேரடியாக அவர்களின் பெற்றோர்களுக்கு திருப்பிக் கொடுப்பது, அல்லது இதற்காகவே நிர்மாணிக் கப்பட்ட இடைமாற்ற நிலையங்களிடம் பிள்ளைகளைப் பாரம் கொடுப்பது என்று புலிகள் இயக்கமானது ஏற்றுக்கொண்டது.

ஆனால், இச் செயற்றிட்டம் கையொப்ப மிடப்பட்ட நாளிலிருந்து, புலிகள் இயக்கமானது தாம் விடுவித்த சிறார்களின் தொகையை விட இரட்டிப்பாக தமது படைகளில் சிறார்களைச் சேர்த்துக்கொண்டுள்ளனர் என்பதையே, யுனிசெப் அமைப்பின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்ட இடைமாற்ற நிலையமானது, அதன் ஒரு வருடகால செயற்பாட்டில் 172 சிறார்களை மாத்திரமே பெற்றுக்கொண்டுள்ளது. அந்த இடமாற்ற நிலையமானது 100 சிறார்களை ஒரே நேரத்தில் வைத்திருக்கக் கூடிய வசதியைக் கொண்டிருந்தாலும் அது ஒரு பொழுதுமே சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை. அத்துடன் 2004ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் ஆறு வார காலத்திற்கு அது முழுமனே வெறுமையாகவே இருந்தது. சிறார்களின் வரவு மிகக் குறைந்து காணப்பட்டதினால் மற்றைய இரு இடைமாற்ற நிலையங்களும் திறக்கப்படவேயில்லை.

காலத்திற்குக் காலம் மீண்டும் மீண்டும், புலிகள் இயக்கமானது தாங்கள் சிறார்களைப் படையில் சேர்ப்பதை முடிவுக்குக் கொண்டுவருவதாக வாக்குறுதிகளை அளித்தாலும், ஒவ்வொரு முறையும் அவர்கள் தமது வாக்கை மீறியே வந்துள்ளனர் என பேக்கர் கூறினார். புலிகள் இயக்கமானது, சிறார்களைப் படைகளில் சேர்ப்பதை நிறுத்தி, சட்டரீதியான பொறுப்புக்களுக்கு அமைவாக நடந்துகொள்வதற்கான காலம் இப்போது வந்துவிட்டது.

மேலதிக தகவல்களுக்கு **WWW.HRW.COM**

# ஒரே சொடக்கில் உற்சாக ஊற்று!

எனர்ஜி ஃபீல்டைப் பலப்படுத்தி, எப்போதும் உற்சாகத்தின் உச்சக் கட்டத்தில் வைத்திருப்பது எப்படி?

திருஷ்டி - சிருஷ்டி வாதா என்று நமது வேதங்களில் சொல்லப்படுகிறது. திருஷ்டி என்றால் பார்வை. சிருஷ்டி என்றால் உருவாகுதல் அல்லது உருவாக்குதல்!

நாம் எதை எப்படிப் பார்க்கிறோமோ, அப்படியே நாம் உருவாகிறோம் என்பது இதற்கு அர்த்தம். குறிப்பாகச் சொல்வதானால், நம்மை நாம் எப்படி இருப்பதாகப் பாவித்துக்கொள்கிறோமோ, நாளடைவில் அப்படி ஆகிவிடுகிறோம்.

'நான் உற்சாகமாக இருக்கிறேன்' என்று நினைத்துப் பாருங்கள்....அந்த நினைப்பை நம்புங்கள். உற்சாகமாகவே இருப்பீர்கள். நடைமுறைக்குச் சரிப்பட்டு வராத தத்துவம் போலத் தோன்றுகிறதா? சந்தேகம் இருந்தால், இந்த உதாரணத்தைப் பாருங்கள்.

இரவு நன்கு தூங்கி, விடியற் காலையில் எழுந்த இளைஞன் ஒருவன், உடற்பயிற்சி செய்துவிட்டுப் பிறகு குளித்து டிரஸ் செய்து ஆபீஸ் கிளம்புகிறான். அப்போது பக்கத்து வீட்டுக்காரர் வந்து, "என்ன தம்பி டல்லா இருக்கீங்க? உடம்பு சுகம் இல்லையா?" என்று கரிசனத்தோடு கேட்கிறார். தெருமுனையில் அவன் நண்பன் எதிர்ப்படுகிறான். அவனும் "என்னடா ஆச்சு உனக்கு? முகம் இத்தனை சோர்வா இருக்கே?" உண்மையான அன்போடுதான் கேட்கிறான். ஆபீஸில் நுழைகிறான் இளைஞன். இவனைப் பார்த்த ரிசப்ஷனிஸ்ட், "என்ன சார் ஜுரமா? கண் எல்லாம் உள்ளே அடங்கிப்போய்க் கிடக்குது. ஆபீஸுக்கு லீவுனா போன் பண்ணியே சொல்லியிருக்கலாமே?" என்றகாள் அக்கறையோடு!

வீட்டை விட்டுக் கிளம்பும்போது இளைஞன் உடம்பிலிருந்த சக்தியெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வற்றி, உண்மையிலேயே தனக்கு உடம்பு சரியில்லை என்று நம்பி, ஆபீஸுக்கு லீவ போட்டுவிட்டு வீட்டிலே போய்ப் படுத்துக்கொள்கிறான்.

இது கற்பனைக் கதை அல்ல! ஓர் ஆராய்ச்சிக்காக, அந்த இளைஞனிடம் சொல்லாமல் நடத்திப் பார்க்கப்பட்ட உண்மைச் சம்பவம்!

நமது எண்ணம், நமது உடம்பை எப்படிப் பாதிக்கிறது என்பதற்கான உதாரணம் இது. சில சமயம் நமது உடம்பேகூட எண்ணங்களைப் பாதிப்பது உண்டு.

டென்ஷனாக இருக்கும்போது, நகம் கடிக்கும் பழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக்கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு, சாதாரணமான மனநிலையில் இருக்கும்போது நகம் கடித்தால் கூட, மனதில் டென்ஷன் வந்து புகுந்துவிடும். சோர்வாக இருக்கும்போதெல்லாம் கன்னத்திலோ நெற்றியிலோ கைவைத்து உட்காரும் மானரிசம் உடையவர்களுக்கு, எதேச்சையாகக் கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்தால் கூட சோர்வு தானாக வந்து ஆட்கொண்டுவிடும். அவ்வளவு ஏன்? சலவை செய்த சட்டை, பாண்ட் மாட்டிக்கொண்டாலே, வெளியில் கிளம்புகிற உற்சாகம் மனதுக்குள் வந்துவிடுகிறது இல்லையா?



சொடக்குப் போடும் நேரத்தில் உற்சாகத்தை நம் மனதுக்குள் ஊற்றெடுக்க வைக்க முடியும். தீ மிதித் திருவிழாவை நீங்கள் அனைவருமே பார்த்திருக்கக் கூடும்!

தீ மிதிக்கும் பக்தர்கள் யாரும் அதில் முறையாகப் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் இல்லை. என்றாலும், தீ மிதிக்க வேண்டும் என்ற வைராக்கியம் மனதில் வந்தவுடன், அவர்களுக்குத் தேர்ந்த ஒரு வீரனின் உற்சாகமும் வேகமும் எப்படி வருகிறது? மனதிலிருந்துதான்!

நாம் இங்கே விவாதித்த கருத்துக்கள் யாவும் நம் ஒவ்வொருவருக்கும் ஏற்கெனவே தெரிந்ததுதான். இருந்தாலும், நம்மைத் தேற்றிக்கொள்ள முடியாமல் பல சமயங்களில் சோர்ந்துவிடுகிறோம்; கவலையில் மூழ்கிவிடுகிறோம். இது ஏன்?

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட, நம்முடைய கருத்து ஜெயிக்க வேண்டும் என்பதில்தான் நம்மில் பலர் குறியாக இருக்கிறோம்.

பெங்களூரில் பெரிய பணக்காரர் ஒருவரை எனக்குத் தெரியும். அவருக்கு நகரின் மையப் பகுதியில் மாளிகை போல ஒரு பங்களா. அது அவரது பரம்பரைச் சொத்து! பங்களாவை ஒட்டியிருக்கும் ஒரு சின்ன அவுட் ஹவுஸை விற்றால் கூட, ஒரு கோடி ரூபாய் கிடைக்கும். அதில் அவர் நிறைய வசதிகள் செய்துகொள்ள முடியும். ஆனால், அவருடைய Point of view என்னவென்றால், பரம்பரைச் சொத்து எதையும் விற்கக் கூடாது.

சரி...அதனால் இப்போது என்ன? கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பங்களாவில் இருந்து வேறு வருமானம் இல்லாததால், சொத்து வரி கட்டவும், டெலிபோன் பில் கட்டவும், எலெக்ட்ரிக் பில் கட்டவுமே அவர் இன்று திண்டாடிக்கொண்டிருக்கிறார், பாவம்!

தனது Point 0f view ஜெயிக்க வேண்டும் என்பதற்காக, தற்கொலை வரை போகிறவர்கள் கூட இருக்கிறார்கள்.

நமது கருத்துக்களை விட, நமது சந்தோஷம்தான் முக்கியம் என்ற நினைப்பு நமக்கு வர வேண்டும். 'நியாயமான வழிமுறைகளில் சந்தோஷமும் நிம்மதியும் நம்மை எப்படித் தேடி வந்தால் என்ன?' என்று பழக்கிக்கொள்ள வேண்டும். இந்த மனநிலை கைவந்துவிட்டால், அப்புறம் பாருங்கள்...பஞ்சம் இல்லாமல் உற்சாகம் பீறிடும்!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 94க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம். என். எப். றஷ்கா ஆஸ்மி. 276 A, மார்க்கட் றோட், சாய்ந்தமருது -07.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம். எஸ். அஹமட் இப்ராஹிம், 59, பெண்கள் பாடசாலை வீதி, ஏறாவூர் -03.
2. கமால்தீன் அல் -ஆஸாத், 282, ஓடாவியார் வீதி, ஏறாவூர் -02.
3. ஏ.எம். முஸ்தபா. இன்டர் நெட் கொம், மெயின் வீதி, ஏறாவூர்.
4. எஸ். ரம்மிய ஸ்ரீ, 4ஆவது ஒழுங்கை, இரத்மலானை.
5. ஜெ. திவ்வியா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார்.
6. எஸ். நிவேதா, கண்டி வீதி, வவுனியா.
7. த. தமிழிலன், உள்துறைமுக வீதி, திருகோணமலை.
8. எஸ். கார்த்திகா, வெளிசுற்று வீதி, மட்டக்களப்பு.
9. அ. அனித்தா, தேவாலய வீதி, வவுனியா.
10. அ.மு அனஸ், மேபீல்ட் வீதி, கொட்டஞ்சேனை.

## குறுக்கெழத்துப் போட்டி 96

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | |
| 9 | | 10 | 11 | 12 |
| 13 | | | 14 | 15 |
| 16 | 17 | 18 | | 19 |
| 20 | 21 | 22 | 23 | |

**இடமிருந்து வலம்**

2. பாம்பு இனம் ஒன்று.
5. நிறம் (குழம்பியுள்ளது).
10. இது சொன்னால் பலிக்குமா? (குழம்பியுள்ளது).
14. காற்று (திரும்பியுள்ளது).
16. மத்திய மலை நாட்டின் தலைநகர் (குழம்பியுள்ளது).
20. அழுகையினூடே வரும் ஒலி (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. கன்னட மொழி அதிகம் பேசப்படும் இந்திய மாநிலம்.
2. ஒரு மரம்/பழம்.
3. குளிர்ப் பிரதேசங்களுக்குப் பொருத்தமான ஆடை.
4. தைரியம் (குழம்பியுள்ளது)
17. பெயராகவும் வினையாகவும் வரும் சொல் ஒன்று (தலைகீழாகவுள்ளது).
18. ஆகாயம் (தலைகீழாகவுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 94 விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கை | 2 தெ | யி | | 3 கி | ழ | ல் |
| | ட | | 4 ஆ | ம | த் | ஆ |
| 5 கி | ய | | 6 த | ங் | தை | |
| ல | ம் | | 7 வ | த | ங் | 8 தி |
| க் | | 9 செ | ன் | னை | | ரு |
| 10 க | த | ம் | | | | ம் |
| ரி | | 11 பு | த் | தி | ம | தி |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 23.11.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-96
தினமுரசு வாரமல்ர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

**வண்ணச் சேலை பரிசுப் போட்டி**

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

70

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்: .........................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-11-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**திருகோணமலை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 68

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**திருமதி.செ.பிரின்சி,**
64, பிரதான வீதி. புளியங்குளம். திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.


# சவுதி மெடிக்கல்

தம்பி உங்கள் "மெடிக்கல் சேர்டிபிக்கேற் டேற் எக்ஸ்பயர் ஆகிவிட்டது. எப்படியும் அதை நாளை புதுப்பித்துக் கொடுத்துவிடுங்கள். வருகிற கிழமை உங்கட விசயம் எப்படியும் சரி வந்துவிடும். தம்பி, வீட்டில இருந்து ரெலிபோன் கோல் ஏதும் வந்தால் சொல்லி விடுங்கள்."

"சப் ஏஜென்சி" மோகன் கூறியதை நினைத்து அன்றிரவு தூக்கமே வராமல் விழித்துக்கொண்டு இருந்தான் ராஜன்.

என்ன வேலை இது சீ....இதோட நான்காவது முறையாக 'மெடிக்கல்' போட வேண்டுமாம். இதுவரை மெடிக்கலுக்கு மட்டும் ஐயாயிரம் ரூபாய் ஆகிவிட்டது. இப்போ இன்னுமொரு மெடிக்கலா?

இப்படித்தான் முன்பும் ஒரு முறை சொன்னவர் இரண்டாவது தரம் மெடிக்கலுக்கு போகும் போது, "தம்பி இந்தத் தடவை மட்டும் மெடிக்கல் போட்டா போதும், வாற கிழமை நீங்கள் போறதுதான்." அதுவும் சரிவரவில்லை. ஒரு மாதம் அப்பிடி இப்படி என்று இழுத்துவிட்டு, கடைசியில் சொன்னார் "தம்பி அரபிக்காரன் வந்து ஹோட்டலில நின்று போட்டு இப்போ இந்தியாவுக்கு போயிருக்கிறான். அங்கேயும் அவனுக்கு ஆள் தேவையாம். அத முடிச்சிற்று பிறகுதான் இங்க வாறதா சொல்லியிருக்கான்."



இப்படியே அந்த மெடிக்கலும் ஒரு மாதம் முடிந்து போயிற்று. பிறகு மூணாவது தரம் புதுப்பிக்கச் சொன்னார். "தம்பி நாம போனதரம் மெடிக்கல் புதிதாகத் தானே போட்டனாங்கள்"

"ஓம் ஓம் அண்ணன்."

அப்ப அதப் போயி ஒரு கிழமைக்கு புதுப்பித்துக்கொண்டு வாருங்கள். நேற்று ஒரு அரபிக்காரன் ரேணுகா ஹோட்டலில் வந்து நிற்கிறானாம். ஒரு கிளினிங் கொம்பனிக்கு ஆள் தேவயாம், உங்களை அதில எப்படியும் போட்டு விடுறன்.

அதுவும் சரிவரவில்லை. ஒரு கிழமை, பத்து நாள், அப்படியே போய்விட்டது.

நேரம் நள்ளிரவை தாண்டியிருக்கும்.

சிந்தனையில் ஆழ்ந்தவாறே ராஜன் நித்திரையானான்.

அடுத்த நாள் ஒன்பது மணிக்கெல்லாம் பம்பலப்பிட்டியிலுள்ள அந்தப் பிரபலமான மெடிக்கல் சென்டருக்குள் நுழைந்த ராஜன் நேரே வரவேற்பாளரிடம் சென்று தனது பழைய மெடிக்கல் ரிப்போட்டை காட்டி, "இதை இன்னுமொரு கிழமைக்கு புதுப்பித்து தரமுடியுமா" என்று கேட்டபோது அதை வாங்கிப் பார்த்த அவர் முடியாதென்று கூறிவிட்டார். காரணம் நாற்பது நாட்களுக்கு மேல போட்டுதாம், புதிதாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா கட்டித்தான் போடவேண்டுமாம். சொல்லிவிட்டு காற்றாடியை தம்பக்கம் இழுத்துக் கொண்டு கால் மேல் கால் போட்டு அவர் ஆடிக்கொண்டு இருந்தார்.

அட கடவுளே! ஏன் தான் இப்படி ஏழைகளின் வயிற்றில் ஆள் மாறி ஆள் அடிக்கிறார்களோ? இப்ப என்ன செய்வது மீண்டும் ஒரு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயா? தனக்குள் எண்ணிக் கொண்டு மீண்டும் அவரிடமே கேட்டான். "நான் மனேஜரைப் பார்க்க முடியுமா" என்று அனுமதி கிடைத்தது. தனது பைலுடன் குளிரூட்டப்பட்ட அந்த அறைக்குள் ராஜன் நுழைந்தான். "எக்ஸ்கியூஸ் மீ சேர். ஐ வோண்ட் ஏ சொலுசன் எபௌட் மை மெடிக்கல் றிப்போட்"

ராஜனுக்கு சிங்களம் போதியளவு பேச வராததால் கொழும்பில் எங்கு போனாலும் ஆரம்பத்திலேயே ஆங்கிலத்தில் பேசிவிடும் வழமையைக் கொண்டிருந்தான்.

ராஜனின் பேச்சை அவர் காதில் வாங்கியவராகத் தெரியவில்லை. சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட அவர், கணனியில் எக்ஸ்ஸெல் பக்கமொன்றில் ஏதோ டைப் செய்ய கீ போர்டில் எழுத்துக்களைத் தேடிக்கொண்டிருந்தார்.

'நல்லதொரு மனேஜர் போலத்தான் இருக்கு.' ராஜன் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு பைலை நேரே அவரிடம் நீட்டினான். அவர் அதை வாங்கிப் பார்த்துக்கொண்டு, என்ன புரிந்து கொண்டாரோ தெரியவில்லை. ராஜனிடம் தமிழிலே பேசினார்.

"தம்பி உங்கட மெடிக்கல் புதிதாகத்தான் போட வேண்டும். நேரே கவுண்டருக்குச் செல்லுங்கள்."

"நான் அங்கிருந்துதான் வருகிறேன் சேர்!" இது ராஜன். இந்த 500 ரூபாவை எடுத்துக்கொண்டு ஒரு கிழமைக்குப் புதுப்பித்துத் தாருங்கள். நான் ஏற்கனவே மூன்றுமுறை 2,500ரூபா, பிறகு 500 ரூபா, பிறகு 1,750 ரூபா கட்டி நான்கு மாதத்திற்குள் மூன்று தடவை போட்டிருக்கு ராஜன் கொஞ்சம் வேகமாக சற்று கோபமாகச் சொல்லி முடித்தான்.

அவர் அவன் கூறிய எதையுமே காதில் கேட்காதவர் போல இருந்தார். வேறு வழியின்றி அவர் மீது பார்வையைச் செலுத்தி விட்டு அறையை விட்டு வெளியேறி 2,500 ரூபாவை கட்டி நான்கு மாதத்திற்குள் 7,250 ரூபாவைக் கொட்டிவிட்டு மெடிக்கலை போட்டுவிட்டு ராஜன் அறைக்குத் திரும்பினான்.

ஒரு எக்ஸ்ரே, யூரின் ரெஸ்ட், பிளட் ரெஸ்ட், டாக்டரிடம் போய் உட்கார்ந்தவுடன் பிரசரை சோதிப்பார். சிங்களம் கலந்த தமிழில் தொடர்ந்து, உங்களுக்கு ஏதேனும் வருத்தம் உண்டா? நம்மிடமே டொக்டர் கேட்பார். சின்ன வயசில் சத்திரசிகிச்சை செய்ததுண்டா "இல்லை."

"இருமல், காய்ச்சல் ஏதும் உண்டா?" "இல்லை." சரி உடுப்புக்களை கழற்றி அங்கே வையுங்கள். கையை நீட்டுங்கள் பின்பக்கம் திரும்புங்கள். அது என்ன தழும்பு காலில் உங்களுக்கு வெடி கிடி ஏதும் பட்டதா? டொக்டரிடம் சிரிப்பிற்கிடையில் அந்தக் கேள்வி, புலி என்று நினைத்து விட்டாரோ அந்தப் பெண் டொக்டர் ராஜன் நினைத்து சிரித்துக் கொண்டான். கூடவே பக்கத்தில் இருந்த தாதியும் சிரித்து அவரும் அதில் பங்கு கொண்டார்.

"சரி போங்கோ!"

ராஜனும் ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன்தான். உயர்தரம் வரை கல்வி கற்றும் உரிய தொழில் கிடைக்காததாலும் சுயதொழில் செய்து தனது ஊரில் முன்னேற்றம் காண்பது முயற்கொம்பாக உள்ளதனாலும் தான் ராஜனுக்கும் இந்த வெளிநாட்டு மோகம் தொற்றிக்கொண்டது எனலாம்.

பல பேரிடம் விசாரித்து இறுதியில் நம்பிக்கையானவர் என்று இந்த சப் ஏஜன்சியை ராஜன் பிடித்து இருந்தான்.

"தம்பி உங்களை 15 நாளைக்குள் அனுப்புற பொறுப்பு என்னுடையது. உங்கள் ஊராக்களில் நிறையப் பேர் நான் அனுப்பியவர்கள்தான். இது எனக்குப் பெரிய வேலையே இல்லை. எனக்கு அட்வான்ஸ் ஒரு 30 வேண்டும், மிகுதி காசு விசா கையில் தந்தவுடன். நான் மற்றவர்களைப் போல் இல்லை தம்பி, முழுக் காசையும் எனக்கு முன்னுக்கு வாங்குற பழக்கம் இல்லை. நான் எண்ட சொந்தக் காசை போட்டுத்தான் இத செய்யுறன்".

இப்படி அவர் தன்னைப் பற்றி கூறியவை ராஜனைக் கவர்ந்து விட்டது. அவனது தந்தை வேறு ஓர் இடம் பார்த்தபோதும் ராஜன் இவரிடமே கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாய் நின்று விட்டான்.

கொழும்புக்கும் ஊருக்கும் இந்த ஐந்து மாதத்தில் எத்தனையோ தடவை போய் வந்தாச்சு. ஒன்றும் ஆன பாடில்லை. ஊருக்குப் போகும் போதெல்லாம் ஊரில் உள்ளவர்கள் "என்ன தம்பி இன்னும் போகல்லியோ" என்பார்கள் ஊர்க்காரர்களுக்கு பதில் சொல்வதே கஷ்டமாய் போச்சு. சில பேர் நக்கலாகவும் கேட்பார்கள். சில பேரிடம் கொழும்பில் தான் வேலை செய்வதாகவும் ராஜன் சொல்லி இருந்தான்.

சிந்தணையில் ஆழ்ந்திருந்த ராஜனை லொட்ஜ் மனேஜரின் குரல் இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தது. "தம்பி இங்கு ராஜன் எண்டால் நீங்கள்தானே! உங்களுக்கு ஒரு ரெலிபோன் கோல் வந்திருக்கு. உடனே கீழே போங்கள்." அவசரமாக அந்த இரும்பு ஏணிப் படிகளில் தடதடவென இறங்கிய ராஜன், றிசீவரை எடுத்து ஹலோ என்றான். "தம்பி நான் மோகன் பேசிறன். இப்ப உடனே நீங்கள் ஒப்பீசுக்கு வாங்கோ, புதிதாக ஒரு கொம்பனிக்கு 'இன்டர்வியூ' நடக்குது. நல்ல வேலை சம்பளம் 30க்கு மேல. எப்படியும் 15 நாளைக்குள் போய்விடலாம்." ஒரே மூச்சில் சொல்லி முடித்தார். அவர் முடிக்க முதலே ராஜன் குறுக்கிட்டு, "அப்ப நாம் முதலில் போட்ட இடம்" என்றான். அது நாள் செல்லும் போல தம்பி. அப்படியென்றால் மெடிக்கலுக்கு டேற் இருக்கா அண்ணே! இன்னும் 10 நாள் இருக்கு தம்பி, அது பிரச்சினை இல்லை, முடிந்தாலும் புதுப்பித்துக் கொள்ளலாம். அவர் றிசீவரை வைத்து விட்டார்.

என்ன இன்னுமொரு மெடிக்கலா, அப்ப ஐந்தாவது இன்னுமொரு 2,000ரூபாவா, அட கடவுளே, என்ன என் தலையெழுத்து நினைக்கையில் ராஜனுக்கு தலை சுற்றியது.

மெதுவாகப் போய் கட்டிலில் சாய்ந்துகொண்டான்.

# ஏழையின் இலட்சியம்

இயற்கை எழில் கொஞ்சும் அழகும், அமைதியான சூழ்நிலையும் கொண்ட ஒரு அழகிய சிறு கிராமம் அது. அங்கு பல குடும்பங்கள் வசிக்கின்றன. ஆனால் மிகவும் ஏழைக் குடும்பங்கள் இருந்தபோதிலும் கிராமத்தின் சிறப்பு அங்கு காணப்பட்டது. அதாவது ஒவ்வொரு குடும்பமும் மற்றைய குடும்பங்களை தாங்கிய வண்ணம் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தது. ஒரு குடும்பத்தின் பிரச்சினையை அந்தக் கிராமத்தின் பிரச்சினையெனக் கொண்டு அனைத்துக் குடும்பங்களும் சேர்ந்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' எனும் கருத்துக்கு உதாரணமாக இக் கிராமம் திகழ்கிறது. இங்கு பிரதான தொழிலாக விவசாயம், மீன்பிடித்தல் கைத்தொழில் என்பன காணப்படுகின்றன. பணப் பற்றாக்குறையைத் தவிர அன்பு, பாசம், நிம்மதி, சந்தோசம், ஒற்றுமை மற்றெல்லாமே நிறைவாகக் கிடைத்தன. மிகவும் ஏழைகளாக இருந்ததனால் தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்பட்டது. குழந்தைகள் கல்வி கற்பதற்கான வசதியும் இல்லை. பாடசாலையும் இல்லை. அப்படிக் கல்வி கற்பதானால் நகரத்துக்குத்தான் செல்ல வேண்டும். அந்தக் கிராமத்தில் நோயாளிகள் அநேகர் உள்ளனர். ஆனால் ஒரு வைத்தியசாலை இல்லை. இப்படியாக அடிப்படை வசதிகளைக் கூடப் பெற முடியாத நிலை.

இப்படியான ஒரு கிராமத்தில் வாழ்கின்ற ஒரு குடும்பம்தான் கந்தையாவின் குடும்பம். கந்தையா ஒரு விவசாயி. ஆனால் யுத்தத்தினால் ஒரு காலை இழந்துள்ளார். இருந்த போதிலும் தன் குடும்பம் தன்னை



-ட.லெலனா, ஜெயந்திபுரம்.

நம்பியுள்ளதனால் பல சிரமங்களை அனுபவித்தும், தன் குடும்பத்துக்காகக் கடுமையாக உழைப்பவர். பாக்கியம் கந்தையாவின் மனைவி. பாக்கியமும் ஒரு இருதய நோயாளி. தன் குடும்பக் கஷ்டம் குறைய வேண்டும் என்பதற்காக வீட்டில் இருந்து சிறு கைத்தொழில், கைப்பணிப் பொருட்களைச் செய்து விற்பனை செய்பவர். இவர்களுக்கு இரண்டு கண்மணிகள் போல் இரண்டு குழந்தைகள். ஆசைக்கோர் மகளும் அன்புக்கோர் மகனும். மகள் மஞ்சு அழகு, பண்பு, அன்பு, அடக்கம் போன்ற கிராமத்துக்கு உரித்தான நற்பண்புகளை கொண்டிருந்தாள். அத்துடன் மிகவும் கெட்டிக்காரி. புத்திசாலி. எவ்வளவு துன்பங்களின் மத்தியிலும் தன் குடும்பத்தின் துணையுடனும் தன் கிராம மக்களின் உதவியுடனும் அருகில் உள்ள நகர்ப்புறப் பாடசாலையில் உயர்தரம் கற்கின்றாள். அதேபோல் அவளது தம்பி மனோ சாதாரண தரம் கற்கின்றான். அவனும் மிகவும் புத்திசாலி. தாய், தந்தை மீது மிகுந்த பாசம் கொண்டவன்.

கந்தையாவுக்குத் தன் இரண்டு குழந்தைகளும் அந்த கிராமத்துக்கு கிராம மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும். சேவை செய்ய வேண்டும் என்று மிகுந்த ஆசையும் விருப்பமும் இருந்தது. அதே போல் மஞ்சு, மனோ இருவருக்கும் அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு உறுதி இருந்தது. அதனால் என்ன கஷ்டம் வந்தாலும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற அவா இருந்தது. இருந்தபோதும் விதியை யாரால் மாற்ற முடியும். கந்தையா தொடர்ந்து கடுமையாக உழைத்ததனால் இனியும் உழைக்க முடியாமல் போய்விட்டது. ஒரு கையும் இயங்க முடியாமல் போய்விட்டது. எல்லாக் கஷ்டங்களையும் பாக்கியம் தானமேல் சுமந்துகொண்டு இராப் பகலாக உழைத்ததனால் இருதய நோயினால் மிகவும் வேதனைப்பட்டாள். இதைப் பார்த்த மஞ்சுவும் மனோவும் கிராம மக்களின் உதவியோடு நகரத்திலுள்ள வைத்திசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு வைத்தியர் சொன்னதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போயினர். இருதயத்தில் துளை இருப்பதாகவும், அது பெரிதாகியுள்ளதாகவும், உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் எனவும், இனிமேல் பாரமான வேலை எதுவும் செய்யக் கூடாது எனவும் நன்றாக ஓய்வெடுக்க வேண்டும் எனவும் கூறினர். ஆனால் பாக்கியம் ஓய்வெடுத்தால் குடும்ப நிலை என்னாவது? குடும்பமே அவளில் அல்லவா தங்கியுள்ளது. எனவே இதையெல்லாம் யோசித்த பாக்கியம் பாரமான வேலை செய்யாது சிறு கைத்தொழில் செய்தாள். ஆனால், அந்த வருமானம் குடும்பத்தைக் கொண்டு நடத்தவே போதாது.

மஞ்சு யோசித்தாள். இதற்கு மேல் படிக்க முடியாது. குடும்பக் கஷ்டம். அம்மாவும் அப்பாவும் நோயாளிகள். என்ன செய்வது என யோசித்தாள். யோசித்துத் தீர்மானமெடுத்தாள். படிப்புப் பாதிக்கக் கூடாது, அப்பாவின் இலட்சியமும் பாதிக்க கூடாது. எனவே நகரத்துக்குச் சென்று வசதியான சில பிள்ளைகளுக்கு டியூசன் கிளாஸ் எடுத்து படிப்பித்து அதன் மூலம் தன் படிப்பைத் தொடர்ந்தாள். அத்துடன் மனோவின் படிப்புக்கும் உதவினாள்.

இவ்வாறு பல கஷ்டங்களின் மத்தியிலும் படித்து முன்னேறினாள். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று படித்து மருத்துவ பட்டதாரியானாள். பின் தொடர் முயற்சியினால் படித்து வைத்தியரானாள். வைத்தியராகியும் அவள் தன் சுயநலத்துக்காக உழைக்கவில்லை. அப்பாவின் இலட்சியத்தை நிறைவேற்றினாள். தன் கிராமத்தில் உள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்த்தாள். அதே போல் மனோவும் படித்து உயர்தரம் சித்தியடைந்து அவனும் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை முடித்து ஒரு பட்டதாரி ஆசிரியரானான். மனோவும் அப்பாவின் இலட்சியத்தை நிறைவேற்றினான். படிக்க முடியாத வசதியில்லாத குழந்தைகளுக்குப் படிப்பித்தான். கந்தையாவின் இரண்டு குழந்தைகளும் அந்தக் கிராமத்துக்காக, கிராம மக்களுக்காகச் சேவை செய்தனர். ஏனெனில் அந்தக் கிராமமும் அந்த மக்களும்தான் மஞ்சுவும் மனோவும் இந்தளவுக்கு வளரக் காரணம். மஞ்சுவும் மனோவும் அந்தக் கிராம மக்களும் ஒன்று சேர்ந்து அரசிடமும் அரசியல்வாதிகளிடமும் சென்று முறையீடு செய்து பாடசாலையும், வைத்தியசாலையும் அமைப்பதற்கு உதவி கோரினர். அரசு அவர்கள் நிலையை அறிந்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியது. மஞ்சு அந்த வைத்தியசாலையில் வைத்தியராகவும், மனோ அந்தப் பாடசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றி, அந்தக் கிராமத்துக்குத் தங்கள் சேவையை வழங்கினர். மஞ்சு, மனோ, அந்த கிராம மக்கள் எல்லோரும் சிரமப்பட்டு அந்தக் கிராமத்தை ஓரளவு முன்னேற்றினர். மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை முழுமையாகப் பெற முடியாமல் போனாலும் முன்பு இருந்தத்தை விட தமது தேவைகளை ஓரளவேனும் நிறைவேற்றினர். அந்தக் கிராமத்து மக்கள் மஞ்சுவையும் மனோவையும் அவர்களது பெற்றோரையும் வாழ்த்திப் புகழ்ந்து பேசினர். பெற்றோருக்கு இதை விட வேறு என்ன வேண்டும்? தங்கள் பிள்ளைகளைப் பற்றி மற்றையவர்கள் பெருமையாகப் பேசும்போது பெற்றோர் அடையும் சந்தோசத்துக்கு அளவேயில்லை. கந்தையாவும் பாக்கியமும் மிகவும் சந்தோசப்பட்டனர். பாக்கியத்துக்கு சத்திரசிகிச்சை செய்து அவளது இருதய நோயைக் குணப்படுத்தினாள் மஞ்சு. அத்துடன் கந்தையாவின் கையை ஓரளவு குணப்படுத்தி, செயற்கைக் கால் பொருத்தினர். அந்தக் குடும்பமும் அந்தக் கிராமமும் மிகவும் சந்தோசமாக இருந்தன கந்தையாவுக்கு மிகவும் சந்தோசம். தனது இலட்சியத்தை தனது பிள்ளைகள் நிறைவேற்றி, தனக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். தனக்குப் புதுவாழ்வு பெற்றுத் தந்த பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியதுடன் மட்டும் நின்றுவிடாமல் நல்ல மருமகன், நல்ல மருமகள் கிடைக்க வேண்டுமே என்ற எதிர்பார்ப்போடு கால்போன போக்கில் போனார்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# அன்பும் நேர்மையுமே உயர்ந்தது

* பாராட்டத் தெரிந்தவரே மிகவும் பாக்கியசாலி அல்லாது பொறாமை கொள்பவர் அல்ல.

* அகங்காரத்திலிருந்து தற்பெருமை பிறப்பது போல பற்றின் விளைவு ஏமாற்றமாகும்.

* தெய்வீகக் குணங்களே மனிதனை இறைவனுக்கருகில் கொண்டு வருகின்றன - விகாரங்கள் மனிதனை இறைவனிடம் இருந்து வெகு தூரம் விலக்குகின்றன.

* இரு நற்குணங்களான கனிவும் பணிவுமே இறைவனுக்கு அருகாமையில் எம்மை நிலைநிறுத்தும்.

* அகம்பாவமே மக்களின் வெறுப்பிற்குத் தேவையானவற்றை ஆத்மாவிற்கு தேடிக் கொடுக்கிறது.

* கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகிப்பது வேறு வார்த்தைகளைத் தேர்ந்து கொள்ள விவேகம் இல்லாமையாலேயே.

* இறைவனுடன் சகல உறவு முறைகளையும் அநுபவம் செய்வதானது சகல இச்சைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையைக் குறிக்கும்.

* உண்மையும் நேர்மையும் இயல்பாக உங்களிடம் இருப்பின் இறைவனின் அன்பு எளிதாகக் கிடைக்கும்.

* ஒரு சமூகம் நல்லொழுக்கத்தை இழந்தால் - அது எல்லாவற்றையும் இழந்துவிடும்.

* நல்ல, களங்கமற்ற போட்டியானது ஆரோக்கியமானது, ஆனால் பொறாமை உயிருக்கு ஆபத்தானது.

* இறைவன் திவ்விய குணங்களின் கடலாகும். நீங்கள் ஏதாவது விகாரத்தில் எரிந்துகொண்டிருந்தால் அந்தக் கடலில் ஒரு முறை மூழ்கி எழுந்திருங்கள்.

* பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு ஆயிரக்கணக்கில் கொடுப்பதைவிட ஒரு கைப்பிடி அரிசியை அன்புடனும் நேர்மையுடனும் கொடுப்பது உயர்ந்ததாகும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# தவியாயத் தவிக்குது மனது! மெழுகாய் உருகுது இளசு!!

தருவது முழடில்யன்

எப்போ வருவாரோ? எங்கிருந்தோ பாடலைச் சுமந்து வந்து தழுவியது காற்று! படுக்கையோடு தீராத நோயுற்றவளாகச் சுருண்டிருந்த விமோசனா புரண்டு ஜன்னலை வெறித்தாள். அந்தப் பாடல் ஒரு புகை போல உள்ளே வருவதாகத் தோன்றியது.

எத்தனை முறைதான் அந்தக் கேள்வி திரும்பத் திரும்ப வரும்? சலிப்பில்லாமல், தன் வித்துவத்தைக் காட்டும் குரல் நெளிவுகளோடு அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தார் பாடகி.

"எப்போ வருவாரோ?"

பதிலற்ற வெறுமைக்குள் சுழலும் அந்தக் கேள்விகளோடு புரண்டு கொண்டிருந்தாள் விமோசனா.

அவள் உடல் முழுக்க நெருப்புச் சுடரென வேட்கை பொங்கியலைந்தது. சங்கீதத்தால் அதை சாந்தப்படுத்த முடியவில்லை. மேலும் அவளை எரிச்சலில் துடிக்க வைக்கத்தான் முடிந்தது.

ஒரு சிறு சொல்லோ அல்லது குரலோ அவளது ஆங்காரத்தையும் கோபத்தையும் கிளப்பப் போதுமானதாய் இருந்தது. மாலவன் போய் எத்தனை நாட்கள் இருக்கும்? நாட்களை எண்ண முடியவில்லை அவளுக்கு. செதில் செதிலாக உதிர்ந்து பல யுகங்களாக நீண்டது காலம். தினங்கள் சிலந்தி வலையாகத் தன் மேல் வளர்ந்து படைபடையாக மூடுவதாக உணர்ந்தாள்.

படுக்கையின் சூடு தாள முடியாமல் எழுந்து ஜன்னலருகே சென்றாள். முற்றத்திலிருந்த மல்லிகைக் கொடி தலையாட்டியது. என்னவோ முணுமுணுக்கிறது காற்றில். அதை இரசிக்கும் மன நிலையில்தான் அவள் இல்லை.

உயிர் முழுவதும் அவனே நிரம்பிக் கிடந்தான். எல்லாப் புலன்களையும் அடைத்து நிறைத்திருந்தான். வெளியே காய்ந்த வெயில் கனிய சூரியன் மேற்கே பழமாகிக்கொண்டிருந்தான். சூடு தணிந்து இளகிய காற்று கடந்து போய்க்கொண்டிருந்தது எங்கேயோ. இந்தக் காற்று அவனையும் போய்த் தழுவுமா? அவனோடு பகிர்ந்த தருணங்களைப் பற்றிக்கொண்டு தான் எப்படி உயிர் வாழ முடிகிறதோ, அதே போன்ற ஒரு பிடிமானத்தை தன்மீது கொண்டவனாக அவனும் அங்கே உழலக்கூடும்.

விமோசனா கதவைத் திறந்து வெளியே வந்தாள். மாலைக் காற்று உடலைக் குத்தியது. கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டியபடி முற்றத்தில் நடந்தாள். மனதுக்குள் அவன் சுரீரென வலித்துக்கொண்டிருந்தான். கைகளைக் கட்டியிருப்பதால்தான் வெளியேற முடியாமல் உள்ளே இருந்து உறுத்துகிறானா என்று நிகைத்துக் கொண்டவளாக கைகளைத் திடீரென அகற்றி நெஞ்சுக்கு விடுதலை அளித்தாள்.

அவனோ வெளியேற மறுத்தான். இதயத்தைப் பிடுங்கி எங்காவது வீசியெறிந்து விட முடியாதா என்று ஆங்காரம் கொண்டவளாக படலையைத் திறந்து வளவுக்கு வெளியே வந்தாள்; சிவப்புப் பழமாகி வீழ்ந்துகொண்டிருந்த கதிரவனைப் பார்த்தபடி தன்னுணர்வின்றி நடந்தாள். உடலெங்கும் காமனின் அம்புகள் தைத்து ரணமாகிக் கொண்டிருந்தது.

கால்கள் நடுக்கமுற போய் ஒரு மரத்தில் சாய்ந்துகொண்டாள் விமோசனா.

'சே...அவன் நினைவால் படும் துன்பம் போதாதென்று இந்தப் பொழுது வேறு ஏன் என் மீது இப்படி வஞ்சம் கொண்டு வருத்துகிறது? வராமலே என்னைத் தனிமையில் விட்டு வாட்டுகிறான் அவன். இந்த மாலைப் பொழுதோ நாள் தவறாமல் வந்து என்னை வாட்டுகிறது புண்பட்டு வருந்தும் ஒருவரது மார்புக்கு நேரே கூர்மையான வேலை எறிவார் போல, இந்தப் பொழுதும் நம்மை வதைக்கிறதே!' என்று மனம் நொந்தாள் விமோசனா.

காமம் நெருப்புத் திரவமாக உடலெங்கும் ஊர்ந்தது. மாலைத் தென்றல் உள்ளே கனலும் நெருப்பு உலையை மேலும் விசிறிவிடுவதாக உணர்ந்தவள், திரும்ப வீட்டை நோக்கி நடந்தாள்.

உள்ளே நுழைந்தவளை வீட்டின் தனிமையும் பூதாகரமாய்த் திரண்டு அச்சுறுத்தியது. துணை ஏதுமில்லாத தவிப்பில் கண்ணாடி முன் சென்று தன்னையே பார்த்தாள். அதில் அவளுக்கு அந்நியமாய்த் தெரிந்த வெளிறிய உருவத்தை வெகுநேரம் பார்த்தபடி நின்றாள்.

நெற்றி, கன்னம், உதடுகள், கழுத்து...... என்று ஒவ்வொன்றையும் வினோதமுடன் பார்த்தபடியிருந்தாள். அவன் கடித்த உதடுகள் வெளிறிக் காய்ந்து போயிருந்தன. அவ்வாறே மற்ற மற்ற இடங்களும்...

திரும்பிச் சென்று கதவைப் பூட்டிவிட்டு வந்து ஆடையைக் களைந்தாள். தன் உடலை இகழ்ச்சியோடு நோக்கினாள். 'இப்போது உன்னை அவன் விரும்புவானா?' என்று வெறுப்புடன் கேட்டுக்கொண்டாள்.

கண்ணாடி அருகே சென்று உதடுகளைக் குவித்து ஆங்காரமுடன் 'உவ்ப்' என ஊதினாள். அவள் வெறுப்பு முழுவதும் வெளியேறி கண்ணாடியில் புகையாகப் படிந்தது. ஆவி பரவிப் படிந்த கண்ணாடிப் பரப்பின் மங்கலில் மறைந்த தன் உருவத்தை இகழ்ச்சிப் புன்னகையோடு பார்த்தபடி நின்றாள். சாம்பலாகப் படர்ந்திருந்த ஆவி மெல்ல மெல்ல அழிந்து அவள் உருவம் தோன்றலாயிற்று. துடைத்துவிட்டாற்போல் மறுபடி பளிச்சென்று ஆகிவிட்ட கண்ணாடி அவள் ஆங்கார முகத்தை மீண்டும் காட்டியது. அரித்துப் பரவும் காமத்தை 'வெல்ல முடியாத் துயரில் தலை கவிழ்ந்தாள். மிகப் பலவீனமாகத் தன்னை உணர்ந்தாள். இனியும் தன்னால் இந்த எதிரியை எதிர்த்து உயிர் வாழ முடியாதென்று எண்ணினாள்.



கண்ணாடியில் படிந்த ஆவி மெல்ல மெல்ல அழிந்து இல்லாமல் ஆகியது போன்று தானும் மாய்ந்துவிடப் போவதாகவே அவளுக்குத் தோன்றியது. இந்த உடல் இதற்கு மேல் தாங்காது என்று நினைத்துக் கொண்டாள்.

சூறாவளியால் தாக்கப்பட்ட பறவை தங்கியிருந்த மரத்தை விட்டுப் பறந்து போவது போல. என் உயிரும் உடலை விட்டுப் பறந்து போகும் காலம் வந்துவிட்டது போலும் என்று எண்ணியபடியே தளர்வாய் நகர்ந்து பஞ்சணையில் வீழ்ந்தாள் விமோசனா.

**ஆர்ஆஞர் உறுநர் அருநிறம் சுட்டிக்**
**கூர் எ.'.கு எறிஞரின் அலைத்தல் ஆனாது**
**எள் அற இயற்றிய அழல்காண் மண்டிலத்து**
**உள் ஊது ஆவியின் பைப்பய நுணுகி**
**மதுகை மாய்தல் வேண்டும்**
**பெரிதழிந்து இதுகொல் வாழி தோழி!**
**என் உயிர் விலங்குவெங் கடுவளி**
**எடுப்பத் துளங்குமரப் புள்ளின்**
**துறக்கும் பொழுதே?**
**(அகம் -71:11-18)**

## சிந்தியா பதில்கள்

**வன்முறை எங்கே ஆரம்பிக்கிறது?**
-கோபி பிரியா, வெலிமடை.

முதலில் குடும்பத்துக்குள்ளேயே ஆரம்பித்து விடுகிறது என்றுதான் தெரிகிறது. யூமா வாசுகியின் சமீபத்திய நாவலை வாசித்து ஏற்பட்ட மனதின் பதறல் இரண்டு வாரமாகியும் அடங்க மறுக்கிறது. எவ்வளவு குரூரமும், மற்றவர்களைக் குதறுவதில் திருப்தியடையும் மனங்களையும் கொண்டு நாம் இருக்கிறோம்! தன் குடும்பத்திற்குள்ளேயே பிடிக்காதவர்கள் மீது பாயும் வன்முறை, தன் குழுவைச் சாராதவர்களிடம், தன் மதமல்லாதவர்களிடம், தன் சாதியல்லாதவர்களிடம், தன் தேசமல்லாதவர்களிடம் எந்தத் தயக்கமுமின்றி விஷத்தை உமிழ்ந்த வண்ணமிருக்கிறது. இந்த வன்முறைச் சூழலிலிருந்து மனிதர்களை எந்தத் தத்துவ அறங்களாலும் காப்பாற்ற முடியாது என்னும் ஆற்றாமைக்கே வந்து நிற்கிறோம். யூமா வாசுகியின் நாவலின் பெயர் "இரத்த உறவு."

**மாவீரர் நெப்போலியன் பற்றி அறிவுபூர்வமான கதை ஏதாவது?**
-கு.சத்தியமணி, லபுக்கலை.

மாவீரராய் இருந்தாலும், அவர் மற்றவர்களை வருத்தாத மனிதராக இருந்தாரா என்பதை வைத்துத்தான்.....அவர் 'அறிவோடு' இருந்திருக்கிறார் என்று நம்புவது என் கதை!

**கூடவே படுத்துக் குழிபறிக்கும் நண்பனை எவ்வாறு அழைக்கலாம்?**
-ஏ.எல்.அம்ஜத், பண்டாரவளை.

தற்சமயத்துக்கு "போராளி" என்று.

**சிந்தியா, மடகஸ்கார் நாட்டுக்கு எந்த வருடம், எந்த மாதம், எத்தனையாம் திகதி சுதந்திரம் கிடைத்தது? உடனே பதில் தேவை?**
-கார்த்திக் ரமேஷ், கண்டி.

ரமேஷ்! உங்கள் வகுப்புக்கு என்னை வாத்தியாராக அனுப்பி வைத்திருப்பதாக தவறாக நினைத்துக்கொண்டு என்னைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டாம். பிளீஸ், நான் தாங்க மாட்டேன்!

**நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று தெரிந்து கொண்டும் மீண்டும் அதே செயலிலேயே சிலர் ஈடுபடுகின்றார்களே?**
-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர் - 3ஏ.

தேர்தல் வந்துவிட்டதா என்ன!

**சிந்தியா, ஏன் பணக்காரனுக்கு கல் நெஞ்சையும், ஏழைகளுக்கு இரக்க குணத்தையும் கடவுள் படைத்திருக்கிறான்?**
-தெ.தயாபரன், திருகோணமலை.


அந்த வகையில் கடவுளை யாரும் குறைசொல்ல முடியாது. எல்லோருக்கும் எல்லாமும் கொடுத்துத்தான் இருக்கிறார்!

**7ஜி ரெயின்போ காலனி?**
-பி.கே.வர்ஷினி, கொழும்பு - 13.

செல்வராகவன் தன்னை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். எதிர்காலத்தில் காதலுக்காகக் கையைக் கீறுவது, பாட்டுப்பாடி, சண்டையில் பத்துப் பேரை வீழ்த்தி ஹீரோயிசம் காட்டுவதை எல்லாம் நிறுத்திவிடுவார் என்றே தோன்றுகிறது. கொலனியின் பிரபல பாடகர்கள் 'ராஜாதி ராஜா' பாடுவது, பெண்ணும் தன் விருப்பத்தைச் சொல்வது போன்றன தமிழ் சினிமாவின் வழக்கமான வரையறைகளில் அவர் திருப்தியில்லாதவர் என்பதையே சொல்கின்றன. பார்க்கலாம்!

**உயிருக்குப் பயந்து பொய் சொல்வதில் தப்பில்லை என்கிறான் நண்பன். தப்பு என்கிறேன் நான், நீங்கள்?**
-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

பொய் சொல்லாமல் வாழ முடியவில்லை என்கிறேன்.




**சிங்கள நாளேடுகள் சிங்கள மக்களுக்காகவே எழுதி வருவதுபோல, தமிழ் நாளேடுகளும் தமிழ்த் தரப்பிலிருந்து மட்டுமே எல்லாவற்றையும் எழுதி வருகின்றனவே.....பொதுவான பத்திரிகை தர்மம் என்று ஒன்றுமில்லையா?**
-இரா.குமரேசன், கினலன் எல்ல.

இனவாதமும் ஆக்கிரமிப்பும் சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டுமா என்ன!

**கற்றவர்க்குத் தானே எங்கும் சிறப்பு?**
-பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

உண்மையைச் சொல்லுங்கள். ஆடம்பர உடை அணிந்து பளபளப்பான உடல் தோற்றமுடன் காரில் வந்திறங்குகிறவரைப் பார்த்தால் மரியாதையும், கசங்கிய சட்டையும் கலைந்த தலையுமுடைய யாரைப் பார்த்தாலும் அவமதிப்பும் தோன்றுவதில்லையா? படித்தவரும், அதைப் பயன்படுத்தி எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பதில்தான் மதிப்பு! மற்றதெல்லாம் நாங்களே கூட நம்பாமல் ஒரு ஆறுதலுக்காகச் சொல்லிக்கொள்வதுதான்!

**அன்று முதல் இன்றுவரை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட அத்தனை கண்டுபிடிப்புகளும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் மனிதனின் தற்போதைய நிலைவரம் எப்படி அமைந்திருக்கும்?**
-குமரேசன் செல்வநாயகம், அம்பாறை.

இப்போது போலவேதான்! ஆனால் என்ன, தன் பற்களாலும் நகங்களாலும்தான் சக மனிதனைக் குதறிக்கொண்டிருப்பான்!

சிந்தியா

**மனித வளம் எப்போது பயனற்றதாகப் போகின்றது?**
-மணிவேல் ருத்ரா, மாத்தளை.

தேர்தலில் வாக்களிப்பதற்காக ஆயுதமுனையில் அவர்களை வாகனங்களில் ஏற்றி இறக்கும்போது!

**உங்கள் கண்ணுக்குள்ளும் தெரியும் உருவம் எது?**
-எம்.எம்.மிஹ்லார், குருநாகல்.

கறுப்பு.

**வளர்ப்புப் பிராணிகள் துன்பப்படுவதைக்கூடக் காணப் பொறுக் காமல் கண்ணீர் உகுக்கும் மக்கள், மனிதர் கள் கொல்லப்படுவது குறித்து அலட்சியமாக இருப்பது ஏன்? அரசியல் விரோதிகளாக இருந்தாலும் கொன்று தெருவில் வீசுவதைக் கண்டிக்கலாம் அல்லவா?**
-ஏ.எல்.மொஹமட் நவாஸ், மீராவோடை - 04.

மனிதர்களின் இத்தகைய போலி உணர்வுப் பாவனைகளை உருவியெடுத்து காட்டி விடுகின்றன நல்ல இலக்கியங்கள். ரஷ்ய இலக்கிய மேதை ரோல்ஸ்ரோய் சுயசரிதமாக எழுதிய ஒரு குறிப்பைப் பாருங்கள்:

"என் தாய் மிகவும் இரக்கமும், கருணையும் கொண்டவள் என்று நம்பியிருந்தேன். திரைப்படத்திற்குச் சென்றால் நாலைந்து கைக்குட்டைகள் கண்ணீரால் நனைவதைக் கண்டு மிகுந்த பாவ உணர்வு நிறைந்தவள் என்று எண்ணியிருந்தேன். நாடகத்தில் சோகக் கட்டம் வந்தால் விம்மி விம்மி அழுவதையும் வேலைக்காரி கைக்குட்டை எடுத்துக் கொடுப்பதையும் பார்த்திருக்கிறேன். ஜமீன்தார் வீட்டுப் பெண் உடனே கைக்குட்டை மாற்ற வேண்டும். குறைந்தது ஏழு, எட்டுக் கைக்குட்டைகள் நனையும் ஒவ்வொரு சோகமுடிவு நாடகத்திலும்! அவள் அருகில் அமர்ந்திருக்கும் நான், 'ஆகா! என் தாய் எவ்வளவு இரக்க மனதானவள்!' என்று நினைப்பேன். ஆனால் பெரிவனானபின் கவனித்தேன். வண்டி, தியேட்டருக்கு வெளியே தயாராகப் பூட்டப்பட்டே நிற்க வேண்டும் என்றும், ஆறு குதிரைகளும் வண்டியுடன் எந்த நிமிடமும் கிளம்பத் தயாரான நிலையில் நிற்க வேண்டும்; வண்டிக்காரன் வண்டியைவிட்டு எங்கும் அசையக் கூடாது என்றும் உத்தரவு அளிக்கப்பட்டது. அவள் எந்தக் கணம் தியேட்டரை விட்டு வெளியேற நினைத்து வெளியே வந்தாலும், ஒரு கணம் கூட அவனைத் தேட நேரக் கூடாது. வெளியே பனி கொட்டிக்கொண்டிருக்கும். பல சமயங்களில் அவள் நாடகம் பார்த்து வெளிவருவதற்குள் ஓரிரு வண்டிக்காரன் இறந்து விட்டதும் உண்டு! அவனைத் தெரு ஓரத்தில் எறிந்துவிட்டு வேறு ஆள் உடனே அமர்த்தப்பட்டுவிடும்! அவள் வெளியே வரும்போது, இறந்த வண்டிக்காரனைத் தள்ளுவதையும், புதிய வண்டிக்காரனை அமர்த்துவதையும் சலனமின்றிப் பார்ப்பாள்! இந்தப் பெண், தியேட்டருக்குள், சோகக் கட்டங்களைப் பார்த்து அழுது கொண்டிருந்தவள்!"




1958ஆம் வருடம் மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் ஒருநாள் 21 வயதையுடைய இடது கை துடுப்பாட்டக்காரர் ஒருவர் ஜமேக்காவில் கிங்ஸ்டன் நகரில் அமைந்துள்ள சபீனா பார்க் மைதானத்தை அலங்காரமிக்கதாகத் தோற்றம் பெறச் செய்தவாறு கிரிக்கெட் சாதனையாளர் புத்தகத்தில் ஒரு புதிய சாதனையை எழுத ஆரம்பித்தார். மேற்படி போட்டியானது பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

மேற்படி வீரர் வேறு யாருமல்ல, கிரிக்கெட் வரலாற்றிலேயே தோன்றியுள்ள மிகச் சிறந்த வீரராகப் பிற்காலத்தில் இனங்காணப்பட்ட ஸ்ரீமத் காபீல்ட் சோபர்ஸ் என்பவராகும்.

சோபர்ஸ் விளையாடிய முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இதுவாகும். இவர் அதன்போது முதலாவது இன்னிங்ஸ்ஸில் ஆட்டமிழக்காது 365 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

அன்றைய தினம் இது உலக சாதனையாக இருந்தது. 1938இல் இங்கிலாந்து அணி வீரரான லென் ஹெட்ன் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட 364 ஓட்டங்களை முறியடித்து சோபர்ஸ் சாதனையை நிலைநாட்டினார். அதன் பின்னர் 1993/94ஆம் வருடங்களில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரையன் லாரா இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ஓட்டங்களைப் பெற்று மேற்படி சாதனையை முறியடிக்கும் வரையில் சுமார் 35 வருடங்களாக சோபர்ஸின் சாதனை முறியடிக்கப்படாமலேயே இருந்தது.

பத்து மணித்தியாலங்களுக்கும் சற்று அதிகமான காலத்தைச் செலவிட்டே சோபர்ஸ் இந்த ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். லென ஹெட்ன் 364 ஓட்டங்களைப் பெறுவதற்கு 13 மணித்தியாலங்களைச் செலவிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இப் போட்டியின்போது சோபர்ஸுக்கு உறுதுணையாக ஆடுகளத்தில் நின்று விளையாடிய கொன்ரட் ஹன்ட் 260 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஹண்ட் துரதிர்ஷ்ட வசமாக ஓடும்போது ஆட்டமிழந்தார். இவர் ஆட்டமிழந்தபோது சோபர்ஸுடன் இணைந்து 446 இணை ஓட்டங்களை மேற்கிந்திய தீவுகள் அணிக்குப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத் தக்கதாகும்.



**1884இல் அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர்**
G.J. பொனர்

சோபர்ஸின் இந்த சிறந்த துடுப்பாட்டம் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 790 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 328 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 228 ஓட்டங்களையும் மாத்திரம் பெற்றுக்கொண்டது.

இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 174 ஓட்டங்களால் இப் போட்டியில் வெற்றி ஈட்டிக்கொண்டது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் வரலாற்றிலேயே சிறந்த சகல துறை ஆட்டக்காரர் என விமர்சகர்களால் குறிப்பிட்டுக் கூறப்படும் ஸ்ரீமத் காபீல்ட் சோபர்ஸ், 93 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டு 26 சதங்களுடன் 8,032 (சராசரி 57.78) ஓட்டங்களையும் 235 விக்கெட்டுகளையும் (சராசரி 34.03) பெற்றுக் கொண்டுள்ளார். 1936ஆம் வருடம் ஜுலை மாதம் 28ஆம் திகதி பார்படோஸ் பிரிக்டவுன் நகரில் இவர் பிறந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஏதெனும் ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஒன்றின்போது, இரண்டு அணிகளின் நான்கு இன்னிங்ஸ்களினதும் ஓட்ட எண்ணிக்கையானது சமமானதாகி, சமமான ஓட்ட எண்ணிக்கை நிலைமைகளில் (Tied) போட்டிகள் முடிவுறும் சந்தர்ப்பங்களை கிரிக்கெட் வரலாற்றிலேயே மிக அபூர்வமாகத்தான் காண இயலும். முழு கிரிக்கெட் வரலாற்றையும் ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வாறான சம்பவங்கள் ஒன்றிரண்டே இடம்பெற்றுள்ளன.

உலக கிரிக்கெட் வரலாற்றிலேயே இது போன்றதொரு நிகழ்வு முதன்முறையாக 1960ஆம் வருடம் இடம்பெற்றுள்ளது. அதாவது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆரம்பித்து 83 வருடங்களுக்குப் பின்னராகும். அதாவது -500 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் நடந்து முடிந்த நிலையில், இந் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

# நாட்டுக்கோட்டை நகரத்தார், புதிய கதிரேசன் கோவில் பம்பலப்பிட்டி

**முருகப் பெருமான் அடியார்களே!**

கலியுக தெய்வமாம் கந்தனின் விரதங்களில் உன்னதமானது கந்தசஷ்டி விரதமாகும். ஐப்பசி மாத வளர்பிறை பிரதம தொடங்கி சஷ்டிவரை தினமும் விரதம் இருந்து அடுத்த நாள் பாரணை பண்ணுதல் வேண்டும். உபயகதிர்காமம் என்று அழைக்கப்படும் கொழும்பு, பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் ஆலயத்தில் கீழ்க் குறிப்பிட்டவாறு பூஜைகள் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

**13.11.2004 சனிக்கிழமை**
**தொடக்கம் 16.11.2004**
**செவ்வாய்கிழமை வரை**

தினமும் காலை 6.30 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட நவகலச அபிஷேகமும் 7.35 மணிக்கு பூஜையும் 8.30க்கு கந்தபுராண யுத்தகாண்டப் படிப்பும் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு அபிஷேகமும் 6.00 மணிக்கு பூஜையும் நடைபெறும்.

**13.11.2004, 14.11.2004 தினங்களில் முருகப் பெருமானுக்கு பகல் 11.00 மணிக்கு**



**விசேட நவகலச அபிஷேகம் நடைபெறும்.**

**17.11.2004 புதன்**

காலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலிருந்து பால்குடப்பவனி புறப்பட்டு 7.00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். காலை 9.00 மணிக்கு சூரன் புறப்பாடு நடைபெறும். மாலை 4.45 மணிக்கு சூரசம்காரம் நடைபெற்று 6.15க்கு பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

**18.11.2004 வியாழக்கிழமை**

காலை 7.30க்கு பாரணைப் பூஜையும் 10.30 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் நடைபெறும். மாலை 6.00 மணிக்கு தெய்வானை திருமணத்தைத் தொடர்ந்து திருவிழாவும் நடைபெறும்.

**19.11.2004 வெள்ளி**

மாலை 4.30 மணிக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்து வள்ளி திருமணம் நடைபெறும்

**20.11.2004 சனி**

மாலை 4.30 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து திருஊஞ்சலும் நடைபெறும்.

விரதசங்கற்பம் செய்வோர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அபிஷேகத்திற்கு வேண்டிய பால், தயிர், இளநீர், பழவகை போன்ற திரவியங்களைக் கொடுத்து முருகப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
நாட்டுக்கோட்டை நகரத்தார்.

# பணப் பரிசுப் போட்டி

நீண்ட நாட்களாகவே பரிசு தரும் எண்ணத்தோடு பல வகையான போட்டிகள் குறித்து சிந்தித்தோம். இறுதியாக மாறுபட்ட விதத்தில் புதுமையான போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இப் போட்டியானது,அற்புதனின் 5ஆம் ஆண்டு நினைவையும் "முரசு" வெற்றிகரமாக 11ஆவது ஆண்டில் காலடி வைப்பதையும் வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளும் எண்ணமே ஆகும். கீழே தரப்பட்டிருக்கும் கேள்விகளுக்கான விடைகள் நீண்டகால வாசகருக்கு இலகுவானதாக இருக்கும். புதிய வாசகர்கள் தேடல்கள் மூலம் விடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். விடைகளை எழுதி அனுப்புவோர் கட்டாயமாக முரசில் பிரசுரமாகியிருக்கும் **கேள்விப்பத்திரத்தை** இணைத்தே விடைகளை எமக்கு அனுப்ப வேண்டும். இல்லாதவிடத்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்ப முடியும். உங்கள் விடைகள் வந்து சேர **வேண்டிய கடைசித் திகதி டிசம்பர் 15 ஆகும்.** தெரிவுக் குழுவின் தீர்மானமே இறுதியானது.

## பரிசு விபரம்

**1 ஆம் பரிசு :- 5,000/=**
**2 ஆம் பரிசு :- 2,500/=**
**3 ஆம் பரிசு :- 1,500/=**

**கேள்விகள் :-**

01. தினமுரசின் ஸ்தாபக ஆசிரியர் யார்? அவரின் இயற்பெயர் என்ன?
..........................................................................................

02. அற்புதனின் பிறப்பு - இறப்பு திகதிகள் யாவை?
..........................................................................................

03. 100ஆவது முரசு எந்தத் திகதியில் வெளியானது?
..........................................................................................

04. அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை என்ற அற்புதனின் வரலாற்றுத் தொடர் எத்தனையாவது முரசில் ஆரம்பிக்கப்பட்டது?
..........................................................................................

05. தினமுரசின் நீண்டநாள் விளம்பரதாரர் யார்?
..........................................................................................

06. இலங்கை - இந்திய ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு எந்தத் திகதியில் கைச்சாத்தானது?
..........................................................................................

07. 1983ஆம் ஆண்டு ஜுலைக் குழப்பத்தில் எத்தனை தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது?
..........................................................................................

08. 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் எம்.பி.க்கள் எத்தனை பேர்? தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் எம்.பி.க்கள் எத்தனை பேர்?
..........................................................................................

09. இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுக்குப் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டு? யாரின் ஆட்சிக் காலத்தில்?
..........................................................................................

10. ஐ.நா. சபையில் மொத்தம் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?
..........................................................................................

11. அமெரிக்காவின் வர்த்தக மைய கட்டடம் விமான மூலம் தாக்கப்பட்டது எப்போது ஆண்டு- மாதம் - திகதி ?
..........................................................................................

12. உலக அதிசயங்கள் எத்தனை? அவற்றின் பெயர்கள் என்ன?
..........................................................................................

13. 2ஆம் உலகப் போரின்போது அமெரிக்காவால் ஜப்பான் மீது வீசப்பட்ட முதலாவது அணுகுண்டின் பெயர் என்ன?
..........................................................................................

14. இவ்வாண்டு கொலம்பியா விண்கலம் வானிலே வெடித்துச் சிதறியது. அதில் எத்தனை பேர் இறந்தனர்? அதில் இறந்த இந்தியப் பெண்ணின் பெயர் என்ன?
..........................................................................................

15. இலங்கைக் கிரிக்கெட் அணி எத்தனையாம் ஆண்டு உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்தது? கிண்ணத்தின் பெயர் என்ன?
..........................................................................................

16. அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளன? எத்தனையாம் ஆண்டு?
..........................................................................................

17. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு செவாலியர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்த நாடு எது?
..........................................................................................

18. இவ்வாண்டில் நடிகர் விக்ரம் பிதாமகன் படத்துக்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றார். இதே விருதை நடிகர் கமல்ஹாசன் எத்தனை தடவை பெற்றுள்ளார். எந்தெந்தப் படங்களுக்காக?
..........................................................................................

19. அஜித் - விஜய் இணைந்து நடித்த படத்தின் பெயர் என்ன?
..........................................................................................

20. காசி திரைப்படம் இலங்கையில் சிங்கள மொழியில் தயாரிக்கப்படுகிறது. அத் திரைப்படத்தின் பெயர் என்ன?
..........................................................................................

திகதி                    விண்ணப்பதாரியின் கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:-

**பணப் பரிசுப் போட்டி,**
**தபால் பெட்டி இல. 1772, கொழும்பு.**

# தாமஸ் எடிசன் (1847 - 1931)

அவர் மூலம் மூன்று குழந்தைகள் பிறந்தன. இவர் மறுமணம் செய்துகொண்டார். இரண்டாம் மனைவிக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தன. நியூஜெர்சி மாநிலத்தில் வெஸ்ட் ஆரஞ்சு என்னுமிடத்தில் 1931ஆம் ஆண்டில் எடிசன் காலமானார்.

எடிசனின் திறமை குறித்து எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடமேயில்லை. உலகில் முன்பு எப்போதும் தோன்றியிராத மாபெரும் புத்தமைப்பாச்-




மேதை அவர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள் கின்றனர். அவரது கண்டுபிடிப்புகளில் பெரும்பாலானவை மற்றவர்களால் 30 ஆண்டுகளுக்குள்ளாகவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடும் என்றபோதிலும், அவர் கண்டு பிடித்த பயனுள்ள கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை உண்மையிலேயே மலைப்பூட்டுகிறது. எனினும், அவருடைய கண்டுபிடிப்புகளைத் தனித்தனியாக நோக்கும்போது அவற்றுள் எதுவும் உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றாது. உதாரணமாக வெண்சுடர் ஒளிவீசி எரிகிற விளக்குக் குமிழ் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும், நவீன வாழ்வில் ஈடுசெய்ய முடியாததாக இல்லை. உண்மையைக் கூறின், முற்றிலும் வேறுபட்ட அறிவியல் தத்துவத்தின் அடிப்படையில் செயற்படும் உமிழொளி விளக்குக் குமிழ்கள் (Flouresent Light Bulbs) இன்று மிக அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வெண்சுடர் ஒளிவீசும் விளக்குக் குமிழ் இல்லாது போனால்கூட நாம் பாதிக்கப்பட போவதில்லை. மின் விளக்குள் பயனுக்கு வராதிருந்த காலத்திலுங்கூட, மெழுகுவர்த்திகளும், எண்ணெய் விளக்குகளும், ஆவி விளக்குகளும் பொதுவாக மன நிறைவளிக்கத்தக்க ஒளி ஆதாரங் களாகக் கருதப்பட்டு வந்தன.

ஒலிப்பதிவு இசைப்பெட்டி ஒரு புதுமையான சாதனம் என்பது உண்மையே. எனினும், அது வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியவற்றைப் போன்று நமது அன்றாட வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூற முடியாது. மேலும், அண்மை ஆண்டுகளில் ஒலியைப் பதிவு செய்வதற்காகக் காந்த நாடா ஒலிப்பதிவுக் கருவி (Magnetic Tape Recorder) போன்ற முற்றிலும் வேறுபட்ட முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று ஒலிப்பதிவு இசைப் பெட்டியோ இசைத்தட்டு இயக்கு கருவியோ (Record Player) இல்லாவிட்டாலுங்கூட, ஒரு வேறுபாடும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. எடிசன் பெற்ற புத்தாக்க உரிமைகளில் பல, மற்றவர்கள் ஏற்கனவே கண்டு பிடித்துப் பயன்படுத்தப்பட்டு வந்த கருவிகளில் சீர்திருத்தங்கள் செய்து பெற்றவையானும். இத்தகைய சீர்திருத்தங்கள் உதவியாக இருந்தபோதிலும், வரலாற்றில் புரட்சிகரமான மாறுதல் உண்டாக்கும் அளவுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல.

ஆனால், எடிசனின் கண்டுபிடிப்புகளில் எந்த ஒரு தனிக் கண்டுபிடிப்பும் அளப்பரிய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்க வில்லையென்ற போதிலும், அவர் ஒரேயொரு கண்டுபிடிப்பை மட்டும் செய்ததுடன் நின்றுவிடாமல், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைச் செய்தார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தக் காரணத்திற்காகவே குக்ளியல்மோ மார்கோனி, அலெக்சாண்டர் கிரகாம் பெல் போன்ற புகழ் பெற்ற புத்தமைப்பாளர்களுக்கு முன்னதாக எடிசனுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் சேர் ஐசாக் நியூட்டன்

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!.....நிண்டுபோன சமாதான முயற்சிகள் எண்ட இன்ஜினுக்கு தண்ணி வாத்து எண்ணை சரி பாக்கினம் போல கிடக்கு. வண்டி ஓடுமோ எண்டு சொந்தக்காறன் அக்கறைப்படாம இருக்கேக்க அயலட்டையில இருந்து வந்து ரிப்பேர் பாக்கினம். ம்...யார் பாத்தா என்ன, வண்டி ஸ்டார்ட்டாகி பயணத்தைத் தொடர்ந்தாச் சரிதான்.

அரசாங்கத் தரப்பில என்னதான் தயாரிப்பு களைச் செய்தாலும் அதெல்லாம் மாற்றங்களை ஏற்படுத்துமெண்டு நம்பேலாது. இப்போதைக்கு புலிகள் என்ன முடிவுகளை எடுக்கப் போகினம் எண்டதுதான் யோசிக்க வைக்குது. புலிகள் தாங்கள் சமர்ப்பிச்ச வரைவைப்பற்றிப் பேசாத வரைக்கும் பேச்சுக்கே இடமில்லை எண்டிச்சினம். அவையின்ர யோசினனை முன்வைச்சுப் பேசினா அரசை விட்டே வெளியேறுவம் எண்டிச்சினம், அரசோட பங்காளியா இருக்கிற சிவப்புச் சட்டைக்காறர். இப்ப இந்தியாவால வந்த ஜனாதிபதி ஒரு மாதிரியா, சரி புலிகளின்ர யோசினையை வச்சுக்கொண்டே பேசுவம் எண்டு பச்சைக் கொடியைக் காட்டியிருக்கிறா, இதென்ன திடீர் மாற்றமெண்டு இப்ப கடைசியாக் கிடைச்ச தகவல்களைப் பார்க்கேக்க, அமைச்சர் கதிர்காமர் இந்தியாவில இருந்து வந்ததும் வராததுமாக சிகப்புக் கொடிக் காறரிட்டை ஓடிப் போயிருக்கிறார். அவரும் சிகப்புக் கொடிக்காறற்ர பாணியில இடைக்கால யோசனையை எதிர்த்தவர்தான். இப்ப அவரே சமரசத்துக்குப் போயிருக்கிறாரெண்டால், அயலகத்தில் ஏதோ மந்திர ஆலோசனை நடந்திருக்கெண்ட மாதிரித்தான்படுகுது. ஜனாதிபதி இந்தியாவோட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளப்போறா எண்டு தான் எல்லாரும் எதிர்பார்த்திச்சினம், அதுக்கிடையில ஜப்பானில இருந்து வந்த அகாசி வன்னிக்குப் போனாரெல்லோ, அவரிட்ட புலியள் பலமா இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி அதிருப்திப்பட்டி ருக்கினம். இந்த ஒப்பந்தத்தால எங்கட இராணுவ சமநிலை பாதிக்கப்படும்; இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானா ஜென்மத்துக்கும் பேச வரமாட்டம் எண்டு பிடிவாதம் காட்டிச்சினமாம்.

அதை விழுங்கிக்கொண்டு இந்தியாவுக்கு ஓடின அகாசி அங்க போய் இதுகளத் துப்பியிருக் கிறார். அதோடயே கொஞ்சம் கால அவகாசமும் தேவையெண்டு சொறிஞ்சிருக்கிறார்.

'சரி, ஜப்பானில இருந்து வந்து கெஞ்சிறியள். அதுக்காகவெண்டாலும் ஒப்பந்தத்தைப் பின்போடுறம், ஆனா, அவை பேச்சுக்கு வர வேணும்' எண்டு ஆறுதல்படுத்தியிருக்கினம்.

இந்தியாவின்ர ஆறுதலை விடவும் வன்னியில் போட்ட இன்னொரு குண்டு அகாசியை ரொம்ப நோகப்பண்ணிப்போட்டுதாம். அதென்னெண்டு யோசிப்பியள். அதையும் நானே சொல்லிறன்.

இலங்கையின்ர இனப் பிரச்சினைத் தீர்வுகளை வெளிச் சக்திகள் தீர்மானிக்கவும் முடியாது; எதையும் திணிக்கவும் முடியாது. உதவி வழங்கினம் எண்டதுக்காக கண்டதிலையும் மூக்கை நுழைக்கி றதை அனுமதிக்க ஏலாதெண்டு முகத்தில அடிக்குமாப்போல சொல்லிச்சினமாம். இராசதந்திர ரீதியாச் சந்திக்கேக்க உப்பிடி முகஞ் சுளிக்கிற மாதிரிப் பேசக் கூடாதெண்டதை அவயள் இன்னும் புரிஞ்சுகொள்ளயில்லையாக்கும். அரசாங் கத்துக்குச் சமமான அந்தஸ்தைக் கொடுத்துப் பீத்தினவையளுக்கு நல்லா அப்பிவிட்டினம் எண்டு தூதரகத்தில் இருந்து போன மற்றவயள் கொடுப்புக்குள்ள சிரிச்சவயாம்.

புலியளின்ர தலைவருக்கு 50ஆவது பிறந்த தினம் வருகுதெல்லோ! அதைப் பற்றிய ஏற்பாடுகள்தான் இப்ப வன்னியில பரபரப்பான செய்தியாம். அதுக்கிடையில உந்த நோர்வேக் காறர் சந்திக்க வேணுமெண்டு கட்டாயப்படுத் தினதால "சரி வரட்டும் எண்டு" சொன்னவையளாம், எப்பவுமே தலைவருக்குப் பக்கத்தில இருக்கமுடியாது. இந்தச் சாட்டிலையெண்டாலும் ஒருக்காப் போயிட்டு வருவம் எண்டு பாலாண்ணை குடும்பத்தோட வந்திருக்கிறார். அவரிட்ட என்னங்கோ விஷயம் எண்டு கேக்க எவ்வளவோ ரை பண்ணினன். ஆள் தொடர்பில வர்றாரில்லை. பதுங்கிறதப் பாத்தால் விசேடமான செய்தி எதுவும் அவரிட்டை இல்லையென்டுதான் எண்ணத் தோணுது. ஏதும் இருந்தால் ஏயார் போட்டில் இறங்கேக்கையே பதறியிருப்பார். பிறந்த நாளுக்கு விருந்தாளியா வந்திருக்கிறார் எண்டதை விட வேற ஒண்டும் நடக்கப்போறதில்லை.

என்னடா பிரேக் போட்டு நிப்பாட்டின சமாதானப் பேச்சுக்கள் திரும்பவும் ஆரம்பிக்கப் போகுதெண்டு லேசா சந்தோசப்படேக்க, காதில பூ அபசகுனமாப் பேசுறானெண்டு யோசிக்காத யுங்கோ. கடுமையா நம்பிக்கை வச்சு வச்சு நல்லா ஏமாந்து போனதாலதான் இப்பவும் சந்தேகமாக் கிடக்கு. ஆனை, பூனையெண்டு யோசிக்கிறதை விடவும், யதார்த்தமா யோசிக்கிறது நல்ல தெல்லோ. பெரிசா எதிர்பார்த்து 'புஸ்' எண்டு போனா சங்கடந்தானே. அதால சின்னனா எதிர் பாத்து பெரிசாக் கிடைச்சால் சந்தோசமெல்லோ.....

ஆக, பேச்சு நடக்கப் போகுதெண்டு எதிர்பாக்கயுக்க விடாப்பிடியா நிக்கிறாங்கள் எண்டு அவரவர் மண்ணைத் தட்டிப்போட்டு போயிடுவினம். தற்சமயத்துக்கு நடந்துகொண்டிருக்கிற முன்னெடுப்புகளைப் பாக்கேக்க வானிலை அறிக்கை வாசிக்குமாப் போலத்தான் இருக்கு.

பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் நடக்கலாம்
நடக்காமலும் விடலாம்.
சின்னச் சின்ன முன்னேற்றங்கள்
ஆங்காங்கே இடம்பெறவும் கூடும்.
பரவலாக அழுத்த மேகம் சூழ்ந்திருக்கு.
இணக்கப்பாடு இல்லையென்றால்
இலேசான சூறாவளியும் தலைகாட்டலாம்.

எதுக்கும் எச்சரிக்கையாக குடையைப் படலையில சொருகி வையுங்கோ. அட காதில பூ நல்லாத்தானே பேசிறான் எண்டு தேடப் போறாங்கள். ஓ.கே.பாய்..........

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

(18.11.2004 தொடங்கி 24.11.2004 வரை)


## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை


விருச்சிகம்- சூரியன், புதன், மேடம் - இராகு, கர்க்கடகம் - சனி, கன்னி - வியாழன், துலாம் - வெள்ளி, செவ்வாய், கேது
சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை உயர்ச்சி, பெரியோர் நட்பு, காரியானுகூலம், மனக் குறை நீங்கும், அன்னியரால் தொல்லை, குடும்பக் கலகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் முதலீடு இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07




**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, வீண் பிரயாணம், தேக சுகம் பாதிப்பு, குடும்ப சுகம், உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04




**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மேன்மை, உயர்ந்த எண்ணம், வெளியிடப் பயணம், அன்னியரால் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06




**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, பெரியோர் உதவி, அன்னியரால் கஷ்டம், வீண் பிரயாணம், பொருள் இழப்பு, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02




**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கலக்கம், அன்னியர் உதவி, கடன் பயம், வீண் முயற்சி, காரியத் தடை, குடும்ப நன்மை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி, இனசன மகிழ்ச்சி, பணக் கஷ்டம், உத்தியோக நன்மை, பெரியோர் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03




**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மாற்றம், புதிய தொழில் முயற்சி, பண விரயம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04




**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் நிலை கஷ்டம், வீண் குறை கேட்டல், பாரிய செலவு, அன்னியர் நட்பு, குடும்பத் தகராறு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்
**அதிர்ஷ்ட இலக்கம் :-** 01




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பண வரவு, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் கஷ்டம், பண விரயம், கடன்படல், இனசனம் உதவி, உத்தியோக நன்மை, கௌரவம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மாற்றம், பெரியோர் உதவி, கடின உழைப்பு, பண வரவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07



**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் சிறப்பு, பண வரவு, அன்னியர் நட்பு, துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கலகம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

# அரபாத்




பாலஸ்தீன மக்களின் விடிவுக்காக - விடுதலைக்காக விட்டுக்கொடுக்காமல் போராடிய மாபெரும் தலைவர் யஸீர் அரபாத்தின் மறைவு, உலகம் முழுவதையும் சோகத்தில் ஆழ்த்தியது. அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக - தேசத்தின் மீட்புக்காக ஆயுதமேந்தியும் ஆயுதமேந்தாமலும் தந்திரோபாய ரீதியிலும் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர். ஹிட்லரென்ற நாஸி வெறியனின் கொடூர நுகத் தடியில் சிக்கித் தவித்த யூத இன மக்களின் துன்பியல் வாழ்வையும் வரலாற்றையும் பயன்படுத்திய அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் அரசுகள், மற்றொரு சோக அத்தியாயத்தைப் பாலஸ்தீன மண்ணில் ஆரம்பித்து வைத்தன. இவை பாலஸ்தீன மக்களின் தாயக மண்ணை அபகரித்து இஸ்ரேலை உருவாக்கி, இஸ்ரேலிய சியோனிஸ்டுகளின் வேட்டைக் காடாக பாலஸ்தீனத்தை ஆக்கி வைத்தன. ஆயுதங்களல்ல தீர்க்கமான சக்தி மக்கள். மக்கள் மட்டுமே தீர்க்கமான சக்தி யென்ற கோட்பாட்டோடு பல பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் அணி திரட்டி ஐக்கியப்படுத்தி எதிரிக் கெதிரான போராட்டத்தை வெற்றிகரமாக வழி நடத்திய வரலாற்று நாயகனுக்கு சிரம் தாழ்த்திய வீர வணக்கங்கள் உரித்தாகட்டும்.




# நம்மவர்கள்

கடந்த நவராத்திரியை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு சார்பாக நடாத்தப்பட்ட கலைவிழாவில் பரத நாட்டிய நிகழ்ச்சியினை வழங்கிய மாணவிகள் கிறிஸ்டினா, நிஷாந்தினி ஆகியோரையும் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியை சூரியகலாவையும் காணலாம். இந்தியக் கலைஞர்களுக்கு ஈடுகொடுத்து அம் மாணவிகள் பரதநாட்டிய அசைவுகளை வெளிக்காட்டியமையைப் பார்த்தபோது அது நம்மவர்களா? என்று ஆச்சரியப்பட வைத்தது. நம்மவர்கள் இப்போது வர வர முன்னேற்றம்தான்......

# பார்க்க ரசிக்க



# பணம் பணம்




அமெரிக்காவைச் சேர்ந்த நடிகை கெமரன் டயஸ் 2001ஆம் ஆண்டில் உலகத்திலேயே மிகச் கூடிய வருமானத்தைப் பெற்றவர். 2002ஆம் ஆண்டில் வெளியிட்ட "போர்பஸ் செலிபிரிட்டி 100" என்ற பட்டியலின்படி இவரது 2001ஆம் ஆண்டிற்கான வருமானம் என்ன தெரியுமா? 40 இலட்சம் டொலர்கள். அதாவது 26.7 இலட்சம் ஸ்டேர்லிங் பவுண்கள். ஆச்சரியமாக இருக்கிறதா? நடிகையென்றால் சும்மாவா?

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

வல்வெட்டித்துறை, சமரபாகு அன்னை இல்லத்தைப் பிறப்பிடமாகவும் - சுவிற்ஸர்லாந்து சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜன் - அஜந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் வனோஜ் தனது முதலாவது பிறந்தநாளை 20.11.2004 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா - அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மார், சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், பாட்டிமார், பாட்டன்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல அம்பாள் அருளால் பல செல்வங்களும் பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
இளங்கோ,
'அன்னை இல்லம்', சமரபாகு,
வல்வெட்டித்துறை.



செல்வன் வனோஜ்

20.11.2004

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி மதுஜா / 17.11.2004

கந்தர்மடம் ஆத்திசூடியைச் சேர்ந்த அமுதரூபன் - றொபேக்கா தம்பதிகளின் செல்வப் புதல்வி மதுஜா தனது முதலாவது பிறந்தநாளை 17.11.2004 அன்று தங்கள் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரது அன்பு அப்பா - அம்மா, அம்மம்மா நாகேஸ்வரி, அப்பம்மா - பூமணி, மாமாமார்களான முரளி (U.K), பாபு (பிரான்ஸ்), விது (கொழும்பு), பெரியப்பாமார்களான - பாலேந்திரன், சிறிதரன், பெரியம்மாமார்களான செல்வராணி, வக்சலா, மாமா குணசீலன், அத்தை சுகந்தி (கனடா), சித்தப்பாமார் உமாகாந்தன், பிரதீபன், அக்கா குயின்சி,தனு, தர்மிகா, அண்ணாமார் கீத், கிசோ, மச்சாள்மார் நிசாந்தி, அனுசா மற்றும் பூட்டன் - பூட்டி, அம்மம்மாமார், அப்பப்பாமார், அன்ரிமார், மாமாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மதுஜாவை கர்த்தரின் கிருபை பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
அம்மம்மா (கொழும்பு).

